84

பூதான வெள்ளம்



REGISTRAR
OCT 1956
MADRAS

பூதான வெள்ளம்

84
4-56

U0057

மனமோகன சௌத்ரி

சர்வோதயப் பிரசுராலயம்
(அகில பாரத சர்வ சேவா சங்கம்)
தஞ்சாவூர்

CC-TINAL
00325

முதற் பதிப்பு—செப். '56—5000

YZM95
N56

110057

தமிழாக்கம் :
பிரபாகரன்

விலை அணா 8

श्री मनमोहन चौधरी से लिखित
"भूमि-क्रान्ति की महानदी" का
तमिल रूपान्तर
अनुवादक—श्री प्रभाकर

...ks, Madras (3334)

பூதான வெள்ளம்

I

நிலமனைத்தும் ஆண்டவனுக்குச் சொந்தம்

1952 மே, 23-ம் தேதி; உத்தரப்பிரதேசத்தில் ஹமிர் பூர் ஜில்லாவில் டகோர் முகாமிலிருந்து யாத்திரை தொடர்ந்தார் விநோபாஜி. யாத்திரையின் இடையில் காலை உணவுக்காக காட்டில் முடிவடையும் ஒரு பாதை யின் ஓரத்தில் கோஷ்டியினர் தங்கினர். கோஷ்டி யினரை வரவேற்க அவ்விடம் கூடியிருந்த கிராம மக்க ளுடன் சேர்ந்து விநோபாஜி காலை உணவு அருந்தினர்.

அவ்விடத்திலிருந்து சுமார் இரண்டு மைல்கள் அப்பாலிருந்த 'மங்கரோட்' என்ற கிராமத்திலிருந்து வந்திருந்தனர் அம் மக்கள். அவர்கள் தங்கள் உடைமை களில் 101 ஏக்கர்கள் தானமாக அடிகளிடம் அர்ப்பணிக்க வந்திருந்தனர். அதை ஏற்றுக் கொண்டு விநோபாஜி பேசுகையில், "ஸபை பூமி கோபால் கீ—நிலமனைத்தும் ஆண்டவனுக்குச் சொந்தம்" என்ற புதிய கருத்தை வெளியிட்டார். அப்படியிருக்க தனிஉடைமையை ஒழித்து ஆண்டவனுக்குச் சொந்தமான நிலங்களை ஆண்டவனிடமே ஏன் ஒப்படைக்கக் கூடாது?

அனுதினமும் காலை-மாலை வேளைகளில் விநோபாஜி யைப் பார்ப்பதற்கும் அவர் உரையைக் கேட்பதற்கும் ஆயிரக் கணக்கில் கூடும் கிராம மக்களிடையே மங்க ரோட் கிராமவாசிகளை தனியாகக் கண்டுபிடிக்க எவ் வித அடையாளமும் இல்லை. உத்தரப் பிரதேசத்தில்

உள்ள பல சின்னஞ்சிறு கிராமங்களைப்போல் நூற்று ஆறு குடும்பங்களைத் தன்னகத்தே கொண்ட ஒரு குக் கிராமம் மங்கரோட். ஆனல் இக்கிராமத்திற்கு ஒரு வித்தியாசம் இருக்கிறது. சரித்திரத்தை சிருஷ்டித்த கிராமம் அது. விநோபாஜியின் நெடுநாளைய கனவை—கிராம தானத்தை—நனவாக்கிய கிராமம் மங்கரோட்.

மங்கரோட் கிராமத்தின் ஜமீந்தார் திவான் சத்துருக்ன சிங் என்பவர் தம் வாலிபத்தில் ஹிம்சைப் புரட்சியில் பற்றுக் கொண்டிருந்தவர். ஆயுதச் சண்டையில் வெள்ளையனை வெளியேற்றப் போவதாக அவர் கனவு கண்டு கொண்டிருந்தார். புரட்சிக்காரர்களின் மாபெரும் பாசறையாக விளங்கியது மங்கரோட். பாரத நாட்டின் தனிப்பெருந் தலைவராக அண்ணல் காந்தியடிகள் தோன்றிய பொழுது திவான் சாகேப் அவர்களின் கொள்கை மாறுதலடைந்தது. 'சத்தியாக்கிரக' வழியை அவர் ஏற்றுக் கொண்டார். அவர் தலைமையில் மங்கரோட்டின் வாலிபர்கள் சுதந்திரப் போராட்டத்தில் தளராது உழைத்தனர்.

மங்கரோட் மக்கள் தியாகத்திலும் பராக்கிரமத்திலும் வாழ்ந்தவர்கள். விநோபாவின் குரல் அவர்களுள் உறக்கமுற்றிருந்த பழைய உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பியது. சிந்தித்தனர்; பகல் முழுதும் தியாக உணர்ச்சியின் வெளிச்சத்திலே சிந்தனை செய்தனர். மனப் போராட்டத்திற்கோர் முடிவுகட்ட இட்டோலியா என்ற விடத்தில் மாலையில் கூடிய பிரார்த்தனைக் கூட்டத்தில் பங்கு கொண்ட பின்பு, மங்கரோட் மக்கள் ஒரு மாநாடு கூட்டினர். இரவு பதினொன்று மணிக்குக் கூடிய இந்தக் கூட்டத்தில் திவான் சாகேப் அவர்கள் கருத்துக்களை மக்களுக்கு விளக்கிக் கூறினர். "நாங்கள் நிலமனைத்தும் கொடுத்துவிட்டால் வாழ வேறு என்ன வழியிருக்கிறது?" என்று சிலர் சந்தேகப்பட்டனர். "நாம் கோயிலில் கடவுளுக்கு நைவேத்தியம் படைத்துப்

பூஜை செய்கிறோம். பூஜை முடிந்த பின்பு பிரசாதத்தைப் பகிர்ந்து எல்லோருமாக உண்ணுகிறோம். நாம் படைக்கும் உணவினை தேவதை உண்பதில்லை,'' என்று உதாரணமாகக் கூறினார் திவான் சாகேப்.

மக்கள் புரிந்துகொண்டனர்; எல்லோரும் தங்கள் உடைமைகளைத் தானமாகக் கொடுக்க முன் வந்தனர். முதன் முதலில் திவான் சாகேப் அவர்கள் தான பத்திரம் எழுதிக் கொடுத்தார். தொடர்ந்து மங்கரோட் கிராமத்தின் நிலமுடைய—ஒரு நபரைத் தவிர—எல்லோரும் தங்கள் தான பத்திரங்களை வினோபாஜியிடம் கொடுத்தனர். இந்நிகழ்ச்சி பாரதத்தின் கணக்கற்ற கிராமங்களிடையேயிருந்து வேருக மங்கரோட்டை உலகத்திற்கு எடுத்துக் காட்டியது. உலக சரித்திரத்திலேயே முதல் முறையாக ஒரு கிராமத்து மக்கள் தாங்களாகவே அன்பு வழியில் தங்கள் உடைமைகளைப் பொதுவுடைமையாக்கினர்.

பூமிதான இயக்கம் ஆரம்பமான நாட்களில் தெலிங்கானவில் ''காற்றும் தண்ணீரும் அனைவருக்கும் பொதுவானது போல் நிலத்திலும் அனைவருக்கும் உரிமை இருக்க வேண்டும்'' என்று தெளிவாகக் கோஷமிட்டார் வினோபாஜி. ''பூமியை நாம் தாயாக ஏற்றுக் கொண்டுள்ளோம். நாம் அவள் புத்திரர்கள். அப்படியிருக்க அவளுக்கு எஜமானனாக நாம் எப்படி விரும்ப முடியும்?'' என்று விளக்கினார் வினோபா. இந்த உண்மை உருப்பெற்றது மங்கரோட்டில்.

கிராமதானம் கொடுக்கப்பட்ட பின்பு மங்கரோட்டில் புனர் நிர்மாண வேலைகள் உடனடியாக ஆரம்பிக்க முடியவில்லை; ஒரு வருஷம் சென்றது அவ்வேலைகள் துவங்க. இதற்கிடையே அக்கம்பக்கத்திலுள்ள கிராமங்கள் மங்கரோட்டை விரோதியாக பாவித்து நடத்தி வந்ததன் பலனாக மங்கரோட் மக்களிடையே பீதியும் சஞ்சலமும் ஏற்படும் போலிருந்தது. ஆனால் அவற்றை

யெல்லாம் சமாளித்து நம்பிக்கையுடன் அவர்கள் முன் னேறினார்கள்.

மங்கரோட்டின் நில வினியோகம் ஒரு பிரச்சனையாக இருந்தது. ரஷ்யாவிலும் வேறு பலவிடங்களிலும் அமைக் கப்பெற்றுள்ளதுபோல் (Co-operative farming) கூட் டுறவு பயிர்த் தொழிலால் நிலம் கிராமத்திற்குப் பொது வாகச் செய்யப்பட்டு கிராமத்தில் உள்ள எல்லோரும் நிலத்தில் பாடுபட வேண்டும், அறுவடைக்குப் பின்பு மகசூலை சமமாகப் பங்கிட்டுக்கொள்ளவேண்டும் என்று சிலர் எண்ணினார்கள். இவ்வாறு நினைப்பது இயற்கையே.

ஆனால் வினோபாஜியின் கருத்து முற்றிலும் மாறு பட்டதாக இருந்தது. அந்தக் கிராமத்து மக்கள் திடீ ரென்று சமூக-பயிர்த்தொழில் முறை அல்லது கூட் டுறவு பயிர்த்தொழில் முறையை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்க மாட்டார்கள் என்பது அவருடைய எண்ணம். எழுதப்படிக்கத் தெரியாத விவசாயிகள் அதிகமாக இருப்பதால் கூட்டுறவு முறையில் நடத்தினால் கணக்குகள் வைத்துக் கொள்வதும் நிர்வாகம் செய் வதும் சிரமமாக இருக்கும். அதற்காக எழுதப் படிக் கத் தெரிந்த கணக்கர்களை வைத்துக் கொள்ள வேண்டி யிருக்கும். இந்தக் கணக்கர்கள் தங்களிடம் ஒப்படைக் கப்பட்டுள்ள அதிகாரங்களை கெட்ட வழிகளில் உபயோ கப்படுத்தி கிராமத்தை ஆட்சி செய்யுமளவுக்கு வந்து விடுவார்கள். ஆகவே கிராமத்தின் நிலங்களைப் பங் கிடும் முறையுடன் கூட்டுறவு விவசாய முறையை இணைக்க வினோபாஜி மறுத்தார். பூமிதானத்தின் நிலம் குடும்பங்களிடையே தனித்தனியாகப் பங்கிடப்படு கிறது. ஆனால் அந்நிலத்தை விற்பனை செய்யவோ, அதை உடைமையென அதிகாரம் செலுத்தவோ, குத்த கைக்கு விடவோ, வேறெந்த முறையிலாவது கைவிடவோ அதிகாரம் தனி மனிதனுக்கு இருக்காது. தனிஉடைமை ஒழிந்த கிராமங்களில் இதே முறையைக்

கையாளுவதுடன், பரீட்சார்த்தமாகக் கூட்டுறவுப் பண்ணை நடத்தச் சிறிது நிலம் விட்டுவைக்கவும் சிபாரிசு செய்யப்பட்டது. ஐந்தோ பத்தோ குடும்பங்கள் ஒன்ருகக் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்ய முன் வந்தால் அவர்களுக்கு வாய்ப்பளித்து ஊக்கம் கொடுக்க வேண்டும். ஆனால் அப்படிச் செய்வதற்கு எவருக்கும் உரிமை கொடுக்கக் கூடாது.

மங்கரோட் மக்கள் தங்கள் வருங்காலத்தைப்பற்றிச் சிந்தித்தனர். குடும்பங்களுக்கு நிலத்தைப் பங்கிட்டுக் கொடுப்பதையே அவர்கள் ஆதரித்தார்கள். எந்தக் கொள்கையில் பங்கீடு நடைபெற வேண்டும் என்ற கேள்வியெழுந்தது. துல்யமான பங்கீடு வேண்டுமென்பதுதான் ஆதர்சம். ஆனால் கிராமத்தில் சில குடும்பங்களுக்கு தேவைக்குமேல் நிலம் இருந்தது. அவற்றை ஏனையோருக்குத் துல்யமாக உடனடியாகக் கொண்டு வருவதில் சில சிக்கல்கள் இருப்பதை உணர்ந்தனர். சத்துருக்ன சிங் என்பவரிடம் 400 ஏக்கர் நிலமிருந்ததில் 80 ஏக்கர் மட்டுந்தான் அவர் நேரடியாகச் சாகுபடி செய்து வந்தார். துல்யப் பங்கீடு முறையில் அவருக்கு 12 ஏக்கர்தான் கிடைக்கும். இதை வைத்துக்கொண்டு உயர்ந்த வாழ்க்கைத் தரத்தில் பழகிய அவர் தம் குடும்பம் எப்படி நடத்த முடியும்? ஆகவே விசேஷச் சலுகையாக அவருக்கு 40 ஏக்கர் நிலம் கொடுப்பது என்று முடிவு செய்யப்பட்டது. இம்மாதிரிச் சலுகைகள் மேலும் ஏழு குடும்பங்கள் விஷயத்தில் காட்டப்பட்டது. மீதமுள்ள நிலம் குடும்பத்திற்கு 5 ஏக்கருக்குக் குறையாமல் பங்கிடப்பட்டது.

ஒரு காலத்தில் மங்கரோட் மிகப்பெரியதும் செழிப்புற்றதுமான கிராமமாக இருந்தது. அதன் ஜனத்தொகை 5,000 ஆக இருந்தது. கிராமத்தில் மொத்தம் 5,100 ஏக்கர் நிலமிருந்தது. இதில் ஆற்றங் கரையில் இருந்த சுமார் 1000 ஏக்கர் நிலத்தில் உயர்தர மகசூல்

கிடைத்துவந்தது. கிராமத்து ஜமீந்தார்களின் அக்கிரமங்கள் காரணமாக ஜனங்கள் அங்குமிங்குமாக ஓடிப்போய் விட்டனர். இப்பொழுது 106 குடும்பங்கள் மட்டும் வாழ்கின்றன. ஆற்றோரத்தில் உள்ள செழிப்பான பூமி ஆற்றால் அரிக்கப்பட்டு சிறிது சிறிதாக குறுகிக் கொண்டே வந்தது. இப்பொழுது அங்கு 800 ஏக்கர் நிலம்தான் உழுது பயிரிடப்படுகிறது. கொஞ்சம் நிலம் அண்டை கிராமவாசிகளின் கையில் இருந்தது. மற்றவையெல்லாம் தரிசாகவே கிடந்தன. கிராமத்தில் நிலமில்லை என்ற குறை இல்லை. தரிசாகக் கிடந்த 200 ஏக்கர் நிலத்தை சாகுபடிக்குக் கொண்டு வந்தால் எல்லோருக்கும் நியாயமான அளவு நிலம் கொடுக்கமுடியும்.

கிராமவாசிகள் தனிப்பட்டோர் சாகுபடி முறையை விரும்பினால்கூட, புதிதாக பூமி கிடைக்கப்பெற்ற 36 குடும்பங்கள் தங்களுக்குக் கிடைத்த 306 ஏக்கர் நிலத்தில் 'சமுதாய முறையில்' பயிர்த் தொழில் செய்ய விரும்புகிறார்கள். கிராமத்தின் சொத்தாக 50 ஏக்கர் பூமி சமூக முறையில் பயிர் செய்வதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து கிடைக்கும் விளைச்சலை கிராமத்தின் பொதுக் காரியங்களுக்கு உபயோகப்படுத்தப்படும்.

ஆதிகாலத்தில் மங்கரோட்டில் பல குடிசைத் தொழில்கள் நடைபெற்றுவந்தன. அவற்றில் நெசவு, தச்சு, கொல்லு, தோல் சாயமிடுதல் போன்ற வேலைகள் தான் மிகச் சிறிய அளவிலாவது இன்று எஞ்சியுள்ளன. இப்பொழுதுகூட இங்கு பதனிட்ட தோல் இப்பகுதியில் மிகப் புகழ் பெற்றுள்ளது. இத்தொழில்களில் ஈடுபட்டுள்ள ஆறு குடும்பங்கள் நிலம் பெற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் செய்யும் தொழிலின் வருவாயே வாழ்விற்குப் போதுமானதாக இருக்கிறது.

கிராமத்தின் ஏனைய விஷயங்களைக் கவனிக்க அங்கு "சர்வோதய மண்டல்" என்ற பெயரில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. கிராமத்திலுள்ள 21 வயதுக்கு

மேற்பட்ட ஒவ்வொரு ஆணும் பெண்ணும் இக்குழுவில் அங்கத்தினர். அன்ருட விஷயங்களைக் கவனிக்க 15 அங்கத்தினரைக் கொண்ட ஒரு காரியக்குழு வுள்ளது. பூமி தானம் மூலம் கிடைத்த மங்கரோட்டின் நிலமனைத்தையும் பராமரிக்கும் பொறுப்பை விஞேபாஜி இக்குழுவிடமே விட்டிருக்கிருர். இக்குழுவுக்கு ஒரு விசேஷச் சட்டமுள்ளது. அதாவது குழு இயற்றும் தீர்மானங்கள் ஏகமனதாக இருக்கவேண்டும். வாக்குப் பதிவு முறை வித்தியாசங்கள் ஏதும் இதில் இடம் பெற முடியாது. நிலப் பங்கீடும், பயிர் நிர்ணயமும் இக்குழு மூலமே நடைபெறும். என்னென்ன பொருள்கள் பயிரிட வேண்டும், யார் யார் பயிரிடவேண்டும் என்பனபோன்ற விஷயங்களை இக்குழுவே முடிவுசெய்யும். பயிர்த்தொழில் சீர்திருத்தம், குடிசைத் தொழில்களைப் பரப்புதல் போன்ற அபிவிருத்தித் திட்டங்கள் தயாரித்து நிறைவேற்றும் பொறுப்பு இக்குழுவிடமே இருக்கும்.

மங்கரோட்டில் இப்பொழுது செய்யப்பட்ட பங்கீடு நிரந்தரமானதல்ல. பத்து வருடங்களுக் கொருமுறையாவது குடும்பங்களின் கணிதி எடுத்து அதற்கேற்ப நிலத்தை அதிகப்படுத்தி அல்லது குறைத்துப் பங்கீடு செய்வதற்கு இக்குழுவிற்கு அதிகாரம் உள்ளது.

நிர்மாணத் திட்ட வேலைகளும் அங்கு ஆரம்பமாகிவிட்டன. ஆதாரக் கல்விச்சாலை (நயீ தாலீம்), கூட்டுறவுச் சங்கம், தானியக் களஞ்சியம் ஆகியவை நிறுவப்பட்டு கதர் வேலையும் நன்கு நடத்தப்பட்டுவருகிறது.

இவ்வாறு மங்கரோட்டில் சமீபகாலத்தில் ஆரம்பிக்கப்பட்ட மிக முக்கியமான, புரட்சிகரமான ஆராய்ச்சியொன்று நாட்கள் செல்லவும் வியாபித்து கோராபுட் ஜில்லாவில் விசாலமான கங்கை வெள்ளம்போல் வளர்ச்சியடைந்துள்ளது.

II

நிலப்பிரச்சனை—மாறுபட்ட கருத்துக்கள்

உலகில் சோஷலிசக் கொள்கை உதயமானதிலிருந்து நிலத்தைச் சமமாகப் பங்கிடுவதா அல்லது சமுதாயத்தின் பொதுவுடைமை யாக்குவதா என்ற பிரச்சனை குறித்து பல அறிஞர்கள் விவாதித்திருக்கின்றனர். உலகில், குறிப்பாக ஆசிய நாடுகளில் பண்டைக் காலத்தில் நிலமனைத்தும் விரல்விட்டெண்ணக்கூடிய சிலருக்குச் சொந்தமாக இருந்தது. ஏராளமாய் பரந்துகிடக்கும் நிலத்திற் குரியவர்களாக சிலர் ஒரு புறம், நிலத்தில் உரிமையில்லாமலிருக்கும் கோடிக் கணக்கான மக்கள் மறுபுறம்—இவ்வாறு இணைக்க முடியாத வேறுபாடு ஏற்பட்டது.

இந்நிலையில் ஒருசிலரிடம் குவிந்துகிடக்கும் நிலமனைத்தையும் அதில் பாடுபடும் கோடிக் கணக்கான விவசாயிகளிடம் ஒப்படைக்க வேண்டுமென்று கருதுகிறோம். உலகப் பிரச்னைகளுக்கு அடிப்படையான காரணங்களைச் சிந்தித்துப் பார்ப்போர் சமுதாயச் சுரண்டலுக்கும் ஹிம்சைக்கும் மூலகாரணம் கண்டு பிடிக்க முயன்றதில் உற்பத்தி சாதனங்களுக்கு தனி உடைமை இருப்பதுதான் இதற்கெல்லாம் முக்கிய காரணம் என்று கண்டுள்ளனர். முதலாளித்துவம் இருப்பதால்தான் இன்னொருவனின் உழைப்பைச் சுரண்ட தனி ஒருவனுக்கு முடிகிறது. தான் சுயமாக உழைக்காமல் சமுதாயத்தின் உழைப்பின் பயனை உற்பத்தியாகும் பொருள்களையும் கையாடிவிடுகிறான் இந்த முதலாளி. ஆகவே முதலாளித்துவத்தை ஒழிப்பதுதான் சமுதாயப் புரட்சியின் முக்கியமான நோக்கம் என்று கொள்ளப்பட்டது. ரஷ்யப் புரட்சியின் தலைவர் லெனின் கூறியிருக்கிறார்—“ நிலம் தனக்குச் சொந்தமாக வேண்டுமென்று தனி விவசாயி ஒவ்வொருவனும் விரும்புகிறான். முதலா

ளித்துவ மனப்பான்மைக்கு (capitalism) இதுவே மூல காரணம். தனி விவசாயியின் இவ்விருப்பம் கம்யூனிசத்திற்கு (சமத்துவக் கொள்கைக்கு) எதிராகக் கிளம்பி விடக்கூடும். ஆகவே சமத்துவ சமுதாயம் வெற்றிபெற வேண்டுமானுல் தனி உடைமையை நோக்கமாகக் கொண்ட இக் கொள்கையை வேரோடறுக்கவேண்டும்.'' ஆனுல் அதை எப்படி, எப்பொழுது ஒழித்துக் கட்டுவது? குறிப்பிடுமளவுக்குச் சிலரிடம் உடைமையாக இருக்கும் நிலத்தைப் பல துண்டுகளாக்கிப் பங்கீடு செய்தால் அவற்றின் சக்தி அதிகமாகத்தானே செய்யும்? ஆகவே ஆரம்பத்திலேயே நிலத்தை ஏன் தேசீயமயமாக்கக் கூடாது? இக்கேள்விகள் புரட்சிக்காரர்கள் உள்ளங்களில் விடை காணுமல் சுழன்றுகொண்டிருந்தன. பழங்கால சமுதாய அமைப்பை அடியோடு அழிக்கும் சக்தி நிலம் வேண்டும் என விரும்பும் நிலமில்லா விவசாயிகளிடம்தான் அடங்கிக் கிடக்கிறது என்ற உண்மையும் அவர்களுக்குத் தெரியாமலில்லை.

ஆகவே ரஷ்யப் புரட்சியின் ஆரம்ப கட்டத்தில் நிலமில்லா விவசாயிகள் ஜமிந்தார்களின் நிலங்களைப் பிடுங்கி தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டதை நியாயமென அங்கீகரித்தார் லெனின். ஆனுல் விவசாயிகளுக்கு நேரடியாகத் தலைமைவகிக்கும் சக்தி அவரிடம் இருக்கவில்லை. நிலம் தேவை என்ற ஆசையும், நியாயமென அவர்கள் நினைத்துக் கொண்டிருந்த ஒரு சில கொள்கைகளும் தவிர வேறெதுவும் புரட்சியில் அந்நாட்டு விவசாயிகளுக்கு வழிகாட்டவில்லை. உண்மை நிலையை உண்மைக் கண்களினுலேயே கண்டனர். அவர்கள் அடைய வேண்டுமென விருந்த குறிக்கோள், தனி உடைமையை ஒழித்துக்கட்டி, நிலத்தை விவசாயிகள் அனைவருக்கும் பங்கிட்டு, கூட்டு விவசாயமுறை (collective farming) நடத்தி, அதன்மூலம் சோஷலிச சமுதாய அமைப்பிற்கு ஆழமாக கோள்காலிட வேண்டுமென்பதே.

பதினைந்து வருடங்களுக்குப் பின்பு இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் உருவாக்கப்பட்டபொழுது ஸ்டாலின் இந்த மாறுதலைச் செய்தார். அவர் நிலத்தை தேசீய மயமாக்கும் வேலையைத் துவக்கினுர். விவசாயிகளில் அதிக நிலமுடையோர், மத்தியதரத்தைச் சேர்ந்தவர்கள், குறைந்த நிலம் உடையவர்கள், நிலமில்லாதோர் இவர்களிடையே ஏற்பட்டுக் கொண்டிருந்த பூசல்களை மேலும் தூண்டிவிட்டார். ஆரம்பத்தில் குறைந்த நிலம் வைத்துக் கொண்டிருப்பவர்களையும், நிலமில்லாதவர்களையும் ஒன்று சேர்த்து அவர்கள் உதவியால் அதிக நிலம் வைத்துக்கொண் டிருப்போர்களை வீழ்த்தினுர். பின்பு படிப்படியாக, குறைந்த நிலமுடையவர்களிடமிருந்தும் மத்திய தரத்தவரிடமிருந்தும் நிலம் பறிக்கப்பட்டது. தங்களுக்குப் புரியாத இச்செயலை எதிர்த்து விவசாயிகள் கிளர்ச்சி செய்தனர்; சர்க்கார் கையில் ஒப்படைப்பதைவிட தங்களிடமிருந்த ஆடு மாடுகள் போன்ற பிராணிகளைக் கொன்று தின்று விடுவதே மேல் எனக் கருதினுர்கள். ஆனுல் அரசாங்கத்தின் படை பலத்திற்குமுன் இவர்கள் என்ன செய்ய முடியும்?

உலக சரித்திரத்திலேயே இதற்குமுன் கண்டிராத இந்த ஹிம்சை நடவடிக்கையின் விளைவாக எத்தனையெத்தனை மனிதர்கள் கொல்லப்பட்டார்கள்! எத்தனையெத்தனை குடும்பங்கள் கலைக்கப்பட்டன! கணக்கற்ற பேர்கள் மனைவி மக்களையிழந்து அகதிகள் முகாம்களே கதியெனக் கொண்டனர். ஒரு ஆதர்ச சமுதாயம் உருவாக்க இவ்வளவு பெரிய ஹிம்சை முறை கையாளப்பட்டதற்கு இணையாக உலகில் வேறெங்கும் நடைபெற்றதில்லை.

கடைசியில் ஸ்டாலின் தம் கொள்கைகளை மாற்ற வேண்டியதாயிற்று. தேசிய மயமாக்குவதற்கு நேரடி நடவடிக்கைகளை எடுப்பதற்கு பதிலாக மறைமுக நட

வடிக்கைகளை மேற்கொண்டார். அதன் விளைவாக இன்று 70 சதவீத நிலம் சர்க்கார் அதிகாரத்தின்கீழுள்ள கூட்டுப் பண்ணை (Collective farm) களில் உள்ளது. ஆனால் அங்கு மனிதனின் நிலைமை என்ன? சுதந்திர மனப்பான்மையும், அறிவும், அன்பும், பயமின்மையும் உடைய மனிதன் உள்ளன்புடன் ஒத்துழைக்கிறானா அல்லது சந்தேகமும், பீதியும், வெறுப்பும், கொண்ட மனிதன் அரசாங்கத்திற்குப் பயந்து தன் விருப்பங் களுக்கு மாறாக ஆளப்படுகிறானா?

ரஷ்யாவில் ஏற்பட்ட அனுபவங்களை அறிந்து, சீனா, யூகோஸ்லேவியா போன்ற கம்யூனிஸ்டு நாடுகள் தங்கள் கொள்கைகளை மாற்றி நில வினியோகத்திற்கு முதலிடம் கொடுத்தன. அப்படியிருந்தும் மூல கார ணத்தால் ஏற்படும் சண்டைகள் குறைந்தபாடில்லை. சீனாவில் கம்யூனிஸ்டு புரட்சியின் பின்பு ஏற்பட்ட நிலப் பங்கீட்டில் பங்கிடப்பட்ட நிலம் அந்தந்த உழவனுக்கே சொந்தமாக்கப்பட்டது. நிலம் விற்பனை செய்வதற்கும், கூலிக்குக் கொடுப்பதற்கும் பூரண அதிகாரம் அளிக்கப் பட்டது. அதன் பலனாக ஜனங்களின் மனதில் முதலா ளித்துவம் மேலும் ஆழமாக வேரூன்றியது. வருங் காலத்தில் நிலத்தை தேசீய மயமாக்கும் திட்டம் ஏதாவது ஏற்பட்டால் ஜனங்கள் பலாத்கார நடவடிக்கையைச் சமாளிக்கத் தயாராக வேண்டியிருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

உலகிலுள்ள கம்யூனிஸ்டுகளிடையே (சமத்துவக் கொள்கையினர்) மட்டும் இந்தக் கருத்துப் போராட்டம் இருக்கவில்லை, சோஷலிஸ்டு (சமுதாயக் கொள்கை) களிடையிலும்தான் இருந்தது. பாரதத்தில் 1935–40-ல் நடந்த கிசான் இயக்கத்தினரிடையிலும் இக்கருத்துப் போராட்டம் இருந்தது.

III
விநோபாஜியின் கொடை

இக்காலத்தில் நாம் காணும் சமூக சாத்திரக் கொள்கைகளுக்கு விநோபா அரியதோர் கொடை அளித்துள்ளார். நிலப் பிரச்சனையைக் குறித்த கருத்து வேறுபாடுகளை பலமானதும், உலகம் இதற்குமுன் கண்டறியாததுமான ஒரு புது முறையால் அவர் ஒழித்துக் கட்டிவிட்டார்.

தெலிங்கானாவில் பூமிதான இயக்கம் ஆரம்பமான பொழுதே நிலமில்லாதவர்களுக்கு நிலம்பெற உரிமையிருக்கிறது என்று கோஷித்தார் விநோபாஜி. ஆனால் மனிதன் நிலத்திற்குச் சொந்தக்காரன் என்று நினைப்பது தவறு என்பதையும் அத்துடன் கூறினார்.

மனிதன் வாழ உரிமை பெற்றவன் என்ற கருத்தும் முதலாளித்துவ உரிமை என்ற கருத்தும் ஒன்றோடொன்று இணைந்திருந்ததைப் பிரித்து உலகத்திற்கு எடுத்துக்காட்டினார் விநோபாஜி. இதுதான் அவர் வெளியிட்ட விசேஷக் கருத்து. உழைத்து உயிர் வாழ்வதற்காக நியாயமான பங்கு நிலத்தை விவசாயி கேட்கிறான் என்ற கொள்கையை அவர் நியாயமென ஒப்புக் கொண்டார். ஆனால் நிலத்தில்சொந்தம் பாராட்டி அதை விருப்பப்படி செய்யும் கொள்கை தவறானதாகும் என்பது அவர் கருத்து. இக்கொள்கை காந்தியடிகளின் ‘தர்ம கர்த்தா’ (Trusteeship) சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டு உருப்பெற்றது. தனி மனிதன் மட்டுமல்ல சமுதாயமும் நிலத்தில் சொந்தம் கொண்டாட முடியாது; தர்மகர்த்தாவாகத்தான் இருக்க முடியும். காலம் போய்க் கொண்டிருப்பதற்கிடையில், ஒரு குறிப்பிட்ட காலவரைக்குள் ஒரு ஜன சமூகத்தினர் க்ஷேமநல சமுதாயத்தை உருவாக்கினால் அவர்கள் சமூகம் சமுதாயத்திற்கு ஆதியோ அந்தமோ ஆகாது; அவர்கள்,

ஒரு பெரும் சங்கிலியின் கண்ணி (unit) போன்றவரே. இன்றைய சமுதாயத்திடம் இருக்கும் நிலம், சம்பத்து எல்லாம் இவர்களுக்கே உரியதல்ல. இதற்குமுன் பல பரம்பரைகள் அவற்றை அனுபவித்தாகிவிட்டது; மேலும் வரக்கூடிய தலைமுறைகளின் வாழ்க்கைத்தரம், பண்பாடு, கலாச்சாரம் ஆகியவைகளெல்லாம் இந்த முதலீட்டை அடிப்படையாகக் கொண்டதுதான். காலத்தின் இந்த நிரந்தர (சாசுவத)ச் சட்டத்தை மனதில் கொண்டுதான் இன்று உலகில் இருக்கும் சம்பத்தை நாம் அனுபவிக்கவேண்டும். 'தர்மகர்த்தா'க் கொள்கை (Trusteeship) மனிதனுக்கு மட்டுமல்ல, உலகின் ஜீவ ஜாலங்கள் அனைத்தும் ஆண்டவனால் அப்படியே அமைக்கப் பெற்றுள்ளன. ஆகவே மனிதனைத்தவிர ஏனைய ஜீவராசிகளின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டுமென்பது விநோபாஜியின் கொள்கை.

விநோபாஜி வெளியிட்டுள்ள இக்கொள்கை, பாரத நாட்டின் பண்டைய பரம்பரைகளை ஆதாரமாகக் கொண்டது. ஆகவே அதைப் புரிந்துகொள்வதில் நமக்கு அதிக சிரமமேற்படவில்லை.

காந்தியடிகளும், விநோபாஜியும் தோன்றுவதற்கு எவ்வளவோ வருடங்கள் முன்னமேயே பாரத நாட்டில் கிராமங்கள்தோறும் கீழ்க்கண்ட பாட்டு பரவலாகப் பாடப்பட்டு வந்தது:

"ஸபை பூமி கோபால்கி யா மை அடக் கஹா
ஜாகே மன்மே அடக் ஹை, ஸோஹி அடக் ரஹா"*

விநோபாஜி அடிக்கடி ஒரு குடியானவனுடைய கதை சொல்லுவார்: "மகசூலைத் தின்றுகொண்டிருந்த பக்ஷிகளை ஓட்டாமலிருப்பது ஏன்?" என்று விவசாயியைக் கேட்டபொழுது, "சூரியன் பயிர்களை விளைவிக்கிறான்.

---

*நிலமனைத்தும் ஆண்டவனுக்கே சொந்தம் என்பது இதன் பொருள்.

பக்ஷிகள் ஆண்டவனால் படைக்கப்பட்டவை. அவை களும் கொஞ்சம் சாப்பிட்டுக் கொள்ளட்டுமே. பின்பு ஓட்டி விடுகிறேன்" என்று பதில் சொன்னான் அந்த விவசாயி. இந்த உதாரணத்தைக் காட்டி அவர் கூறுவது வழக்கம்—"பாரத நாட்டில் உள்ள தரித்திரர்களான விவசாயிகள் ஆண்டவனால் படைக்கப்பெற்றவர்கள் தாம் என்று கூறுவர். இங்குள்ள ஏழைக் குடியானவர்கள் எதையும் தங்கள் உரிமை எனக் கூறுவதில்லை. ஆண்டவனே அவர்களுடைய எஜமானன். நான் நான்காண்டுகளாக இந்தியா முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்துள்ளேன். எந்தக் கிராமத்திலும், யாரும் நமது கொள்கைகள் தர்மத்திற்கும், நியாயத்திற்கும் விரோதமானவை என்று கூறவில்லை."

பண்டைக்காலத்து பாரதத்தின் நில உடைமை அமைப்பிலும் ஆங்கிலேயர்கள் காலத்தில் ஏற்பட்டது போல் அவ்வளவு பெரிய ஏற்றத்தாழ்வுகளும், எஜமானத்துவமும் இருக்கவில்லை. பண்டைக்காலங்களில் கிராம நிலங்களுக்குச் சொந்தக்காரனாக கிராமத்தலைவனோ, அரசனோ இருப்பான். பெயரளவில்மட்டும் அந்த ஏற்பாடு இருந்தது. பரம்பரை பரம்பரையாக நிலத்தை உழுது பயிரிடும் உரிமை குடியானவனுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அந்நிலத்தை சுலபமாக விற்பனை செய்யவோ அல்லது வேறெந்த முறையிலாவது கைமாற்றம் செய்யவோ உள்ள உரிமை அவனுக்குக் கொடுக்கப்படவில்லை. யாராவது நிலத்தை விட்டுவிட விரும்பினால் அவன் அந்நிலத்தை கிராமத்தலைவனிடமாவது அரசனிடமாவது ஒப்படைக்க வேண்டும். பின்பு தேவைப்படும்பொழுது பெற்றுக்கொள்ளலாம். இம்முறை சமீபகாலங்களில்கூட சில சமஸ்தானங்களிலும், சில பிரதேசங்களிலும் இருந்தது.

இம்முறைக்கும் கிராமதானத்திற்கும் பல வித்தியாசங்கள் உள்ளன என்பதில் சந்தேகமில்லை. பழைய

முறையில் நிலவிநியோக அதிகாரம் ராஜாவிடமோ அல்லது கிராமத் தலைவனிடமோதான் இருந்தது, சமுதாயத்திடம் எவ்வித அதிகாரமும் இருக்கவில்லை. கிராமத்தின் மக்கள் ஒன்றுசேர்ந்து செய்யும் முடிவு இத்தலைவர்களைப் பாதிக்கத்தான் செய்தது. மேலும் நிலத்தின்மீது எல்லோருக்கும் உரிமையுண்டு என்ற தத்துவம் சமுதாய அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப் படவில்லை. ஆகவே சமுதாயத்தில், நிலவியிருந்த ஜாதி பேதக் கொள்கைகளுக் கேற்ப நில உடைமையின் அளவுகளில் ஏற்றத்தாழ்வுகள் இருந்தன. ஆனால் பாரத தேசத்தில் பண்டைக்காலத்தில் பூமியின்மீது தனியாருக்கு வரையறுக்கப்பட்ட அதிகாரந்தான் இருந்தது என்பது தெளிவு. இதுதான் நில பிரபுத்வம் ஒழிக்கப்படவேண்டும் என்ற கருத்து தோன்றுவதற்குக் காரணமாக இருந்திருக்க முடியும்.

கிராமதானக் கொள்கையில் முதலாளித்துவம் ஒழிக்கப்படுவதோடல்லாமல், நிலத்தை உழுவதற்கு எல்லோருக்கும் உரிமையுண்டு என்ற கொள்கையும் அங்கீகரிக்கப் பட்டுள்ளது. இக்கொள்கையில் இன்றைய பொருளாதார அமைப்பில் தனியார் துறைக்குக் (Individual undertaking) கிடைத்துக் கொண்டிருக்கும் ஆதரவு பெரிதும் பயன்படுத்தப்பட்டுள்ளது. தன் சுயபுத்தியின் உதவியாலும், ஆண்மையின் உதவியாலும் ஒருவன் செய்யும் காரியங்களைக் கண்டு அவன் எப்படிப் பூரிப்படைகிருனே அதேபோல் ஒவ்வொருவனும் தன் சுயமுயற்சியில் காரியங்கள் செய்ய இந்தக் கொள்கை தூண்டுதல் அளிக்கிறது. மேலும் இக்கொள்கையில் தனிமனிதன் தன் சுய விருப்பத்திற்கிணங்க சமுதாயத்தின் சட்ட திட்டங்களுக்குட்பட்டு அத்துடன் ஒத்துழைத்துச் செயலாற்றி அதன் பிரிக்கமுடியாத ஒரு அங்கமாகிவிடுகிருன். இவ்விரண்டு கொள்கைகளிடையே மோதல்களே இல்லை; ஒத்துழைப்புத்தான் உளது.

அதாவது கிராமதான இயக்கம் முற்றிலும் சமுதாய ஒற்றுமையின் அடிப்படையிலும், ஒத்துழைப்பின் அடிப் படையிலுமாக நடத்தப்படுகிறது. இவ்வியக்கம் மனித சமூகத்தை கொலையினின்றும், சட்டத்தினின்றும் தப்பு வித்து சரியான முன்னேற்றப்பாதை காட்ட வல்லமை பெற்றது என்று நிரூபிக்கப்பட்டுவிட்டது. விநோபாஜி சத்தியாக்கிரகத்தை மூலமாக வைத்துக்கொண்டு செய்த இவ்வாராய்ச்சி—நில எஜமானத்துவத்தை ஒழிக்க எவ்வித ஹிம்சை முறையையும் கையாளாமல், அன்பு, ஒத்துழைப்பு ஆகிய நற்பண்புகளாலேயே நிறைவேற்ற உதவியது. இது உலகின் சரித்திரத்தில் புதியதோர் சாதனையே. இதன் வெற்றிக்குக் காரணம் மனித சமூகத்திடம் நாம் எதிர்பார்த்த நற்குணங்கள்—அன்பு, ஒத்துழைப்பு ஆகியவை—நமக்குக் கிடைத்ததேயாகும். இதுதான் உண்மையான, அஹிம்சையை ஆதாரமாகக் கொண்ட புரட்சிக்குவழி, அமரத்துவம் பெறும் புரட்சிக்கு வழி.

கிராமதான இயக்கத்தின் விதிகளின்படி நிலத்தை உபயோகிக்கவேண்டிய உரிமை கிராமத்திற்குத்தான் உண்டு, நாட்டிற்கில்லை. ஆகவே இதற்கு 'கிராமமய மாக்குதல்' என்ற ஒரு புதுச் சொல்லைக் கையாள வேண் டியதாயிற்று. கிராமமயமாக்குதல் நடைபெற்ற பின்பு சரக்காருடன் தனிப்பட்ட விவசாயி எவ்வித நேரடித் தொடர்பும் கொள்ளமாட்டான். அரசாங்க வரிகள் கிராமத்திலிருந்து மொத்தமாக நிர்ணயித்துக் கொடுக்கப் படும்; தனிப்பட்டவர்கள் கொடுக்கமாட்டார்கள். கிரா மத்தைப் பொறுத்தமட்டிலுள்ள தஸ்தாவேஜிகள் கிராமக் குழுவின் காரியாலயத்தில் இருக்கும். அரசாங்கத்தின் உறுப்பாக கிராமமே இருக்கும்.

இன்று நாட்டில் பெயரளவிற்குத்தான் ஜனநாயகம்; செயலளவில் அது மனிதன் புரிந்துகொள்ளாத அளவுக்கு கெட்ட வழிகளில் செயல்படுகிறது. தத்துவரீதியாகப்

பார்க்குமிடத்துத் தேர்தல்கள் மூலம் நாட்டின் செயல்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் மக்களுக்கு இருக்கிறது. ஆனால் அரசாங்கத்தின் அன்றாட வேலைகளில் இந்தக் கட்டுப்பாடு இருப்பதாகப் புலப்படுவதில்லை. இன்றைய அரசாங்கத்தின் நடவடிக்கைகள் சமுதாயத்திலுள்ள மக்களின் விருப்பத்திற்கேற்பவே நடைபெறுகின்றன என்று சொல்வது கடினம். அது தான் சுயேச்சையான தீர்மானங்களின்படி வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. அதன் வேகத்தில் சமுதாயத்தின் விருப்பங்கள் இணைந்து செல்வது இயலாத காரியமாகப் போய்விட்டது. ஆகவே தேசியமயமாக்குவதென்பது, அத்தேசத்திலுட்பட்ட மனித சமுதாயத்தின் சமூகச் செயல் அல்ல, மனிதன் மீது வெளியிலிருந்து, யந்திரம் போன்ற அரசாங்கம் விதிக்கும் கட்டுப்பாடேயாகும். எந்த சமுதாயத்தின் பொருளாதார அமைப்பு தனி மனிதனுக்கு நலன் செய்கிறதோ, எந்த சமுதாயத்தின் அங்கமாக இருந்துகொண்டு தனி மனிதன் தன்னை பலவானாகவும், தன் வாழ்க்கையை க்ஷேமமானதாகவும் நினைக்கிறானோ அவன் கிராம ராஜ்யத்தில் யாருக்கும் கைப்பொம்மையல்ல. கிராமதானத்தின் அடிப்படையில் தான் உண்மையான கிராமராஜ்யம் அமைக்க முடியும், கிராம நிலத்தை கிராமமயமாக்கும் திட்டத்தை அமுலாக்கியே கிராமராஜ்யம் அமைக்க முடியும்.

சுதந்திரம் கிடைத்த பத்தாண்டுகளுக்குள் கிராம ராஜ்யக் கொள்கை உருவாகி மக்களின் பேராதரவு பெற்று வருவது, நம் நாட்டில் ஆதிகாலம் தொட்டு தோன்றித் தவம் செய்துவந்த ரிஷிகளின் தவப்பயனே.

IV

மங்கரோட்டிலிருந்து கோராப்புட்டுக்கு

மங்கரோட்டிலிருந்து கிராமதான இயக்கத்தின் தீப்பொறி 500 மைல் தென் கிழக்காக ஒரிஸ்ஸாவில் வைதரணி நதியின் கரையிலிருக்கும் மான்பூருக்கு வந்தது. மான்பூரின் குடிகளான 119 குடும்பங்களும் 'கோக்கா' எனும் ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவைகள். மீன் பிடிப்பதுதான் அவர்களுடைய முக்கிய தொழிலாக இருந்தது. ஆனல் படிப்படியாக அவர்கள் விவசாயத் தொழில் கற்றுக்கொண்டு அதையே முக்கிய தொழிலாக ஏற்றுக் கொண்டனர். மேலும் இவ்விடமிருந்து சிலர் கல்கத்தா நகருக்குச் சென்று வாணிபம் செய்து வந்தனர். சில நிர்மாண ஊழியர்களும், காங்கிரஸ்காரர்களும் இக் கிராமத்துடன் தொடர்புகொள்ளவே 1947-ல் இங்கு நூற்புத் தொழில் ஆரம்பிக்கப்பட்டது; சச்சரவுகளைத் தீர்க்க கிராமப் பஞ்சாயத்து அமைக்கப்பட்டது; ஆரம்பக்கல்வி போதிக்க ஒரு கல்விச்சாலையும் அமைக்கப் பட்டது. 1948-க்கு மேல் ஒரு வழக்குகூட கிராமத்தை விட்டு வெளியில் விசாரணைக்கு அனுப்பப்படவில்லை என்று பெருமையுடன் கூறுகின்றனர் அங்குள்ள மக்கள்.

பூமிதான இயக்கம் ஆரம்பமானபொழுது அதன் அலை மான்பூரையும் அடைந்து அங்குள்ள மக்கள் மனதில் இருந்த தான உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பியது. பூமிதான அன்பர் திரு. சச்சிதானந்த மஹாந்தி என்பவர் இக்கிராம மக்களுக்கு நண்பராகவும், உதவி யாளராகவும், ஆலோசகராகவும் இருந்தார். பூமிதானம் கொடுக்கும் விஷயத்தில் மான்பூர் மக்கள் அவரிடம் ஆலோசனை கேட்க வரும்பொழுதெல்லாம், அவர் "பத்துப் பதினைந்து ஏக்கர் நிலம் தானமாகக் கொடுப்ப தால் ஒரு பிரயோஜனமுமில்லை. தைரியமாக எல்லா நிலத்தையும் கொடுத்துவிடவேண்டும்" என்று உப

தேசம் செய்தார். பின்பு, சுமார் ஆறு மாதங்கள் சிந்தித்த பிறகு 1953 ஜனவரி 30-ம் தேதி மான்பூர் மக்கள் அண்ணல் காந்தியடிகளின் உருவச்சிலைக்கு முன் கிராம தானம் கொடுப்பதாகச் சங்கற்பம் செய்துக்கொண்டனர். பதினைந்து மாதங்களுக்குப் பிறகு 1954, மே 17-ம் தேதி புத்த ஜயந்தி கொண்டாடப்படும் சமயத்தில் மான்பூரின் 575 ஏக்கர் நிலம் மறுபங்கீடு செய்யப்பட்டது. இவ்விடத்திலும் மங்கரோட்டைப் பின்பற்றி ஒரு சர்வோதயக் குழு ஸ்தாபிக்கப்பெற்று 37 ஏக்கர் நிலம் 'சமூக விவசாயத்'திற்காக ஒதுக்கப்பட்டது.

ஒரிஸ்ஸா மாகாணத்தில் கட்டாக் ஜில்லாவில் தான் பூமிதான இயக்கம் முதன் முதலில் பரவியது. ஆகவே ஒரிஸ்ஸாவின் முதல் கிராமதானம் அங்கு கிடைத்தது இயற்கையே. ஆனால் இயக்கத் தீ கோராபுட் ஜில்லாவிற்குப் பரவுவதற்கும், அங்குள்ள சூழ்நிலையில் அது வளருவதற்கும் நெடுநாட்கள் பிடிக்கவில்லை.

கோராபுட் பாரத நாட்டிலேயே மிகவும் பின்தங்கியதும், கவனிக்கப்படாததுமான பிரதேசம். தேசப் படத்தில் இது குறிக்கப்பட்டுத்தான் இருக்கிறது; எனினும் பழங்கால அல்லது தற்காலச் சரித்திரத்தில் இது இடம்பெறவில்லை. இது பாரதத்தின் மிகப்பெரிய ஜில்லாக்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. 9875 சதுர மைல்கள் விஸ்தீரணமுள்ள இந்த ஜில்லா ஐரோப்பாவின் பெல்ஜியம் அல்லது அல்பேனியா நாட்டுக்குச் சமமானது. இப்பெரும் ஜில்லாவில் பரந்துகிடக்கும் வயல்கள், காடுகள், மலைகள் ஆகியவற்றில் உயிர்வாழும் $12\frac{1}{2}$ லக்ஷம் ஜனத்தொகையும் அல்பேனியா அல்லது இஸ்ரேலின் ஜனத்தொகைக்குச் சமம். இவர்களில் 83 சதவீதம் ஆதிவாசிகள் வகுப்பைச் சார்ந்தவர்கள்.

இதன்படி பார்க்குமிடத்து ஒரிஸ்ஸா மாகாணத்தில்தான் ஆதிவாசிகள் தொகை அதிகம். பாரத நாட்டின் மொத்த ஆதிவாசிகள் ஜனத்தொகையில் 30 சதம் பேர்

இங்கு வாழ்கின்றனர். இவர்களுள் நாற்பது அல்லது நாற்பத்தைந்து ஜாதியினர் இருக்கின்றனர். பாஷையிலும், நிறத்திலும், உருவத்திலும் பழக்கவழக்கங்களிலும் பல வேற்றுமைகள் இவர்களுள் காணப்படுகின்றன. கோராபுட்டில் மட்டும் குறைந்தபக்ஷம் 20 ஜாதியினர் இருக்கின்றனர்.

ஆதிவாசிகளுக்குள் 'கந்தா' ஜாதியினரின் தொகைதான் மிக அதிகம். ஒரிஸ்ஸா மாகாணம் முழுதும் சுமார் 3 லட்சமும், கோராபுட் ஜில்லாவில் மட்டும் ஒரு லட்சத்து அறுபதினாயிரமும் கந்தா ஜாதியினரும் உள்ளனர். இவர்களுக்கு அடுத்தபடியாக ஒன்றரை லட்சம் 'சஹாரா' ஜாதியினரும், ஐம்பத்து மூவாயிரம் 'பர்ஜா' ஜாதியினரும் இருக்கின்றனர். இதைத் தவிர 'டம்ப்', 'பாண்' போன்ற ஜாதியினரும் கணிசமான அளவுக்கு இருக்கின்றனர். கோராபுட் ஜில்லாவில் உபயோகத்திலிருக்கும் நிலம் 14 லக்ஷம் ஏக்கர் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதில் 30,000 ஏக்கர் நிலத்திற்கே பாசன வசதியுள்ளது; மீதி 49 லக்ஷம் ஏக்கர் நிலம் காடுகளும், மலைகளும் தான். இங்கு சாகுபடி செய்யப்படும் முக்கிய பயிர் நெல். ராகி, சாமை, மக்காச்சோளம், சோளம் ஆகிய புஞ்செய்ப் பயிர்களும் பயிர் செய்யப்படுகின்றன. மலைப்பிராந்தியங்களில் கடுகு, மஞ்சள் ஆகியவைகளும் பயிர் செய்யப்படுகின்றன. ஸ்ரீகாகுளத்தில் மெல்லிய நூல் நூற்பதற்குத் தேவையான பஞ்சு இந்த ஜில்லாவின் குணபூர் தாலுக்காவில்தான் விளைகிறது.

இங்கு ஜில்லா முழுதுமாக 5750 கிராமங்கள் உள்ளன. பொதுவாக ஆதிவாசி கிராமங்கள் ஒரே ஜாதியைக் கொண்டதாக இருக்கும். ஆனால் பல ஜாதியினர் கூடிவாழும் கிராமங்களும் நிறைய இருக்கின்றன.

மலைப்பிராந்தியத்திலுள்ள இந்த கிராமங்களில் வெளி நாகரிகம் மிகவும் குறைவாகத்தான் வந்துள்ளது. வியாபாரிகள், வட்டிக்கடைக்காரர்கள், அமல்தார்கள் போன்ற

சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் ஆகியோர் மூலமாகத் தான் சிறிதளவாவது நாகரிகம் இங்கு ஏற்பட்டுள்ளது. ஆனால் பின்தங்கியோர் எனக் கருதப்படும் இவர்கள், பண்பாட்டில் குறைந்தவர்களல்ல. இவர்கள் பண்பாடு, உயர்ந்தவர்கள் எனக் கருதப்படுவோரின் பண்பாட்டை விட மிகமிக உயர்ந்தது. ஒத்துழைக்கும் பண்பு இவர் களிடம் இருப்பதால்தான் கிராமதானவியக்கம் இவ்வளவு எளிதாக வெற்றிபெற்றது. இவர்கள் சத்தியம், மரியாதை போன்ற உயர்குணங்கள் கொண்டவர்கள். சுயமரியாதையில் மிகத் தீவிரமாக இருப்பவர்களாதலால் எல்லோரிடமும் சமமாகப் பழகுகின்றனர். இன்றைய நாகரிகம் ஏழைகளை மனிதத்தன்மையற்றவர்கள் என்று புறக்கணிக்கிறது; அவர்களிடம் மரியாதைக் குறைவாக நடந்துகொள்ளவும் காரணமாகிறது. இந்த அவமானத் திலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவே ஆதிவாசிகளில், குறிப்பாக 'கந்த்' வர்க்கத்தினர், வெளிச் சூழ்நிலையுடன் தொடர்பு கொள்ளாமல் மலைக் குகைகளுக்குள்ளேயே அடைந்து கிடக்கின்றனர். கொடிய தரித்திரத்தினால்கூட ஆதிவாசிகளைப் பாதித்து, ஒற்றுமையைக் குலைக்க முடியவில்லை. எந்த நிலையிலும் அவர்கள் நம்பிக்கையுடன் இருக்கிறார்கள். நீங்கள் அவர்கள் கிராமத்திற்குச் செல்வீர்களானால் அவர்கள் உள்ளதை வைத்துக்கொண்டு உங்களை உபசரிப்பார்கள். மூன்று நாட்கள் பட்டினி கிடந்தால்கூட மாற்றான் முன்பு கைநீட்ட மாட்டார்கள். அவர்கள் ஆனந்தத்தி லேயே ஊறியவர்கள். இதயம் திறந்து சிரிக்கிறார்கள், ஆடுகிறார்கள், பாடுகிறார்கள்.

இங்கு முதன்முதலாகத் தென்படுவது இங்கு நடை பெறும் சுரண்டல்தான். ஆதிவாசிகளின் நற்குணங் களைப் பயன்படுத்திக் கொண்டு வட்டிக்கடைக்காரர் களும், சில வியாபாரிகளும் இவர்களை இரக்கமின்றிச் சுரண்டுகிறார்கள். வட்டிக் கடைக்காரன் ரூ. 20 வட்டி

கொடுத்தால், வருஷம் ரூ. 50 வீதம் ஐம்பது வருஷங்கள் திருப்பிக் கொடுத்தால்கூட அந்தக் கடன் தீராது. ஆதிவாசியின் மகனும், பேரனும் கூட சில சந்தர்ப்பங்களில் இக்கடனைத் தொடர்ந்து கட்டவேண்டி யிருக்கும். இம்மாதிரி ஆயிரக்கணக்கான நிகழ்ச்சிகள் அரசாங்கப் புள்ளி விவரங்களிலிருந்தே கிடைக்கின்றன. வட்டிக்கடை முதலாளி விவசாயியினுடைய நிலங்களைப் பிடுங்கிக் கொள்கிருன், அல்லது மகசூலின் பெரும்பகுதியை எடுத்துக் கொள்கிருன். இப்படித் தன் சொந்த நலனுக்காக விவசாயியைப் பலியிடுகிருன். பின்பு விவசாயி ஒரு கூலியாளாக நிலத்தில் பாடுபடவேண்டிய நிலை ஏற்படுகிறது.

தன் நிலமிழந்த விவசாயி காட்டைப் பண்படுத்தி புதிதாக நிலம் அமைத்து அதில் சாகுபடி செய்யும்பொழுது அதையும் அடைய வேண்டுமென்று வட்டிக்கடைக்காரன் விரும்புகிருன். அது தன் வசம் வரும் வரையில் அதன் மீதிருந்து அவன் தன் கண்ணையெடுப்பதில்லை. இப்படி சமதரையிலிருந்து விரட்டி ஓட்டப்பட்ட ஆதிவாசி மலைகளில் தஞ்சம் புகுந்து வாழ்கிருன். அதை அவனிடமிருந்து பறிக்க யாரும் முன்வருவதில்லை. காட்டில் ஏதாவது பயிர் செய்து அதை வைத்துக் கொண்டே வாழ்கிருன். அப்படியிருந்தும் அவன் வருடத்தில் ஆறு மாதங்கள் மலைக்காடுகளில் கிடைக்கும் மாம்பழங்கள், புளி, பலாப்பழம் போன்ற பழங்களும், காய்களும் மட்டும் தின்று வாழவேண்டியிருக்கிறது.

காட்டை அழித்துப் பயிர் செய்யும் முறை சர்க்காருக்குப் பெரும் தலைவலியை உண்டாக்கியிருக்கிறது. அந் நிலங்களில் மூன்று நான்கு வருடங்களுக்கு மேல் தொடர்ச்சியாகப் பயிர் செய்ய முடியாது; பூசாரம் குறைந்துவிடும். ஆகவே இம்மாதிரி நிலங்களில் மூன்று அல்லது நான்கு வருடங்கள் பயிர் செய்துவிட்டு பின்பு சில வருடங்கள் தரிசாக விட்டுவிடுகிருர்கள். இவ்வாறு

புதிய நிலம் தேடும் முயற்சியில் காடுகளை அழித்துக் கொண்டே வருகிறார்கள். சமவெளிகளில் நிலம் கிடைக்காத வரையில் அவர்கள் வேறென்ன செய்ய முடியும்?

இச்சுரண்டலில் சர்க்கார் அதிகாரிகளும், ஏனைய எழுதப்படிக்கத் தெரிந்தவர்களும் சிறிதளவு பங்கெடுத்துக் கொள்ளாமலில்லை. யாராவது மிகச்சிறிய சர்க்கார் உத்தியோகஸ்தன் முதலில் கிராமத்திற்குச் சென்று யாரோ பெரிய உத்தியோகஸ்தர் யாத்திரை வருகிறார் என்று மக்களிடம் கூறி அவர்களுள் ஒருவிதப் பீதியை உண்டாக்கி அவர்களை வைத்துக் கொண்டு எல்லா வேலைகளும் செய்வித்து கூலியாக மிகத்துச்சமாக இரண்டணா, ஓரணா கொடுக்கிறான். அதை அவர்கள் திருப்தியுடன் ஏற்றுக் கொள்ளவும் செய்கிறார்கள். மராமத்து இலாகா உத்தியோகஸ்தர்கள் முன் காலத்தில் இப்படித்தான் ஆதிவாசிகளை வைத்துக்கொண்டு அவர்கள் உழைப்பைச் சுரண்டிக் கொண்டிருந்தனர். எவனாவது ஆதிவாசி தெருவில் பச்சைக்கறி, பழங்கள் ஆகியவைகளைக் கூடைகளில் விற்பனை செய்யக் கொண்டு வந்தால் நாகரிகமடைந்த மனிதன் தன் தேவைகளை அதிலிருந்து எடுத்துக் கொண்டு விலையாக ஓரணாவோ இரண்டணாவோ தன் விருப்பப்படி விட்டெறிவான். இம்மாதிரிச் சுரண்டல் இன்னும் நடைபெறுகிறது. பூமிதானத் தொண்டர்களுக்கு இவற்றை எதிர்த்து இன்றும் வேலை செய்ய வேண்டியிருக்கிறது.

ஆதிவாசிகளிடமிருந்த 'குடிப் பழக்கம்' காரணமாக அவர்களைச் சுரண்டுவது சுலபமாகிவிட்டது. குடி போதையில் தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் அவலநிலையை அவர்கள் உணர முடிவதில்லை. ஆகவே வியாபாரிகளும், வட்டிக்காரர்களும், சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் குடிப்பழக்கம் பெருக உதவினர். கள்ளும், சாராயமும் பெருகின. ஆனால் கஞ்சா, அபினி போன்ற பொருள்கள் ஏனோ அதிகமாக உபயோகிக்கப்படவில்லை.

கல்வித் துறையிலும் இப்பகுதி மிகவும் பிற்போக்கானது. இங்குள்ள சுமார் ஆறுயிரம் கிராமங்களில் மொத்தம் 350 ஆரம்பப்பள்ளிகள் தான் இருந்தன. எழுத்தறிவுள்ளோர் தொகை 5 சதவிகிதம் தான். சுதந்திரம் கிடைக்கப்பெற்ற பின்பு இங்கு பல புதுக் கல்வி நிலையங்கள் திறக்கப்பட்டன. ஆதிவாசிக் குழந்தைகளுக்கென 'சேவாச்ரமங்கள்' என்ற பெயரில் முக்கியமான பல கல்விச்சாலைகள் மாகாணம் முழுதும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கோராபுட் ஜில்லாவில் மட்டும் 135 சேவாச்ரமங்கள் உள்ளன. எனினும் இவ்வேற்பாடுகளெல்லாம் சமுத்திரத்தில் சந்தனம் கரைத்த கணக்குத் தான்.

V

கோராபுட்டின் தீரம்

இயற்கையின் மடியில் தவழ்ந்து விளையாடும் இந் நாட்டு மக்களை, வெளியில் நடமாடும் அக்கிரமக்காரி யான நாகரிகப் பிசாசால் வசீகரித்துப் பிடிக்க முடிய வில்லை. ஆனால் அதன் சுரண்டல் கொள்கை மட்டும் இவர்களை எப்படியோ எட்டி, ஒளியுடன் விளங்கிய வாழ்க்கையை நிலைகுலையச் செய்துவிட்டது. இந்நிலை யில் சுதந்திரப் போரின் அழைப்பு இவர்களுக்கு புதிய தோர் தெம்பூட்டியது. 1923-24-ல் ஆந்திர நாட்டுப் புரட்சி வீரன் திரு. பிதுரி சீதாராம் ராஜு வெள்ளையனை எதிர்த்துப் போராடிய போர்க்களம் இது. 1930ல் உப்பு சத்தியாக்கிரகம் நடைபெற்ற பொழுதும் திரு. ராதா கிருஷ்ண விசுவாசராய் என்பவர் தலைமையில் இப்பகுதி மக்கள் வீர்கொண்டெழுந்தனர். கிராமங்கள்தோறும் கதரியக்கம், மதுவொழிப்பு, சமூகப் பிரார்த்தனை ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்று மக்களுக்குப் புத்துணர்ச்சி ஊட்டின. 1942ல் இவ்விஷயங்கள் அவற்றின் உச்ச நிலையை அடைந்தன. பலவிடங்களில் மக்கள் புரட்சி செய்தனர்; வரி கொடுக்கவில்லை. அவ்வமயம் இந்த ஜில்லாவிலிருந்து மட்டும் இரண்டாயிரம் பேர்களுக்கு மேல் கைதானார்கள். பலவிடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததின் விளைவாக வீரர்கள் உயிரிழந் தனர். ஸ்ரீ லட்சுமண நாயக் தூக்கிலிடப்பட்டார். சுதந்திர மனப்பான்மை வளராமல் தடுப்பதற்கு போலீஸ் படை கிராமங்கள்தோறும் சென்று ராட்டை களைக் கொளுத்தின.

இவ்விரு இயக்கங்களுக்கிடையே இந்த ஜில்லாவிற்கு ஸ்ரீ விசுவநாத பட்டநாயக் என்பவர் வந்தார். அவர் கஞ்சம் ஜில்லாவைச் சேர்ந்த ஒரு கிராமத்தில் பிறந் தவர் என்பதை மக்கள் மறந்துவிட்டனர். ஸ்ரீ கோபபாபு

வின் ஆசிரமத்தில் கிராமசேவைப் பயிற்சி பெற்று, குன்பூர் தாலுக்காவின் குஜேந்திரி என்ற கிராமத்தில் ஒரு ஆசிரமம் ஆரம்பித்தார். விசுவநாத்ஜி, ஆதிவாசிக ளுடன் அன்புடனும் கருணையுடனும் பழகி, இரண்டறக் கலந்து சேவை செய்யும் மாண்பு படைத்தவர். அவர் சேவை செய்வதில் எப்பொழுதும் சற்றும் சளைத்தவரல்ல. பன்னிரண்டு மணி நேரம் தொடர்ந்து 25 மைல்கள் வரை நடப்பார். பல மாதங்கள் வரை கத்தரிக்காயும் மக்காச் சோளமும் மட்டும் உண்டு நாட்கழிப்பார். இவ் வலிமை படைத்த அவருடைய தலைமையின்கீழ் குன்றிப் போயிருந்த கதரியக்கம் புத்துயிர் பெற்றெழுந்தது. முப்பது நாற்பது கிராமங்களில் சுமார் இரண்டரை லட்சம் இராட்டைகள் சுழன்றன. இக் கிராமங்களி லிருந்து மதுவும் ஒழிக்கப்பட்டது. சில வயோதிகர்கள் தங்களுடைய புராதனப் பழக்கத்தைக் கைவிடச் சக்தியில்லாமல் மறைமுகமாக மது அருந்தினுர்களே தவிர தினசரி வாழ்க்கையில் மக்களிடம் மதுவுக்கிருந்த இடம் மறைந்து விட்டது. கிராமங் கிராமமாக நடத்தப் படும் சுரண்டலையும் இவர் கண்டார். அநியாயம் நடை பெறுவது குறித்து ஒரு சூசக அறிவிப்புக் கிடைத்தாலே போதும், அவ்விடம் காடு மலைகளைக் கடந்து ஓடோடி வருவார் விசுவனுத்ஜி. அநியாயத்தில் அவதிப்படு வோருக்கு தைரியமூட்டி, பழிக்குப் பழிவாங்க வேண்டா மெனக் கேட்டுக் கொள்வார். இவ்வாறு குறுகிய காலத் தில், இருபத்தைந்து முப்பது காதங்கள் சுற்றளவுக்குள் காட்டில் மறைந்து கிடந்த கணக்கற்ற சிறு கிராமங் களில் வசிக்கும் ஆதிவாசி மக்களுக்கு நம்பிக்கை பிறந்துவிட்டது. அவர்கள் தீனக் குரலை ஆண்டவன் கேட்கிருரென்றும் அதற்கு பரிகாரம் காண 'கட்டளை' அனுப்பியிருக்கிருரென்றும் அறிந்தனர். குறைகள் 'அவர்' காதுகளை எட்டினுல் எப்படியாவது பரிகாரம் காணப்படும் என்பது அவர்கள் நம்பிக்கை. ஸ்ரீ விசுவ

நாத்ஜி இவ்வாறு ஆதிவாசி மக்களின் நம்பிக்கையையும், அன்பையும் பெற்றுவிட்டார். ஆண்டவன் அனுப்பிய தூதனுகவே அவரை மதித்தனர் மக்கள்.

இங்குள்ள நல்ல நிலங்களையெல்லாம் வெளியிலிருந்து வந்த வட்டிக்காரர்கள் பிடுங்கிக் கொண்டனரென்றும், அதன் பயனுக ஆதிவாசி மக்களில் பெரும் பகுதியினர் விவசாயக் கூலிகளாக மாறி வேலை செய்கின்றனரென்றும் நான் முன்னமேயே குறிப்பிட்டுள்ளேன். இக்கொடுமை மேலும் மேலும் நடந்து கொண்டிருப்பதை ஸ்ரீ விசுவனுத்ஜி கண்டார். சகிக்க முடியாமல் இதற்கெதிராகப் போர் தொடுத்தார்.

1951-ல் ஆதிவாசி மக்களுக்கு நிலத்தில் உரிமை கிடைக்கும் பொருட்டு ஒரு பூமி சத்யாக்கிரக இயக்கம் இவர் நடத்திஞர். அதில் இவருடைய எல்லா நண்பர்களும் பங்கு கொண்டனர். இச் சத்தியாக்கிரகத்தின் பலனுக சர்க்கார் விழிப்படைந்தனர். ஆதிவாசி விவசாயிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்குச் சட்டமியற்றினர். மேலும், அவர்கள் பிரச்சனைகளைத் தீர்க்க ஒரு விசேஷ அதிகாரியை நியமனம் செய்தனர். இவர் மூலம் அனேக விவசாயிகளுக்கு நஷ்டமான தங்கள் நிலம் மீண்டும் கிடைத்தது. அரசாங்கச் சட்டம் எவ்வளவுதான் சாதகமாக இருந்தாலும், அதிகாரி மிகக் கருணையுடையவராக இருந்தாலும் இன்றைய அரசியல் முறைப்படி ஏழைகளுக்கு, குறிப்பாக ஏழைகள் சமூகம் முழுமைக்கும் நீதி கிடைப்பது அரிது என்பதை உணர்ந்தனர் விசுனுத்ஜியும் அவரது தோழர்களும்.

அதன் பயனுக பூமிதான இயக்கப் பிரவாகம் ஒரிஸ்ஸாவையும் எட்டியது. ஸ்ரீ கோப பாபுவும், ரமாதேவி அம்மையாரும் பூமிதான இயக்கத்திற்கு வேண்டி பாத யாத்திரை ஆரம்பித்தனர். ஏனைய ஜில்லாக்களிலும் தொண்டர்கள் இயக்கப் பிரசார வேலையில் ஈடுபட்டனர்.

கோராபுட் ஜில்லாவிலிருந்த தொண்டர்களுக்கும் பூமி தான இயக்கம் நியாயமானதெனப்பட்டு, உடனடியாக இயக்க வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டனர்.

மங்கரோட்டும், மான்பூரும் கோராபுட் மக்களுக்கு வழிகாட்டியன. ஆரம்பத்திலேயே தொண்டர்கள், கிராமதான இயக்கத்தில் அதிக கவனம் செலுத்தினர். 1953, செப்டம்பர் 12-ம் தேதி கோராபுட் ஜில்லாவின் முதல் கிராமதானமாக கோபர்பள்ளி கிடைத்தது. இது 'சந்த்' ஜாதியினரின் கிராமம். இக்கிராமத்தின் ஜனத்தொகை 159. இங்குள்ள மொத்த நிலம் 177 ஏக்கர்கள். ஆதிவாசிகள் கிராமங்களில் பெரும்பாலும் ஒரே ஜாதியினர்தான் இருப்பர். அவர்களுக்குள் சமுதாய ஒற்றுமை அதிகமாக இருக்கும். ஆனால் இப்படி ஒரே ஜாதியினர் வாழும் கிராமங்கள் தான் கிராம தானமாகக் கிடைத்தன என்பதல்ல. கிராமதானம் ஆரம்பமான கட்டத்தில் முதன் முதலில் கிடைத்த கிராமங்களெல்லாம் பல ஜாதியினர் வாழும் கிராமங்களே. உதாரணமாக சந்திரபூர் என்ற கிராமத்தில் 'பாயிக்' ஜாதியினரும் 'சந்த்' ஜாதியினரும் கூடி வாழ்கின்றனர்.

ஆதிவாசி மக்கள் நிலத்தை அவ்வளவாக விரும்புவதில்லை என்றும், அதன் காரணமாகத்தான் அவர்களிடையே கிராமதான இயக்கம் எளிதில் பரவ முடிந்ததென்றும் சிலர் கூறுகின்றனர். ஏனென்றால் அவர்களில் பலர் மலைகளில் திரிந்துகொண்டும், பயிர்த் தொழில் செய்துகொண்டும் காணப்படுகிறார்கள். இது தான் மேற்கூறிய தவறான எண்ணம் ஏற்படுவதற்குக் காரணம். காடுகளை அழித்து பயிர் செய்வது குறித்து நாம் முன் அத்தியாயத்தில் கூறியுள்ளோம். ஆதிவாசி மக்களுக்கு நிலத்திலுள்ள விருப்பம் மற்றவர்களை விடக் குறைவல்ல. இன்று அவர்களிடையே, உயிர் வாழ்வதற்கு நிலத்தைத் தவிர வேறெதுவுமில்லை என்ற

எண்ணம் ஏற்பட்டுள்ளது. ஆகவே நிலத்தின்மீது அவர்களுக்கிருந்த ஆசை மேலும் வலுத்துவிட்டது. ஆனால் நிலத்தின் மீது உரிமை கொண்டாடும் விஷயத்தில் நமக்கும் அவர்களுக்கும் ஒரு வேற்றுமை இருக்கத்தான் செய்கிறது. அதாவது, நிலத்தை நாம் சொத்தாக பாவிக்கிறோம், பயிரிடும் சாதனமாக பாவிக்கின்றனர் அவர்கள்; தமக்கு உபயோகமில்லாத நிலத்தை பிறருக்கு விட்டுவிடுகின்றனர். இதுதான் வித்தியாசம். நிலத்தைச் சுரண்டும் கருவியாக்கும் எண்ணம் அவர்களுக்கேற்படவேயில்லை.

சின்னாட்களுக்கு முன்பு இங்கு ஒரு பழக்கமிருந்து வந்தது. வருஷத்தில் ஒரு குறிப்பிட்ட நாளில் யார் யாருக்கு நிலம் தேவையில்லையோ அவர்களெல்லாம் நிலத்தை கிராமத்தின் தலைவனிடம் ஒப்படைப்பர்; யார் யாருக்கு நிலம் தேவையோ அவர்கள் தலைவனிடம் நிலம் பெற்றுக் கொள்வர். இம்முறைகளெல்லாம் கிராமதான இயக்கத்திற்கனுகூலமாக இருந்தன. ஆனால் இதையெல்லாம்விட மிகுந்த அனுகூலம் சுதந்திரப் போராட்டத்தின்போது மக்களுக்கு ஏற்பட்ட எழுச்சியே.

இதெல்லாம் தவிர, விநோபாஜியின் கட்புலனாகாத ஒளியும், விசுவநாத்ஜி போன்றவர்களின் அன்பு கலந்த சலியா உழைப்பும் சேர்ந்து கோராபுட் ஜில்லாவில் கிராமதான இயக்கத்தின் வெற்றிக் கொடியை நாட்டின. 1955, ஜனவரி 26-ம் தேதி விநோபாஜி உத்கல் பூமியில் காலடி வைப்பதற்கு முன்னமேயே 26 கிராமதானங்கள் அங்கு கிடைத்திருந்தன.

உத்கல் மாகாணத்தின் கிழக்குப் பகுதிகளான பாலேஸ்வர், மயூர்பஞ்ச் ஆகிய ஜில்லாக்களிலும் இயக்கம் வேகமாகப் பரவியது. பாலேஸ்வர் ஜில்லாவில் அரசியல் சுதந்திரப் போராட்டத்தின் எழுச்சி மக்களிடையேயிருந்து மறைந்து போகவில்லை. மேலும் தளரா உழைப்புக்குச் சித்தமான தொண்டர்கள் இயக்க

வேலைகளில் இறங்கினர். இதன் பயனாக பாலேஸ்வரி லும், மயூர்பஞ்சிலும் கிராமதானங்கள் கிடைக்க ஆரம் பித்தன. 1955, ஜனவரி 26-க்குள் முறையே 7, 12 கிராமங்கள் இந்த ஜில்லாக்களில் கிராமதானமாகக் கிடைத்தன. இவ்வாறு உத்கல் மாகாணத்தில் மொத்தம் 46 கிராம தானங்கள் கிடைத்தன.

இதனால் மகிழ்ச்சியடைந்த வினோபாஜி உத்கல் வரு முன் ஒரு செய்தி அனுப்பியிருந்தார். "உத்கலில் நிலப் புரட்சிப் பேராறு பிரவாகமெடுத்தோடும் என்பதில் சந்தேகமில்லை" என்று அவர் அதில் குறிப்பிட்டிருந்தார். "பீஹாரில் பூரண பூமிதானம், உத்கலில் நிலப்புரட்சி, ஏனைய கிராமங்களில் விடுதலை முழக்கம்" என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

VI

பாத யாத்திரையில் அனுபவங்கள்

உத்கலை அடைந்தவுடன் விநோபாஜி நிலப்புரட்சியின் வெற்றிக்கு ஒத்துழைக்கும்படி மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். சமுத்திரக்கரை ஜில்லாக்களில் அவர் செய்த யாத்திரையின் பலனாக சில்லரை கிராம தானங்கள் கிடைத்தன. பாலேஸ்வரில் ஒன்று, கேயுஞ்சரில் இரண்டு, மற்றும் கட்டாக், பூரி ஜில்லாக்களில் ஒவ்வொன்று கிராம தானங்கள் கிடைத்தன. இக்கிராமங்களில் வாழும் மக்கள் விநோபாஜியை சந்தித்து தங்கள் சந்தேகங்களுக்கு விளக்கம் கண்டுகொண்டனர். ஆனால் விநோபாஜியின் கண்கள் கோராபுட் ஜில்லாவின் மீது படிந்திருந்தது. எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரம் அங்கு போய்ச் சேரமுடியுமோ அவ்வளவு வேகமாகத் தம் பிரயாணத் திட்டம் தயாரித்தார். அங்கு தொண்டர்கள் மேலும் மேலும் கிராம தானங்கள் பெறும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். அத்துடன் தோட்ட பிரதேசமான கஞ்சம் ஜில்லாவின் ஆதிவாசி ஏஜென்ஸி பிரதேசத்திலும் இயக்கக் காற்று வீச ஆரம்பித்தது. கஞ்சத்தின் ஆதிவாசி ஏஜென்சி கோராபுட் ஜில்லாவை விட மிகவும் பிற்பட்ட பிரதேசம். சுதந்திரம் கிடைத்த பின்பும் அங்கு அடிமைத்தனமும், பயமுறுத்தி வேலை வாங்கும் பழக்கமும் இருந்து வந்தன. கோபபாபுவின் பாத யாத்திரையின்போது அங்குள்ள மக்கள் படும் கஷ்டங்கள் எல்லாம் வெளிக்கு வந்தன. ஸ்ரீமதி மாலதிதேவி அம்மையார் உள்ளமுடைந்து அங்கேயே தங்கி நிர்மாண வேலை ஸ்தலங்கள் ஆரம்

பித்தார். இப்படியாக அங்கு ஒரு புதிய தென்பு ஏற்பட்டு விநோபாஜி பாதயாத்திரை வருமுன் 12 கிராம தானங்கள் கிடைத்தன.

இந்த ஜில்லாவில் 1955 மே, 19-ம் தேதி விநோபாஜியின் கைகளால் கிராமதானமாகக் கிடைத்த கிராமங்களிலிருந்து முதல் தடவையாக நில விநியோகம் நடைபெற்றது. அவ்வமயம் கிராமதான இயக்கத்தை "அஹிம்சையின் அணுகுண்டு" என்று குறிப்பிட்டார் விநோபாஜி. "அணுகுண்டின் ஒவ்வொரு சோதனையும் நஞ்சைக் கொட்டி உலகச் சூழ்நிலையை அசுத்தப் படுத்துகிற மாதிரியல்லாமல் ஒவ்வொரு கிராமதானமும் சூழ்நிலையைச் சுத்தப்படுத்துகிறது" என்று மேலும் கூறுகையில் அவர் குறிப்பிட்டார். கஞ்சத்தில் ஆரம்பத்தில் கிடைத்த கிராமங்களில் நிலவிநியோகத்தை விநோபாஜியே நடத்தினர். மேலும் மேலும் கிராம தானங்கள் கிடைத்துக்கொண்டே யிருந்தன.

கோராபுட் ஜில்லாவில் கிடைத்த வெற்றிகளை ஆதாரமாகக் கொண்டு உத்கல் மாகாணத்திலுள்ள தொண்டர்கள், தங்கள் சக்தியை அங்குமிங்குமாகச் செலுத்திக் குறைப்பதைவிட ஒன்று சேர்த்து கோராபுட் ஜில்லாவிலேயே செலவிடுவது என முடிவு செய்தனர். அப்பொழுதுதான் விநோபாஜியின் யாத்திரை வெற்றி யடையும் என்று அவர்கள் திட்டமிட்டனர். ஆகவே ஏனைய ஜில்லாக்களில் சேவை செய்யும் தொண்டர்கள் அனைவரையும் அங்கு அனுப்பி வேலையை மேலும் தீவிர மாக்கினர்.

மே, 29-ம் தேதி விநோபாஜி கோராபுட் யாத்திரையின் முதல் முகாமை அடைந்தார். அன்றையதினம் 79 கிராமதானங்கள் விநோபாஜியிடம் சமர்ப்பிக்கப்பட்டன. "கோராபுட் ஜில்லாவில் அனேக கிராமங்கள் நிலமனைத்தையும் தானமாகத் தந்துவிட்டன. இதை நான் மிகவும் மதிக்கிறேன். கடந்த ஒன்றரை வருஷமாக இங்கு

காட்டில் வசிக்கும் மக்களுக்கு பூமிதானக் கொள்கைகள் பிடிக்கின்றன என்று கேள்விப்படுகிறேன். கோராபுட் ஜில்லாவில் உள்ள கிராமங்களனைத்தும் தானமாகக் கிடைக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன் '' என்று முழக்கினார் விநோபாஜி.

'' நகரமக்கள் தங்கள் சொந்தக் காரியத்தை மட்டும்தான் சிந்திக்கின்றனர், அண்டை அயலானைப் பற்றி அவர்களுக்கு எவ்விதக் கவலையுமில்லை. ஆனால் கிராமவாசிகளான நாம் அன்பினால் ஒன்று கூடியுள் ளோம். பட்டணவாசிகள் ஒருவரையொருவர் கொள்ளை யடிக்கின்றனர். கிராமவாசிகளான நாமும் ஒருவரை யொருவர் கொள்ளையடிப்போமானால் நம் நிலை மிகவும் மோசமாகிவிடும். ஆகவே நாமெல்லோரும் ஒன்றுகக் கூடி ஒரே குடும்பமாக அன்புடன் வாழ வேண்டுமென்று முடிவு செய்யவேண்டும். நமது, இன்னொருவனுடையது என்ற பேதத்தை ஒழித்துவிடுவோம்.'' கிராமதான இயக் கத்தை முழு மூச்சுடன் நடத்த கோராபுட்டில் கூடியிருந்த தொண்டர்களிடையே விநோபாவின் மேற்கண்ட பேச்சு ஒரு புத்துணர்ச்சியை உண்டாக்கியது. இந்த ஜில்லா வில் காட்டின் பரப்பளவு 10,000 சதுர மைல்கள். இத் துடன் ஒப்பிட்டு நோக்குமிடத்து சாலைகள் மிகக் குறைவு. மழைகாலத்தில் மழை தன் கைவரிசையைக் காட்ட ஆரம்பித்தவுடன் காடுவளர ஆரம்பித்துவிடு கிறது; மனிதன் கவனக் குறைவாக விட்டுவிட்ட சாலைகளை அது தன்னுடன் சேர்த்துவிடுகிறது. இக் காலங்களில் பாதயாத்திரையினருக்கு மிகுந்த இடை யூறுகள் ஏற்படும். ஆகவே ஆரம்பத்தில் கோராபுட் ஜில்லாவில் விநோபாஜி ஆறு வாரங்கள் யாத்திரை செய் வதென்றும் பின்பு அதற்கு வடக்கில் உள்ள அதிகக் கஷ்டமில்லாத ஜில்லாக்களில் யாத்திரை செய்வதென்றும் முடிவு செய்யப்பட்டது. ஆனால் சிலதின அனுபவங் களிலேயே விநோபாஜி அங்கு மேலும் தங்கியிருந்து

அதிக கிராமதானங்கள் பெறுவதென முடிவுசெய்தார். அதன்பலனுக கொட்டும் மழையில், பாரதத்தின் கடின மான இந்தப் பிரதேசத்தில் பூமிதான இயக்கத்தின் மிகவும் வேகமான அத்தியாயம் எழுதப்பட்டது.

மேலே மழை கொட்டுகிறது, குளிர்காற்று முட்களைப் போல் உடலில் தைக்கிறது. ஆனால் இவற்றையெல்லாம் கருதாது விநோபாஜியின் சொற்பொழிவைக் கேட்க மக்கள் அமைதியாக அமர்ந்திருக்கின்றனர். தாய்மார்கள் குழந்தைகளை மடியில் வைத்துக்கொண்டு அடுப்பருகில் உட்கார்ந்திருப்பது போல் உட்கார்ந்துகொண்டிருக் கின்றனர். இம்மாதிரிக் காட்சிகள் அக்காலத்தில் கோரா புட்டில் அடிக்கடி காணமுடிந்தது.

காலையில் கடிகாரமுள் யாத்திரை நேரத்தைக் காண் பித்தவுடன், ஐம்பது மைல் வேகத்தில் புயல் அடித் தாலும், முகாமின் கூரையைத் துளைத்துக்கொண்டு தலையில் தண்ணீர் கொட்டினாலும், சபைகூடும் இடம் மழைஜலம் நிரம்பி வழியும் வயல்போல் காட்சி அளித் தாலும், விநோபாஜியின் யாத்திரை தடைபடுவதில்லை, பிரார்த்தனைக் கூட்டங்கள் நடந்து கொண்டுதானி ருந்தன. ஒரு நாள்கூட வேலைத்திட்டம் நடைபெறாமல் நிற்கவில்லை. தொண்டர்களுக்கு இது ஒரு படிப் பினையாக இருந்தது. அடர்ந்த காடுகள், கொட்டும் மழை, மலேரியா ஜுரம், காட்டுமிருகங்கள் இவையெதை யும் பொருட்படுத்தாமல் அவர்கள் ஜில்லாக்களின் மூலை முடுக்குகளெல்லாம் சென்று கிராமதானத்தின் செய்தி யைப் பரப்பினர். இத்தீரச் செயல் புரிவதற்கு அவர்கள் மலேரியாவுடன் அதிகமாகப் போராடவேண்டியிருந்தது. இம்மாதங்களில் மாதத்திற்கொரு முறையாவது மலேரி யாவினல் பாதிக்கப்படாத தொண்டர்கள் மிகச் சொற் பமே. விநோபாஜியின் யாத்திரை கோஷ்டியைச் சேர்ந்த 23 நபர்கள் கோராபுட் ஜில்லாவை அடைவதற்கு ஒரு வாரம் முன்னமேயே ஜுரத்தால் பீடிக்கப்பட்டனர்.

"அனேக தொண்டர்கள் உடல்நலம் குன்றியிருக்கின்றனர். அவர்கள் சில நாட்கள் ஓய்வெடுத்துக் கொண்டு உடனே மீண்டும் யாத்திரை புறப்பட்டு விடுகின்றனர். ஏனென்றால் பாபா மழையில் சுற்றிக் கொண்டிருப்பது அவர்களுக்குத் தெரியும். ஆனால் பாபாவிற்கு எல்லாவித சௌகரியங்களும் உள்ளன. அதைப்போல் தொண்டர்களுக்கிருப்பதில்லை" என்று தொண்டர்கள் நோய் வாய்ப்படும் கவலையில் விநோபாஜி கூறினார்.

"தொண்டர்கள் நோய்வாய்ப் பட்டிருக்கும்போது டாக்டர்கள் மிகுந்த கவனத்துடன் இவர்களுக்குச் சிகிச்சை செய்கின்றனர். தொண்டர்கள்தாம் இயக்கத்தின் ஜீவநாடி என்று டாக்டர்களுக்குத் தெரிந்திருக்கிறது. ஆகவே டாக்டர்களுக்கு என் நன்றி."

இவ்வளவு கடினமான உழைப்பின் பயனாக ஆகாயம் அளிக்கும் மழையோடு போட்டி போட்டுக்கொண்டு "கிராமதான" இயக்க மழையும் ஆரம்பித்துவிட்டது. யாத்திரை ஆரம்பித்த முதல் மாத முடிவிற்குள் 125 கிராமதானங்கள் கிடைத்தன. இரண்டாவது மாதத்தில் 207-ம், அக்டோபர் ஒன்றுந் தேதி விநோபாஜி ஒரிஸ்ஸாவை விட்டு வெளியேறும்போது கோராபுட் ஜில்லாவில் மட்டும் 605 கிராமதானங்களும், மாகாண முழுதும் 812 கிராமதானங்களும் கிடைத்திருந்தன.

விநோபாஜி கோராபுட்டை விட்டபின்பும் புதிதாகப் பல கிராமங்கள் தானமாகக் கிடைத்தன. ஏப்ரல் முடிவுக்குள் மேலும் 158 கிராமங்கள் கோராபுட் ஜில்லாவில் தானமாகக் கிடைத்தன. வேறு ஜில்லாக்களிலும் கிடைத்த தான விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இரண்டு மூன்று மாதங்கள் நிலப் பங்கீட்டில் அதிக கவனம் செலுத்தப்பட்டதால், புதிதாக தானம் பெறுவதற்கு முயற்சிக்கவில்லை. புதிதாகக் கிடைத்தவையெல்லாம் தாமாகவே கிடைத்தன.

ஏப்ரல் 1956, முடிவிற்குள் கிடைத்த கிராமதானங்களின் புள்ளிகள்

கோராபுட்	763	பாலேஸ்வர்	159
கஞ்சம்	50	மயூர்பஞ்ச்	62
சம்பல்பூர்	5	கேவுஞ்ஜர்	2
கட்டாக்	1	டேங்கானல்	1
பூரி	1	சுந்தர்கட்	3
		மொத்தம்	1047

இவற்றுள் கோராபுட் ஜில்லாவின் கிராமங்களைக் குறித்துமட்டும் விவரங்கள் கிடைத்துள்ளன. கோராபுட் ஜில்லாவில் கிடைத்த 763 கிராமங்களின் மொத்த ஜனத் தொகை 1,06,320. இது ஜில்லா மக்கள் தொகையில் பன்னிரண்டில் ஒரு பங்காகும். கிராமங்களின் தொகை ஜில்லாவின் மொத்த கிராமங்கள் தொகையில் எட்டில் ஒரு பங்கு.

இக்கிராமங்களின் நிலங்களைக் குறித்து உண்மை யான புள்ளிகள் கிடைப்பதற்கில்லை. ஏனென்றால் இங் குள்ள நிலங்கள் இதுவரையிலும் சர்வே செய்யப்பட வில்லை. ஆகவே தானபத்திரத்தில் குறிப்பிடப்பட்டது சுமார் அளவாகவே இருக்கும். இதுவரையிலும் 251 சர்வே செய்யப்பட்ட கிராமங்களின் புள்ளிகள் கிடைத் துள்ளன. இவற்றின் மொத்த நிலத்தொகை 1,09,996 ஏக்கர்கள். இவற்றுள் பயிர் செய்யப்படும் நிலம் 27,672 ஏக்கர்களும், சாகுபடி செய்ய லாயக்கான தரிசுநிலம் 25,683 ஏக்கர்களும், சாகுபடி செய்ய லாயக்கற்ற தரிசு நிலம் 41,478 ஏக்கர்களும் ஆகும். இதைத் தவிர இதில் பொது உபயோகத்தின் நிலம் 18,713 ஏக்கர்களும், சர்க்கார் நிலம் 449 ஏக்கர்களும் அடங்கியுள்ளன.

763 கிராமங்களின் நில அளவு உத்தேசமாக 3 லட்சம் ஏக்கர்களுக்கு அதிகமாக இருக்கும். இது ஜில்லாவின் மொத்த அளவில் இருபதில் ஒரு பங்கு. இவ் விரு நூற்றைம்பத்தொன்று கிராமங்களிலுமாக 34,640 வயல்கள் உள்ளன. எனவே ஒரு வயலின் பரப்பு சராசரி 8 ஏக்கர் இருக்கக்கூடும் என்று கணக்கிட்டறியலாம். இதன்படி ஒரு நபருக்கு 0·78 ஏக்கர் வீதம் கிடைக்கும். சாகுபடிக்கு லாயக்கான தரிசு நிலமும் நபர் ஒன்றுக்கு 0·75 ஏக்கர் வீதம் இருக்கிறது.

ஆனால் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சராசரி எண்களும் புள்ளி விவரங்களும் தவருன மதிப்பீடுகளாக இருக்கவும் கூடும். இவற்றுள் சில கிராமங்களில் ஒவ்வொரு நபருக்கும் நாலு அல்லது ஐந்து ஏக்கருக்கு மேல் கொடுக்குமளவுக்கு சாகுபடிக்கு லாயக்கான நிலம் இருக்கலாம். ஆனுல் மற்றும் சில கிராமங்களிலோ மலையடிகளில் இருப்பவைகளில் வாழும் ஜனங்களுக்கு நபர் ஒன்றுக்கு கால் ஏக்கர் கொடுக்குமளவுக்குக் கூட நிலமிராது. ஆகவே கிராமதானமாகக் கிடைத்துள்ள கிராமங்களின் நிலவிநியோகம் மிகவும் சிரமமான காரியமாகத்தான் இருக்கிறது. தொண்டர்கள் கவனத்துடன் வேலை செய்தால்தான் சமாளிக்க முடியும்.

VII

கனவு நனவாகிறது

கோராபுட்டில் கிராமதானம் கிடைத்த கிராமங்களின் விநியோகத்தை விநோபாஜியே ஆரம்பித்து வைத்தார். நில விநியோகம் கிராமமக்களே தொண்டர்களின் உதவியுடன் செய்து விநோபாஜியிடமிருந்து விநியோகப் பத்திரமும் ஆசீர்வாதமும் பெற்றுவந்தனர்.

பங்கீட்டின் கொள்கை இதுதான் : கிராமத்திலுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதன் அங்கத்தினர் தொகைக்கேற்ப நிலத்தில் சமப்பங்கு கொடுக்கப்பட வேண்டும். ஐந்து நபர்களுள்ள குடும்பத்திற்கு ஐந் தேக்கர்கள் கொடுக்கப்பட்டால் ஏழு நபர்கள் உள்ள குடும்பத்திற்கு ஏழேக்கர்கள் கொடுக்கப்படும். இதில் நிலத்தின் தரத்தையும் கவனிக்க வேண்டும். ஒவ்வொரு குடும்பத்துக்கும் நன்செய், புன்செய் நிலங்கள் சமமாகக் கிடைக்கும்படி பங்கிடவேண்டும்.

அனேக கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இவ்வாறு சமப் பங்கீட்டிற்குத் தயாராயினர். சிற்சில கிராமங் களில் சில குறைபாடுகள் இருந்தன. குறிப்பாக பெரிய நிலச்சுவான்தார்கள் உள்ளவிடங்களில் குறைகள் நிகழ்ந் தன. அதிக நிலம் வைத்திருந்த நிலச்சுவான்தார்கள் பங்கீட்டு முறைப்படி மிகக் குறைவாக நிலம் கிடைக்கும் பொழுது மனமுடைந்து போகாமலிருக்க அவர்களுக்குச் சிறிது நிலம் அதிகமாகவே கொடுக்கப்பட்டது. பெரிய நிலச்சுவான்தார்கள் கிராமதானத்திற்குச் சம்மதிக்கச் செய்ய அவர்கள் பங்கைச் சிறிது அதிகமாகவே கொடுக்க மக்கள் ஏற்பாடு செய்தனர். இது மக்கள் ஏகமனதாக முடிவு செய்யும் விஷயம். இம்மாதிரியான நிலச்சுவான் தார்கள் உழைக்கக்கூடியவர்கள்தாம், ஜமீந்தார் என்று கௌரவமாக உழைக்காமல் இருப்பவர்களல்ல. தங்கள் நிலத்தில் இயன்ற அளவு உழைக்கும் ஊக்கம் படைத்தவர்

கள். ஆகவே அவர்கள் உழைப்பிற்கு வேண்டிய அளவு நிலம் கிடைத்தாலே திருப்தியுடனிருக்கின்றனர். நிலத்தில் பாடுபடாத மத்திய வகுப்பைச் சேர்ந்த மக்கள் வாழும் கிராமங்கள் இன்னும் கிராமதானமாகக் கிடைக்கவில்லை. இவ்வகுப்பைச் சேர்ந்த மக்களுக்கும் விநோபாஜி வேண்டுகோள் விடுத்துள்ளார்: "முழு மனதுடன் கிராமதான இயக்கத்தில் ஒத்துழையுங்கள். உங்கள் நிலங்களை விவசாயியிடம் விட்டு விடுங்கள். அவன் பத்து வருடங்களுக்கு அன்புடன் அவைகளை உழுது பயிரிடுவான். அப்பொழுது நீங்கள் உங்கள் குழந்தைகளுக்குப் பயிர்த் தொழிலில் பயிற்சியளியுங்கள். பின்பு நிலம் உங்களுக்கே கிடைத்துவிடும்."

இப்படிப்பட்ட ஜனங்களும் அன்புடன் கிராமதான இயக்கத்திற்கு நிலங்களை விட்டுவிடுவார்களானால் அங்கு வாழும் ஏழை மக்கள் அவற்றை அன்புடன் ஏற்றுக் கொள்வர். இதுவரை ஏற்பட்ட விநியோக நிகழ்ச்சிகள் இந்த நம்பிக்கையைத் தான் கொடுக்கின்றன.

பேராசை ஒரு பக்கம், தியாக உணர்ச்சி மறுபக்கம்; கவனம் ஒரு பக்கம், சந்தேகம் மறுபக்கம்; சுயநலம் ஒருபக்கம், சமுதாய நலன் பேணும் குணம் மறு பக்கம்—இப்படியாக எண்ணங்களின் போராட்டங்கள் கிராமவாசிகளின் இதயங்களில் இடம் பெறுகின்றன. அவைகளனைத்தும் கிராம சபை கூடும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு அழிக்கப்படுகின்றன. பின்பு விநோ பாஜி பிரார்த்தனைக் கூட்டத்தில் ஒவ்வொரு குடும்பத் தலைவனுக்கும் இதற்குமுன் இருந்த நிலமும், பங்கீட்டுக் குப் பின்பு கிடைக்கும் நிலமும் இவ்வளவு என்று கூறி தானபத்திரம் அளிக்கும்பொழுது அவன் நெற்றியில் திலகமிட மக்கள் கைதட்டி மகிழ்ச்சியாரவாரம் செய்வர். சர்வ சாதாரணமான இவ்விழாவின் பின்னணியில் எவ் வண்ணம் மகத்தானதொரு சமுதாய அமைப்பின் அடிப்படை அடங்கியுள்ளதென்பதை அதைப் பார்த்

துக் கொண்டிருக்கும் யாரும் எளிதில் புரிந்துகொள்ள முடியாது. நேற்றைய தினம் 50 ஏக்கர் நிலத்திற்கு உரியோன், இன்று 10 ஏக்கர் உழுபவனுகிருன்; நேற்று நிலத்தின் ஒரு காணிக்குக்கூட உரிமையற்றிருந்தவன் இன்று பன்னிரண்டு ஏக்கர் நிலம் உழுது பயிரிடும் உரிமை பெறுகிருன். இருவரும் நல்லுணர்ச்சியோடு தான் பங்கீட்டுப் பத்திரம் பெறுகின்றனர். நிலம் போயிற்றே என்ற துக்கம் யார் முகத்திலும் தென்படவில்லை. உதாரணமாக 'சார்பாடு' என்ற கிராமத்தின் நரசிம்மலு என்பவரை எடுத்துக் கொள்ளுவோம். இவருக்கு 24 ஏக்கர் நிலமிருந்தது. ஆனால் பங்கீட்டிற்குப் பிறகு $3\frac{1}{2}$ ஏக்கர்தான் கிடைத்தது. அவ்வளவாவது கிடைத்தது ஆண்டவன் பிரசாதம் என்று நம்பி நிலப் புரட்சியின் தத்துவத்தைப் பரப்பும் கைங்கரியத்தில் அவர் இறங்கிவிட்டார். அவர் கிராமத்தைச் சுற்றியிருந்த பத்துப் பன்னிரண்டு கிராமங்கள் அவர் செய்த தீவிர முயற்சியின் பயனுக கிராமதானமாகக் கிடைத்தன; அவற்றைப் பங்கிடும் வேலையையும் அவரே முன்னின்று நடத்தி வைத்தார். இவரைப் போலவே 'பெத்த வாலடா' என்ற கிராமத்தில் சிதாராபுனராம் என்பவர் தன் உடைமையான அறுபது ஏக்கர்களையும் தானம் செய்து ஐந்து ஏக்கர் மட்டும் பெற்றுக்கொண்டார். திவுடிகுடா கிராமத்தைச் சேர்ந்த காடாக்கா ஹாகின்னு என்பவர் 30 ஏக்கர் தானம் செய்து 11 ஏக்கர் பெற்றுக் கொண்டார். தலா கிராமத்தைச் சேர்ந்த முதிநாயக் என்பவர் 60 ஏக்கரில் 50 ஏக்கரை தானம் செய்து விட்டார். இப்படி எத்தனையோ உதாரணங்கள்! இவர்களின் செயல்களில் தியாகம், கருணை, சமுதாய நலம் போன்ற குணங்கள் பொதிந்துள்ளன!

ஒரு முகாமில் சமக்கிரதானம் நடைபெற்ற கிராமங்களின் அமைப்பு முறைகளைக் கண்டறிய வெளியிலிருந்து தொண்டர்கள் வந்திருந்தனர். இவர்களுள் சிலர் கிராம

வாசிகளின் மனோநிலையை அறிய அவர்களிடம் சென்று, "நீங்கள் ஏன் நிலமனைத்தையும் இப்படி தானமாகக் கொடுத்து விட்டீர்கள்? காலம் செல்லச் செல்ல உங்களுக்கு இதனால் பெரிதும் கஷ்டங்கள் ஏற்படுமே" என்று கூறினர். "ஆண்டவன் உங்களுக்கு மட்டும் புத்தியும், தர்ம சிந்தனையும் கொடுக்கவில்லை, எங்களுக்கும் சிறிது கொடுத்திருக்கிறார். நாங்கள் நன்கு யோசித்து கிராமத்தின் நலனுக்காக வேண்டித்தான் இப்படிச் செய்திருக்கிறோம்" என்று பதில் கூறினர் அவர்கள்.

கிராமதான இயக்கம் எங்கும் தங்குதடையின்றி நேரான பாதையிலேயே முன்னேற முடியும் என்பதல்ல. இயக்கம் பரவ ஆரம்பமானவுடன் எதிர்ப்புகளும் ஏற்பட்டன. சில அரசியல் தலைவர்கள் பூமிதான இயக்கத்தை எதிர்த்து தங்கள் கருத்துக்களை வெளியிட்டனர். இதை சாக்காக வைத்துக் கொண்டு கோராபுட்டிலும் சிலர் எதிர்க்க ஆரம்பித்தனர். இவர்கள் கிராமம் கிராமமாகச் சுற்றி மக்களிடம் கிராமதான இயக்கத்திற்கெதிராகப் பிரசாரம் செய்தனர். இயக்கத்தை அவதூறாகப் பேசி அதனால் பயங்கர விளைவுகள் ஏற்படுமென்று மக்களை பீதிக்குள்ளாக்கினர். இதனால் பத்துப் பன்னிரண்டு கிராமதானங்கள் வாபஸ் வாங்கப்பட்டன. இது சம்பந்தமாகப் பேசுகையில் வினோபாஜி குறிப்பிட்டார்: "எதிர்ப்பு நியாயம்தான்; எதிர்ப்பே இல்லாமற்போனால் நாம் எங்கே தவறு செய்கிறோம் என்று கூடத் தெரியாமற் போய்விடும். பரம்பரை பரம்பரையாக அனுபவித்து வந்த எஜமானத்துவத்தை அகற்றும் வேலையில் நாம் ஈடுபட்டிருக்கும் பொழுது, பழமையில் நம்பிக்கை கொண்டிருக்கும் சிலர் எதிர்ப்பது சகஜம்தான்."

VIII

எழுச்சியடைந்தோர் சக்தி திரட்டுகின்றனர்!

கிராமதானம் செய்யப்பட்ட கிராமங்களில் வாழும் மக்களுக்கு புதுவாழ்வு காண மட்டற்ற உற்சாகம் ஏற்படும். அவர்களில் முடங்கிக் கிடந்த 'கர்ம சக்தி' எழுச்சி அடைந்து செயலுருவில் வெளிவரத் துடிப்பது இயற்கையே. இதைத் தெரிந்துகொண்டுதான் விநோபாஜி, பிரார்த்தனைக் கூட்டங்களிலெல்லாம் கிராமப் புனரமைப்பு எம்முறையில் இருக்கவேண்டும் என்பது குறித்துப் பேசுவது வழக்கம். ஆனல் இத்துடன் மட்டும் காரியம் முடிவுபெறுவதில்லை. மக்களுள் எழுச்சியடைந்த 'கர்ம சக்தி' செயல் படுவதற்கு சரியான பாதை காண்பிக்கப்படாவிட்டால் அது தவருன வழியில் செலவிடப் பட்டும், சின்னபின்னப்பட்டும் அழிந்துபோகும்!

ஆகவே, இக்கிராமங்களின் உடனடிப் புனரமைப்புப் பொறுப்பை விநோபாஜி உணர்ந்தார். பாரதம் முழுதுமுள்ள நிர்மாண ஊழியர்களுக்கு, கோராபுட் வந்து இவ்வேலையில் உதவக் கோரி விநோபாஜி வேண்டுகோள் விடுத்துள்ளார். "நான் இங்கேயே தங்கிவிட்டு நிர்மாண வேலைகள் ஏன் செய்துகொண்டிருக்கக் கூடாது?" என்று அவருக்கு அடிக்கடித் தோன்றுவதுண்டு. இப்பிரதேசத்தின் இயற்கை வனப்பும், மக்களின் இனிய சுபாவமும் அவருக்கு நன்கு பிடித்துவிட்டன. அவர் அடிக்கடி கூறுவதுண்டு: "இங்குள்ள இயற்கை வனப்பு இதயத்தைக் கவருகிறது. வெயில் காலங்களில் கூட வேதனை தோன்றுவதில்லை. பச்சைப் பசேலென்ற மலைச்சாரல்கள் தண்மை தருகின்றன. இதைப்போலவே இன்பமூட்டுவது இங்குள்ள மக்களின் சுபாவம். முகத்தில் நிலவும் களை அவர்கள் உள்ளப்பண்பைக் காண்பிக்

கிறது. இவர்கள் விருந்தோம்பலிலும் யாருக்கும் குறைந்தவரல்ல.''

சில நண்பர்கள், ''இவ்வளவு கிராமதானம் கிடைத்ததே போதாதா? ஏன் அதிகம் வேண்டுமென்று பேராசை கொள்ள வேண்டும்? இந்தக் கிராமங்களை வைத்துக்கொண்டு கிராம ராஜ்யம் நடத்தி, உலகிற்கு உதாரணம் காண்பிக்கலாமே'' என்று அவரிடம் தெரிவித்தனர்.

சில தொண்டர்களும் இப்படியே நினைத்தனர். இவ்வளவு அதிகம் கிராமங்களைப் புனரமைப்பதே பெரும் பொறுப்புதான். இவற்றின் புனர்நிர்மாணம் பூர்த்தியாகும் வரை மேற்கொண்டு கிராமதானம் ஏற்றுக்கொள்ளாமல் ஏன் இருக்கக்கூடாது என்று கருதினர்.

இவ்விஷயத்தில் தம் கருத்துக்களை தொண்டர்களுக்குத் தெரிவித்தார் விநோபாஜி. அரசியல் சுதந்திரம் அடைந்தவுடன் மக்களைத் திரட்டும் வேலையில் நாம் தவறிவிட்டோம். அதன் பலனாக சுதந்திரம் பெற்றும், மேன்மையடையாமலிருக்கிறோம். இதற்குக் காரணம் நம்மிடம் மக்களைத் திரட்டும் சக்தி குறைவானதுதான். ஆனால் இக்குறை இருந்தும் சுயராஜ்யம் கிடைக்கவில்லை என்று கூறிவிடமுடியாது; அல்லது சுயராஜ்யத்திற்கு உழைத்தது தவறென்றும் கூறமுடியாது. அதேபோல பரம்பரை முதலாளித்துவ ஒழிப்பும் சரித்திரத்தில் இடம்பெறப் போகும் மகத்தான நிகழ்ச்சியே. ஆகவே புனர்நிர்மாணம் என்று இருந்துவிட்டு மேற்கொண்டு பிரசாரம் செய்யாமலும் தானம் பெறாமலுமிருப்பதும் முற்றிலும் குறிக்கோளற்ற செய்கையே.

பாரதத்தில் நிலப்புரட்சியால் தட்டியெழுப்பப்பட வேண்டிய பகுதிகள் இன்னும் பல உள. அப்படியிருக்கையில் இந்தப் 'பிரஜா சூய யக்ஞ'க் குதிரை எப்படி ஒரே இடத்தில் தடைப்பட்டிருக்க முடியும்? தம்மைக் குறிப்பிட்டு அவர் கூறினர்—''ஏதாவது ஒரு

கருத்துத் தோன்றினுல் அது மனிதனைச் சுழற்றுகிறது, இயங்கவைக்கிறது; அவனுக்குத் தூண்டுதல் கொடுக்கிறது; இப்படியாகச் சும்மா இருக்கவே விடுவதில்லை. நான்கு மூலைகளிலும் பரவலாக அது பிரசாரமடைந்தாலொழிய அவன் திருப்தி அடைவதில்லை.

"ஏதாவது ஒரு பொருளைக் குறித்து ஒருவனுக்கு புதிய அனுபவம் ஏற்பட்டால் அவன் ஒரே இடத்தில் இருப்பதை இந்து-மத வாழ்க்கைத் திட்டம் தடுக்கிறது. அனுபவம், ஆராய்ச்சி, விருப்பம் ஆகியவை ஏற்படாத வரையில் ஒரே இடத்திலிருந்து கொண்டு வேலை செய்யலாம். ஆனல் இக்குணங்கள் ஏற்பட்ட பின்பு மனிதன் எப்பொழுதும் சுற்றிக் கொண்டேயிருக்க வேண்டும். ஸ்திதப்பிரக்ஞன், ஞானி, பக்தன் ஆகியோர் லட்சணங்களைக் குறிப்பிடுமிடத்து 'அநிகேத: ஸ்திரமதி:'— ஸ்திர புத்தியுடையோன் ஒரேயிடத்தில் இருக்கமாட்டான் என்று கூறப்பட்டுள்ளது. ஸ்திதப்பிரக்ஞன் லட்சணம் கூறுமிடத்து 'புமாம்ஶ்சரதி நிஸ்ப்ருஹ:", அதாவது அனுதினமும் சுற்றிக் கொண்டிருப்போன் என்று கூறப்பட்டுள்ளது. இதற்குப் பொருள் ஸ்திதப்பிரக்ஞர்களெல்லோரும் சுற்றிக் கொண்டேயிருக்கவேண்டும் என்பதல்ல. மனிதனின் வாழ்வில் சுற்றிக் கொண்டிருப்பதும் ஓரம்சம் என்றுதான் கருத்துக் கொள்ள வேண்டும். அதிலிருந்து அவன் விருப்பமற்றவனுகிருன், சமுதாயத்தில் அறிவுப் பிரசாரமும் ஏற்படுகிறது. ஆகவே இந்த ஜில்லாவில் நமக்குப் பெருத்த அளவு உற்சாகம் ஏற்பட்டாலும், நாம் இங்கேயே தங்கிவிட நினைத்தாலும், இதை விட்டகல வேண்டியது நம் கடமை."

விநோபாஜி தாமே கண்நோக்கிச் செய்யவில்லை என்பதற்காக நிர்மாண வேலை தடைப்பட்டுவிடவில்லை. ஒரிஸ்ஸா மாகாணத்தில் ஶ்ரீமதி மாலதிதேவி சௌத்ரி அவர்கள் தலைமையில் 'நவஜீவன் மண்டல்' என்ற பெயரில் ஒரு ஸ்தாபனம் ஆதிவாசிகளிடையே நிர்மாண

வேலைகள் செய்து வருகிறது. கிராமப் புனரமைப்பு வேலைகளை இந்த ஸ்தாபனத்தினிடமே ஒப்படைப்பது என முடிவு செய்யப்பட்டது. விநோபாஜியின் உபதேசங்களுக் கேற்ப இந்த ஸ்தாபனத்தின் விதிகள் சற்று திருத்தி அமைக்கப்பட்டன. 'ஆதிவாசிகள் சேவை' என்ற நோக்கம், 'ஆதிவாசிகளைத்தவிர அப்பிரதேசங்களில் வாழும் இதர மக்களுக்கும் சேவை செய்வது' என்றும், 'சுரண்டலற்றதும், ஆட்சியற்றதுமான ஒரு சமுதாயம் அமைத்தல்' என்றும் திருத்தப் பெற்றது.

அகில பாரத சர்வ சேவா சங்கமும் இவ் விஷயத்தில் அக்கறை கொண்டு, பாரத தேசத்தின் பிரசித்தி பெற்ற ஊழியர் உயர்திரு அண்ணுசாகேப் சகஸ்ரபுத்தே என்பவரைத் தன் சார்பாக நிர்மாண வேலைகளை மேற்பார்வையிட அனுப்பி வைத்தது. இவ்வேலைகளில் வழிகாட்ட திரு சகஸ்ரபுத்தேஜி தலைமையில் நவஜீவன் மண்டலின் ஊழியர்கள் கூடி ஒரு 'நிர்மாணக் குழு' அமைத்தனர்.

எந்த நிர்மாண வேலைகளுக்காக நாம் இந் நாட்டில் கடந்த முப்பது வருடங்களாக மிக்க பற்றுதலுடன் உழைத்து வந்தோமோ அவ்வேலைகள் காய்த்துப் பலன் தர, எழுச்சி யடைந்த மக்கள் வாழும் இப்பிரதேசம் மிக அனுகூலமானது என்பதில் ஐயமில்லை. நிர்மாண வேலைகள் நடைபெற்று வெற்றியடைவதைக் கற்பனை செய்து பார்க்கும் போதே நம் மெய் சிலிர்க்கிறது; அளவுகடந்த மகிழ்ச்சி அடைகிறோம். இவ் வேலையின் மிக முக்கிய முதலீடு இங்கு மக்கள் அடைந்திருக்கும் எழுச்சியாகும். இதை நன்கு பயன்படுத்தி, மேலும் விருத்தியடையச் செய்வதுதான் நம் முதல் கடமை என மீண்டும் மீண்டும் அறிவுறுத்தியிருக்கிறார் விநோபாஜி. கிராமதானம் பெறுவது எப்படி ஓரியக்கமாக நடைபெற்றதோ அதுபோல் நிர்மாண வேலைகளும் ஓரியக்கம் போலவே நடைபெற வேண்டும். அவற்றின் ஒவ்வொரு

பகுதியும் அலேயைப்போல் எல்லாப் பிரதேசத்தையும் எட்ட வேண்டும். மாடுகளேப் பங்கிடுவதாக இருந்தால் ஒன்று அல்லது அரை மாதத்திற்குள் எல்லாப் பிரதேசங் களிலும் அவ்வேலே முடிவுறவேண்டும். கடைகள் திறப்பதாயிருந்தால் அதுவும் அப்படியே நடைபெற வேண்டும். அப்பொழுதுதான் வேலேகளுக்கு ஓரியக் கத்தின் சக்தி ஏற்படும்.

இங்குள்ள சூழ்நிலேயை நன்குணர்ந்து முதலில் செய்யப்பட வேண்டிய வேலேகள் எவை என்பது குறித்து அவர் சில குறிப்புகள் கொடுத்தார். வேலேகள் மிகப் பல செய்யவேண்டியுள்ளன. ஆனல் நம்மிடம் இருக்கும் வரையறுக்கப்பட்ட சக்தியை வைத்துக் கொண்டு எவ்வெவ்வேலேகளே முதலில் செய்து முடிக்கவேண்டுமோ அவற்றை முதலில் எடுத்தும், மற்றவைகளேப் பின்னல் எடுத்தும் நிறைவேற்றுதல் வேண்டும்.

முன்பு பூமியில்லாமல் பங்கீட்டுக்குப் பின் பூமி கிடைக்கப் பெற்றோருக்கு விவசாயக் கருவிகள் கிடைக் கும்படி செய்தல், வியாபாரிகள், வட்டிக் கடைக்காரர்கள் ஆகியோர் மக்களேச் சுரண்டாமல் பார்த்துக் கொள்ளு தல், நீர்ப்பாசன வசதி செய்து கொடுத்தல், கதர்வேலே ஆகிய இந் நான்கு வேலேகளுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். அடுத்தபடியாக கிராமக் கைத் தொழில்கள், துப்புரவு, கல்வி ஆகிய வேலேகளே எடுத்துக் கொள்ள வேண்டும்.

எல்லா வேலேகளும் மக்கள் சக்தியை ஆதாரமாகக் கொண்டு செய்யவேண்டும் என்று விநோபாஜி குறிப் பிட்டார். எல்லா வேலேகளும் மக்கள் மூலமாகவே நடை பெறவேண்டும். எங்கெங்கு எவ்வெவ் வேலேகள் செய் யப்படவேண்டும் என்பதை அவர்களே முடிவு செய்ய வேண்டும். அவர்கள் திட்டங்கள் செயல்பட நாம் வழி காட்டுவோம்; உதவியும் செய்யலாம். ஆகவே அந்தந்தப் பிரதேசங்களிலுள்ள தொண்டர்கள் மூல

மாகவே வேலை நடைபெறுமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

சுதந்திர ஜனசக்தி எழுச்சியடையச் செய்வதற்கும், ஆட்சியற்றதோர் சமுதாயத்தை நிலை நாட்டுவதற்கும், எல்லாத் திட்டங்களையும் வேலைகளையும் மக்கள் சுய சக்தியை ஆதாரமாக்கிச் செய்யும் ஒரே வழிதான் உண்டு. இங்கு மத்திய சர்க்கார், மாகாண சர்க்கார், காந்தி நிதிஆகிய ஸ்தாபனங்கள் எல்லாவித உதவி களும் செய்யச் சித்தமாயிருந்தன. இந்நிலையில் இவர்கள் உதவியை ஏற்றுக் கொள்வதா, உதறிவிடுவதா என்றும், சர்க்கார் உதவியால் சுதந்திர மக்கள் சக்திக் குக் கேடு சம்பவிக்காதா என்றும் கேள்விகள் எழுந்தன.

வினோபாஜி கூறியதையனுசரித்து இக்காரியத்தில் சர்க்காரிட மிருந்தும் வெளியிலிருந்தும் உதவிகள் பெறுவதென்றே முடிவு செய்யப்பட்டது. ஒற்றுமை நிலை குலைந்து, அபிவிருத்தித் திட்டங்களின் நன்மைக ளெல்லாம் விரல்விட் டெண்ணிவிடு மளவிற்கு ஒரு சில ருக்குக் கிடைக்கும் கிராமங்களிலெல்லாம் சர்க்கார் கோடிக்கணக்கில் செலவிடுகிறது. அப்படியிருக்க கிராம தானம் போன்ற பெரும் புரட்சி ஏற்பட்டு, சுயநலத்தை வேரோடறுத்து, ஒற்றுமையும் சாந்தியும் நிலைநாட்டப் பட்ட கிராமங்களுக்குமட்டும் சர்க்கார் உதவி கிட்டாமல் தடுத்துவிடுவதா? இங்கு சர்க்கார் இன்னும் அதிகமாகச் செலவிட வேண்டும். கிராமதானம் கிடைத்த கிராமங் களில் அபிவிருத்தி வேலைகளுக்கு அதிகத் தொகை செல விடப்படும் என அறிக்கையும் சர்க்கார் விடவேண்டும். அப்பொழுது இயக்கத்திற்கு அனுகூலம் ஏற்படும்.

வெளி உதவிகளைப் பெற்றுக் கொண்டாலும் நம் குறிக்கோள் சுயதேவைப் பூர்த்தியும், ஆட்சியற்றதோர் சமுதாய அமைப்புமாக இருக்க வேண்டும். ஆகவே இவைகளுடன் சம்பத்துதான இயக்கமும் இணைந்து நடைபெறவேண்டும். "நான் அதிக நாட்கள் இங்குத்

தங்குவதாயிருந்தால் கிராமதான இயக்கத்தைவிட சம்பத்துதான இயக்கத்தில் தீவிரமாக ஈடுபடுவேன்" என்று வினோபாஜி கூறினர். தொண்டர்கள் தங்கள் வாழ்க்கைக்கு வெளி உதவிகளை நாடாமல் சம்பத்து தானம் பெற்று அதை ஆதாரமாகக் கொண்டு வாழ வேண்டும். குறைந்தபக்ஷம் இதையாவது உடனடியாகச் சாதிக்க வேண்டும். அவர் உத்கல் யாத்திரை முடிவடையும் தறுவாயில் கோராபுட்டில் சம்பத்துதான இயக்கம் ஆரம்பித்துவைக்க, வீடுவீடாகச் சென்று தானம் பெறும் முயற்சிகளும் நடைபெற்றன. அதன் பலனாக 2,000-க்கு மேற்பட்ட பேர்களிடமிருந்து பிரதி வருஷமும் ரூ. 20,000-க்கு மேற்பட்ட தொகை தானம் கிடைப்பதற்கு தான பத்திரங்கள் கையெழுத்தாயின. இதில் விசேஷம் என்னவென்றால் தானம் செய்தவரில் நிலமற்ற ஏழைக் குடியானவர்கள் எத்தனையோ பேர்கள் அடங்கியுள்ளனர். அவர்கள் தங்கள் கூலியில் ஒரு பகுதியை வருஷத்தில் தானமாகக் கொடுப்பர். இது பூமிதான யக்ஞத்தைவிட அதிக அளவில் பெருக வழியிருக்கிறது. வினோபாஜி விரும்பியபடி ஒவ்வொரு மனிதனிடமும் சம்பத்து தானம் பெறுவது சாத்தியமாகிவிடும். பின்பு கிராம நிலப் பங்கீடு வேலைகள் காரணமாக சம்பத்துதான இயக்கத்தில் அதிகம் கவனம் செலுத்த இயலவில்லை. அடுத்த மழை காலத்தில் அதில் முழு கவனம் செலுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

IX

நிர்மாணத் திட்டம்

விநோபாஜி ஒரிஸ்ஸாவைவிட்டுச் சென்றவுடன் புனர் நிர்மாண வேலைகள் ஆரம்பமாகிவிட்டன. அண்ணாசாகேப் அவர்கள் கோராபுட்டிலேயே முகாமிட அவரது பார்வையில் கோராபுட்டின் பிரதான நகரமான ராய்காரில் சர்வ சேவா சங்கத்தின் கிளை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. முதல் முதலாக 16 மாதங்களில் நிறைவேற்றப்படவேண்டிய ஒரு திட்டம் ரூ. 17 லட்சம் செலவில் தயார் செய்யப்பட்டது.

கோராபுட், கஞ்சம், பாலேஸ்வர், மயூர்பஞ்ச் ஆகிய ஜில்லாக்களில் இருக்கும் 800-க்கு மேற்பட்ட தானம் கிடைத்த கிராமங்களின் சௌகரியத்தை முன்னிட்டு அவை ஆறு அடர்ந்த பகுதிகளாகப் பிரிக்கப்பட்டன. இவற்றுள் நான்கு கோராபுட் ஜில்லாவிலும், ஒன்று கஞ்சத்திலும், மற்றொன்று பாலேஸ்வர்—மயூர்பஞ்ச் பகுதியிலுமாக ஸ்தாபிக்கப்பட்டது. சௌகரியங்களை அனுசரித்து ஒவ்வொரு அடர்ந்த பகுதிக்கும் வேலைப் பிரதேசங்கள் பங்கிட்டுக் கொடுக்கப்பட்டுள்ளன. மூன்று அல்லது நாலு மைல் சுற்றளவுக்குள்ளிருக்கும் கிராமங்களை ஒரு வட்டமாக்கி பங்கிடப்பட்டுள்ளன. இம்மாதிரி வட்டங்கள் கோராபுட்டைச் சேர்ந்த 4 அடர்ந்த பகுதிகளுக்கு 27-ம், கஞ்சத்தில் 8-ம், பாலேஸ்வரில் ஒன்பதுமாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்வட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஆயிரம் அல்லது ஆயிரத்து இருநூறுவரை ஜனத்தொகை கொண்ட இருநூறு அல்லது இருநூற்றைம்பது குடும்பங்கள் இருக்கும்.

ஒவ்வொரு வட்டத்திலும் வேலை செய்ய இரு ஆண்

தொண்டர்களும், ஒரு பெண் தொண்டரும் நியமிக்கப்படுவர். இவர்கள் வட்டத்தைச் சேர்ந்த 15, 20 கிராமங்களுடன் நேரடித் தொடர்புகொண்டு வேலைகளை நிர்வகிப்பார்கள். கோராபுட் பகுதியில் மொத்தம் 180 ஆண்-பெண் தொண்டர்கள் வேலை செய்கிறார்கள். கஞ்சத்தில் 25-ம், பாலேஸ்வர்—மயூர்பஞ்சில் 37 பேர்களும் உள்ளனர். இவர்களுள் அதிகப்பேர் பூமிதான இயக்கத் தொண்டர்கள். முக்கிய நிர்மாணப் பொறுப்பேற்கும் தொண்டர்கள் தொகை 30 இருக்கும். 45 பெண் தொண்டர்களும் நிர்மாண வேலைகளையே குறிப்பாகச் செய்கின்றனர். எல்லாத் தொண்டர்களுக்கிடையிலும் பரஸ்பர ஒற்றுமை நிலவுகிறது. கிராமதானம் பெறுதல், நில விநியோகம், மற்றும் ஏனைய நிர்மாண வேலைகளனைத்தையும் ஒற்றுமையுடன் செய்கின்றனர். கோராபுட்டில் வேலை செய்யும் பெண் தொண்டர்கள் கஸ்தூரிபா நிதியைச் சேர்ந்த சேவிகைகள். ஏனைய ஆண்-பெண் தொண்டர்களனைவரும் நவஜீவன் மண்டலைச் சேர்ந்தவர்கள்.

ஒவ்வொரு வட்டத்திலும் நிர்மாண ஊழியத்தின் கேந்திரமாக "காந்தி மனை" இருக்கும். ஸ்தலத்தில் கிடைக்கும் சாதனங்களை (மூங்கில், மண், மரம் போன்றவைகளை) உபயோகித்து 1800 கன அடிபரிமாணமுள்ள இம்மாதிரி மனைகள் ஒவ்வொரு வட்டத்திலும் நிர்மாணிக்க ஆரம்பித்துள்ளனர். இவைகளுக்காக மாகாண சர்க்காரிலிருந்து இதுவரை ரூ. 70,200 மான்யம் கிடைத்துள்ளது. இதிலிருந்து ஒவ்வொரு காந்தி மனைக்கும் ரூ. 2,700 வீதம் கொடுக்கப்படும். கிராமவாசிகள் உழைப்புருவிலும், சாமான்கள் உருவிலும் ரூ. 900 கொடுத்து வீட்டைப் பூர்த்தி செய்வர். இம்மனைகள் பூர்த்தி செய்வதில் கிராம மக்கள் எடுத்துக் கொண்ட விசேஷ முயற்சிகள் போற்றத் தக்கவை. கோராபுட் மக்களுக்கு செங்கல் தயாரிக்கத் தெரியாது.

காந்தி மனைகள் நிர்மாணிக்கும் பணிக்கு தொண்டர்கள் செங்கற்கள் உற்பத்தி செய்வதைக் கண்டு கிராம மக்களுள் பலரும் அத்தொழிலைக் கற்றுக்கொண்டனர். அவ்வாறு ஒரு புதிய தொழிலும் இவர்களிடையே பரவலாயிற்று.

காந்தி மனைகளில் தொண்டர்கள் தங்கியிருப்பர். கிராமத்தின் கூட்டுறவுப் பண்டகசாலையும், கிராம சபைக் காரியாலயமும் அங்குதான் இருக்கும். கிராமத்தின் சமூக நிகழ்ச்சிகள் அங்குதான் நடைபெறும். ராட்டை, தறிகள், செக்கு ஆகியவை அங்கேயே கிடைக்கும். குழந்தைகள்-முதியோர் கல்வி, மருந்துகள் போன்ற புதுப் புது ஏற்பாடுகள் இதனகத்தே இடம் பெறும். இம்மாதிரி அதன் பெயருக்கேற்றபடி காந்திஜியைப் பூஜை செய்யும் கோவிலாக அது விளங்கும்.

நான்கு அல்லது ஐந்து வட்டங்களின் வேலைகளைக் கண்காணிக்க ஒரு முக்கிய தொண்டரும் அவருக்கு உதவியாளர்களும் இருப்பர்.

ARCHIVES
110057

X
நிலப் பங்கீட்டின் சில அனுபவங்கள்

நிலம் நியாயமான முறையில் பங்கிடப்பட்டு, மக்களுக்குக் கிராமதான இயக்கத்தின் புதிய அனுபவம் ஏற்படாவிட்டால் நிர்மாண வேலைகள் தடையேதுமின்றி நடைபெற முடியாது. வினோபாஜியின் முன்னிலையிலேயே சில கிராமங்களில் நிலப் பங்கீடு நடைபெற்றது. ஆனால் அது வெறும் 'காகிதப் பங்கீடாக' மட்டும் இருந்தது. வெவ்வேறு நபர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்ட நிலம் எங்கேயுள்ளதென்றுகூட காண்பிக்கப்படவில்லை. இவ்வேலை சுமார் நூறு கிராமங்களில் மட்டுந்தான் நடந்திருந்தது. ஒரு கிராமத்து மக்களுக்கு நிலம் பங்கிட்டுக் காண்பித்துவிட்டு மறு கிராமத்திற்குத் தொடர்ச்சியாகச் செல்லும்பொழுது பல இன்னல்கள் இடையே தோன்றின. இந்த ஜில்லாவில் பரந்து கிடக்கும் பல நிலப்பரப்புகள் இன்னும் சர்வே செய்யப்படவில்லை. சில கிராமங்களில் சமீபத்தில்தான் சர்வே நடைபெற்றது. அதன் பத்திரங்கள் கிடைக்காமலிருந்தன. ஒருவர் கொடுக்கும் நில வரியை அடிப்படையாகக்கொண்டு அவருக்கு எவ்வளவு ஏகர் நிலம் சொந்தம் என்பதைக் கணக்கிட்டு அவர் பத்திரங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்ததில் சிலரிடம் பத்திர அளவைவிட அதிகமாகவும், சிலரிடம் குறைவாகவும் இருந்தன. இந்நிலையில் கிராம நிலங்களை மறுமுறையும் சர்வே செய்யவேண்டி வந்தது. ஆனால் மறு சர்வே செய்வதற்கு நிர்மாணத் தொண்டர்கள் சர்வே வேலைகள் தெரிந்தவர்களாக இருக்கவேண்டும். இப்பொழுது பணியாற்றிவரும் நூறு பேர்களில் ஐந்து பேர்கள்கூட அதைப்பற்றிச் சிறிதளவாவது தெரிந்தவர்களாய் இல்லை. வெளியிலிருந்து இத்துறையில் அனுபவம்

பெற்ற ஓவர்சியர்களிடமிருந்து உதவிபெறுவது என முடிவு செய்யப்பட்டது. ஆனால் இப்படிப்பட்ட ஓவர் சியர்கள் தேவையளவிற்குக் கிடைப்பதற்குமில்லை. அரசினர் இயற்றியிருக்கும் பற்பல திட்டங்களுக்கே தேவையளவுக்கு ஓவர்சியர்கள் கிடைக்கவில்லை! சர்க்காரின் நிலவரி இலாகாவைச் சேர்ந்த சிலரும், வெளியிலிருந்து சிலரும் உதவினர். தொண்டர்கள் மற்றெல்லா வேலைகளையும் விட்டுவிட்டு பங்கீட்டு வேலை யிலே ஈடுபட்டனர். இதன் பலனாக ஏப்ரல் முடிவிற்குள் கோராபுட் ஜில்லாவில் மட்டும் சுமார் நாற்பது கிராமங் களில் நிலப்பங்கீட்டு வேலை நிறைவேற்றப்பட்டது. மழைக்காலம் ஆரம்பமாவதற்குமுன் 75 சத கிராமங்கள் பங்கிட்டுக் கொடுக்கப்படும் என நம்பப்படுகிறது. கஞ்சத்தில் தானமாகக் கிடைத்த 50 கிராமங்களில் 21-ம், பாலேஸ்வரில் கிடைத்த 159-ல் 93-ம், மயூர்பஞ்சில் கிடைத்த 62 கிராமங்களில் 9-ம் ஏப்ரல் முடிவிற்குள் பங்கிடப்பட்டுள்ளன.

கிராமதானம் கிடைத்த கிராமங்களில் இதுவரை நிலப்பங்கீடு நடைபெற்ற கிராமங்களின் எண்ணிக் கையை அட்டவணை உருவில் அடுத்த பக்கத்தில் (54) கொடுக்கிறோம்.

நிலப்பங்கீட்டின் பொழுது எந்த நிலம் யார்வசம் இருந்தது என்பதைப்பற்றி கவனிக்காமல் எல்லா நிலங்களையும் ஒன்றாக எடுத்துக்கொண்டு நிலத்தின் தரம், விளைச்சல் ஆகிய அம்சங்களை மட்டும் கணக்கிட்டு குடும்பத்துக்கு இவ்வளவு என்று புதிதாகப் பங்கீடு செய்தல்வேண்டும். இதுதான் பங்கீட்டுக்கு நேரான தும், சுலபமானதுமான வழி. இப்படிச் செய்ய ஒரு கிராமத்திற்கே பல வாரங்கள் பிடித்தாலும் பிடிக்க லாம். ஏனென்றால் ஒவ்வொரு நிலப்பகுதியையும் மறு முறை அளக்க வேண்டியிருக்கிறது. ஆனால் நம்முன் அதிக அளவு வேலையும் குறைந்த ஆட்களும், குறுகிய

ஜில்லா	நிலம் பங்கீடு நடைபெற்ற கிராமங்கள் எண்ணிக்கை	மொத்தக் குடும்பங்கள் எண்ணிக்கை	மொத்த ஜனத்தொகை	நிலமில்லாத குடும்பங்கள் தொகை	நிலமில்லாத மக்கள் தொகை	விநியோகம் செய்யப்பட்ட நிலம்—ஏக்கரில்	சமூகச் சாகுபடிக்கு ஒதுக்கப்பட்ட நிலம்—ஏக்கரில்	பங்கீடு செய்யப்படாததும் தரிசானதுமான நிலம்—ஏக்கரில்
கோராபுட்	288	6451	39,871	1711	6457	30,295	1021	20,000
பாலேஸ்வர்	93	1738	...	162	...	3,782	...	...
மயூர்பஞ்ச்	9	223	...	13	...	494	...	...
கஞ்சாம்	21	886	...	...	...	1,255	...	...
கட்டாக்	1	119	631	6	17	537	37	...

காலமுமே உள்ளன. முடிந்தால் ஒரே நாளில் ஒரு கிராமம் வீதம் முடிக்குமளவுக்கு வேகமாக முன்னேற வேண்டி யுள்ளது. ஆகவே நடைமுறையில் ஒரு கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஒவ்வொருவனும் தன்னிடம் உள்ள நிலத்தில் தனக்கென ஒதுக்கப்பட்ட பங்கை மட்டும் எடுத்துக்கொண்டு மற்றதை அளந்து அடுத்தவனுக்கு எனக் குறித்துவைக்க ஏற்பாடு செய்யப் பட்டது. இதில் ஒரு தவறு ஏற்பட இடமுண்டு. "இவ்வளவு நிலத்துக்கு நானே சொந்தக்காரனாக இருந்தேன்; இப்பொழுது இவ்வளவுக்கு இருக்கிறேன். மற்ற நிலங்களை தானம் செய்துவிட்டேன்" என்ற மனப்பான்மை ஏற்படக் காரணமுண்டு. குறிப்பிட்ட காலவரைக்குள் ஆயிரக்கணக்கில் கிராமங்களைப் பங்கிட வேண்டிய கடமையை எண்ணிப் பார்க்குங்கால் இக்குறை ஏற்படாமல் தடுக்க வேறு வழியில்லை. நிலப் பங்கீட்டைத் தொடர்ந்து கிராமத்தின் எல்லா நபர்களும் அடங்கிய கிராம சபையும், காரியங்களை நிர்வகிக்க "நிர்மாணக் குழு"வும் ஒவ்வொரு கிராமத்திலும் அமைக்கப்படுகிறது. நில அமைப்பு, நிர்மாணம் ஆகிய பொறுப்புகள் இக்குழுவிடமே விடப்படுகின்றன. இயன்ற அளவு நிலம் "சமூகச் சாகுபடிக்காக" ஒவ் வொரு கிராமத்திலும் விட்டுவைக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

XI

பயிர்த்தொழிலும் பசுவளர்ப்பும்

நிலப் பங்கீட்டிற்குப் பின்பு முதல் வேலையாக விவசாயிக்கு கலப்பை, மாடு போன்ற விவசாயத்திற்குத் தேவையான கருவிகள் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும். இதற்கு சாதன தானம் மூலமாகச் சில மாடுகள், மண்வெட்டிகள், பிக்காக்சுகள் ஆகியவை கிடைத்தன. ராஜ்ய சர்க்காரும் ரூ. 30,000 உதவியது. நில விநியோகத்தைத் தொடர்ந்து மாடுகளை விநியோகம் செய்யும் வேலைகளும் நடைபெறுகின்றன. மழைக்காலம் தொடங்குமுன் சுமார் 1000 ஜோடி காளைகளும், அதற் கேற்ப விவசாயக் கருவிகளும் விநியோகம் செய்யப்பட வேண்டுமென்று முயற்சி செய்யப்படுகிறது. ஏப்ரல் முடிவுக்குள் 600 ஜோடிகளுக்குமேல் விநியோகம் செய்யப்பட்டுவிட்டது. இங்கு காளை மாடுகள் விஷயமே ஒரு தனி பிரச்னை. காளை மாடுகளை மட்டும் பங்கிடுவது சுலபமல்ல. விவசாயத் தொழிலுக்கு ஆதிவாசிகள் காளைகளை உபயோகிக்கிறார்கள். ஆகவே அவர்களிடம் பசுக்களும் உள்ளன; ஆனால் அவர்கள் பசுவைச் சரியாகக் கவனிப்ப தில்லை. ஆதிவாசிகள் பெரும்பாலும் பசும்பால் அருந்துவதில்லை. பல வருடங்களுக்குமுன் காலஞ்சென்ற தக்கர் பாபா அவர்கள் ஆதிவாசிகளுக்கு பசுவின்பால் குடிக்கும்படி சிபாரிசு செய்தார். இது அவர்களுக்கு மிக விசித்திரமாகப் பட்டது. மனிதன் எப்படி பசுவின் பால் குடிப்பது என்று அவர்கள் ஆச்சரியப்பட்டனர்.

ஆகவே அவர்கள் பசுவை ‘காளை மாட்டுக்குத் தாய்’ என்ற அளவுக்கு மட்டும் தெரிந்து வைத்துக்கொண் டிருக்கின்றனர். பசு வளர்ப்பதனால் விசேஷ லாபமேது மில்லை என்ற காரணத்தால் அதைச் சரியாகக் கவனிப்ப

தில்லை. பசுக்களை அடிக்கடி ஏரில் கட்டி உழுவது முண்டு.

துரதிர்ஷ்டவசமாக சந்த் ஜாதியினரிடம் பசு மாமிசம் உண்ணும் பழக்கம் இருந்துவருகிறது. பொருளாதார நெருக்கடி காரணமாக இப்பழக்கம் மிகவும் அதிகரித்துள்ளது. விநோபாஜியின் யாத்திரையின் பொழுது இப்பழக்கம் குறித்து அவர் தெரிந்துகொள்ள ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. யாத்திரை ஒரு முகாமை அடைந்தபொழுது சந்த் ஜாதியைச் சேர்ந்த கிழவன் ஒருவன், இங்குள்ள வட்டிக்கடைக்காரர்கள் பூமிதான இயக்கத்திற்கு நிலம் கொடுக்கவில்லை என்று கூறினான். அப்பொழுது வட்டிக்கடைக்காரன் ஒருவன், "இவர்கள் பசுக்களைக் கொன்று தின்பவர்கள்; பாவிகள். ஆகவே இவர்களுக்கு எதற்காக நிலம் கொடுக்க வேண்டும்?" என்று ஆட்சேபணை தெரிவித்தான். உடனே அந்தக் கிழவன் மிகவும் கடுமையாகப் பதில் கூறினான்—"நீங்களும் உங்கள் குடும்பமும் எங்களைப் போல் நாலைந்து நாட்கள் பட்டினி கிடந்தால் தெரியும் எதைத் தின்கிறீர்கள், எதைத் தின்னமலிருக்கிறீர்கள் என்று." இப்படியாக இக் கெட்ட பழக்கம் பரவி கிராமத்தில் தேவையளவுக்கு மாடுகளும் பசுக்களும் கிடைக்காத நிலைமை ஏற்பட்டது.

இப்பிரதேசத்தில் அனேகமாக எல்லாப் பகுதிகளிலும் மேய்ச்சலுக்குத் தேவையான நிலம் உள்ளது; சிலவிடங்களில் புல் அதிகமாகிக் காடுகளே ஏற்பட்டுள்ளன. இங்குள்ள மக்கள் பசுவின் உபயோகத்தை நன்கு தெரிந்துகொண்டு அதன் பலனை பசுவளர்ப்பில் மிகுந்த அக்கறை செலுத்தினார்களானல், பாரத தேசத்திலேயே இது பசுக்கள் மிகுந்த பிரதேசமெனப் பாராட்டப் பெற்றல்கூட ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை. பயிர்த்தொழில் முறைகளை எல்லாம் சீர்திருத்தும் வேலைகளையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

ஏனெனில் இங்கு நடைமுறையிலிருக்கும் முறைகள் மிகப் பழமையானவை. இவர்கள் பயிர்த்தொழில் முறைகளில் முன்னேற்றமடையாமலிருக்கக் காரணம், நூதன கருவிகள் கிடைக்காமலிருப்பதும், குறிப்பாக தண்ணீர் கிடைக்காமலிருப்பதுமேயாகும். அறியாமையும் ஒரு காரணம்தான். பல கிராமங்களில் வெயில் காலங்களில் குடிதண்ணீர்கூட இரண்டரை மைல்கள் அப்பாலிருந்து கொணரவேண்டியிருக்கும். பாதயாத்திரையின்போது அதிகமாகத் தண்ணீர் உபயோகப்படுத்தும் தொண்டர்களுக்கு தேவையளவுக்குத் தண்ணீர் கிடைக்கும்படிச் செய்வதே கிராம மக்களுக்குப் பெரும் பாடாகி விட்டது.

ஒரிஸ்ஸா மாகாணம் முழுதும் வருஷ சராசரி மழை 50"–60"க்குக் குறைவில்லை. சிலவிடங்களில் 70 அங்குலம்கூடப் பெய்கிறது. இம்மழை ஜலம் மலைகளையும், நிலங்களையும் அரித்து அடித்துக்கொண்டு கடலில் சேருகிறது. இதை ஓரிடத்தில் தேக்கி கோடையில் பயிர்த்தொழிலுக்கு உபயோகப்படுத்தினால் இங்குள்ள நிலங்களில் பொன் விளையுமாறு செய்யலாம் என்று கூறினால் கூட மிகையாகாது.

நெல், மக்காச்சோளம், வெள்ளை, சிவப்புச் சோளம், ராகி, தினை போன்ற இரண்டாந்தர தானியங்கள் உற்பத்தி செய்யப்படுவதோடல்லாமல் பாசிப்பயறு, கொள்ளு, வேர்க்கடலை, கடலை ஆகியவைகளும் இங்கு பயிரிடப்படுகின்றன. மலைச்சாரலிலுள்ள பண்படுத்தப் படாத நிலங்களில் எண்ணெய் வித்துக்களும் பயிராகின்றன. லாபநோக்கங்கொண்டு முக்கிய வியாபாரப் பொருள்களான மஞ்சள், புகையிலை ஆகியவைகளும் பயிரிடப்படுகின்றன. பாசனவசதியுடன், நல்ல உரங்களும் உபயோகப்படுத்தப்பட்டால் இவர்களுடைய உற்பத்தியை இரண்டிலிருந்து இரண்டரை மடங்கு வரை அதிகப்படுத்தலாம். புதுப்புதுப் பயிர்களும் உற்பத்தி

செய்ய ஏற்பாடு செய்யலாம். ஜப்பானிய முறையில் நெல் உற்பத்தியும் ஆரம்பிக்கலாம்.

ஆகவே பயிர்த்தொழில் முன்னேற்றத்திற்கு நீர்ப் பாசன வசதிகள் முதலில் செய்துகொடுக்க வேண்டும். அத்துடன் மண் பாதுகாப்புக்கு (Soil conservation) வேண்டிய ஏற்பாடுகளும் செய்யவேண்டும். பல நூற்றுண்டுகளாக கவனிக்கப்படாததால் நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளது. இவ்விஷயமாக இது வரையில் அரசாங்கமோ அல்லது ஜமீந்தார்களோ யாரும் எவ்வித முயற்சிகளும் மேற்கொள்ளவில்லை. அப்படியிருக்கையில் படிப்பில்லாத குடியானவன், வேண்டிய கருவிகள் கிடைக்கப்பெறுமல் இதை எப்படி கவனித்திருக்க முடியும்? இதன் விளைவாக இங்குள்ள மண் பல வருடங்களாக ஜலத்தால் அரிக்கப்பட்டுப் பயனற்றுப் போய்விட்டது. அணைகள் கட்டுதல், நிலத்தை சமப்படுத்துதல், மலைச்சாரல்களில் நிலச் சதுரங்கள் (Terracing) அமைத்தல்போன்ற வேலைகளை மேற்கொள்ள வேண்டும்.

கஞ்சம் ஜில்லாவின் பிரச்னையும் கோராபுட்டின் பிரச்னையைப் போன்றதேதான். மயூர்பஞ்ச், பாலேஸ்வர் ஜில்லாக்களின் நிலை சற்று மாறுபட்டது. அங்கு பயிர்த்தொழில் முறைகள் முன்னேற்றமடைந்துள்ளன; பசுக்களை நன்கு கவனித்து வளர்க்கிருர்கள். ஆகவே பாரத தேசத்தின் ஏனைய கிராமங்களைப் போல் முன்னேற இவர்களுக்கும் மிகுந்த அவசியம் உளது.

கிராமதானத்திற்குப் பிறகு இத்துறைகளிலெல்லாம் முன்னேற்றமடைவதற்கு வழி பிறக்கிறது. நிலத்திற்கு தனி உடைமையும், நிலச்சுவான்தார்கள் நிலமற்ருேர் என்ற பேதமும், பெரிய நிலச்சுவான்தார், சிறிய நிலச்சுவான்தார் என்ற வித்தியாசமும் நிலவிவரும் வரை நிலம் முன்னேற்றமடைவதற்கு எவ்வித சாத்தியமும் இல்லை. முக்கியமான வேலை ஒருபக்கம்; கூலியில்லாத

உழைப்பு மற்ருெரு பக்கம். ஒரே இடத்தில் இரண்டும் ஒற்றுமையாக இருக்கமுடியாது. பாசனவசதி ஏற்படுத்துவதற்கும், மண் அரிப்பைத் தடுப்பதற்கும் மக்களிடம் 'சிரமதானம்' கொடுக்கும்படிக் கேட்டால், "ஒரு சில நிலமுதலாளிகள் நன்மைக்காக நாங்கள் ஏன் வீணில் உழைக்கவேண்டும்?" என்று கேட்பர் ஏழைகள். இதில் எதையாவது தனியாகச் செய்வதற்கு அவ்வளவு மூல தனம் நிலச்சுவான்தார்களிடம் இருப்பதில்லை. இவ்வாறு பிரச்னைகளுக்கு வழிசெய்யும் வகை கிராமமக்களிடம் இருந்தும்கூட பயன்படுவதில்லை. சுகமாக வாழும் மார்க்கங்கள் இருந்தும், பட்டினியின் பிடியில் சிக்கி மாள்கின்றனர் மக்கள். "தேசீய விஸ்தரிப்புத் திட்டம் போன்ற சமுதாயக்ஷேம திட்டங்களின்மூலம் மக்களுக்கு உற்சாகமூட்டி அவர்களுள் முடங்கிக் கிடக்கும் கர்ம சக்தியைத் தட்டி எழுப்பி கிராமப் புனரமைப்பு வேலைகளை மேற்கொள்ள முடியாதா, அதற்கு கிராமதான இயக்கம் ஒன்றுதான் வழியா, நிலத்தில் தனி உடைமை இருந்தும் கூட்டுறவுப்பயிர்த்தொழில் முறையில் கிராமப் புனரமைப்பு ஏற்படுத்த முடியாதா?" என்று சிலர் கேட்கிருர்கள்.

முன்னுல் கூறியவற்றிலிருந்தே இக்கேள்விகளுக்கு சுலபமாக விடைகண்டு விடலாம். நிலத்தில் தனியுடைமை இருக்கும் கிராமத்தில், நிலமுள்ளோர் நிலமில்லாதோர் என இரு பகுதிகளாக கிராமமே பிளவுபடுகிறது. இவ்விரு பகுதியினரின் மனப்பான்மைகள் மாறுபட்டவை. உயர்ந்த வகுப்பினருக்கு இருக்கும் குறைகளில் ஏழைமக்கள் கவனம் செலுத்துவதில்லை. உதாரணமாக ஓரிடத்தில் ஏழைமக்கள் குடிதண்ணீரின்றி கஷ்டப்படுகிருர்கள் என்று வைத்துக்கொள்வோம். அங்கு ரோடுகள் இல்லை என்று உயர்ந்தோர் குறைபட்டால், ஏழைமக்கள் குடிதண்ணீருக்கே கஷ்டப்படும் பொழுது, அதில் எப்படி அக்கறை செலுத்த முடியும்?

ஏழைகளின் அவல நிலைபற்றி பொருள் படைத்தோருக்கு அக்கறை இருப்பதில்லை. இந்நிலையில் பெரிய நிலச் சுவான்தார்களையும் ஏழை விவசாயிகளையும் ஒன்று சேர்த்து 'கூட்டுறவு விவசாயம்' ஆரம்பித்தால் அது கிராமமனைத்தையும் சுயநலச் சேற்றில் அழுந்தியுள்ள முதலாளிகளின் கைகளில் ஒப்புவிப்பது போலாகும். தன் பொருள் வலிமையினால் முதலாளியே கிராமத்தில் ஆட்சி புரிவான். இந்நிலையில் உள்ள முதலாளிகளைப் பற்றிக் குறிப்பிடுகையில் வினோபாஜி கூறியிருக்கிறார்—
"கிராம முன்னேற்றத் திட்டங்கள் அமைக்கும் அதிகார மும் அவனிடமே கொடுக்கப்பட்டால் கிராமத்தின் நிலை மிகவும் சீர்கெட்டுவிடும். கிராமத்தில் வேற்றுமை மனப்பான்மை வளர்ந்து வேலைகள் ஏதும் நடை பெறமற் போய்விடும். ஆகவே நிலமனைத்தும் கிராமத் தின் பொதுவுடைமை ஆக்கப்படாவிட்டால் கிராமப் புனருத்தாரணத்திற்கு எவ்விதத் திட்டமும் நிச்சய மாக வெற்றி பெறமுடியாது. இன்றைய நிலையில் ஏற்படுத்தப்படும் 'கிராமக் குழு'விடம் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுவதில்லை. கிராமத்தின் பெரிய நிலச் சுவான்தார்கள் தங்கள் நிலமனைத்தையும் தானமளித்து விட்டு ஒரு நியாயமான பங்கைமட்டும் பெற்றுக் கொள் வார்களேயானல் கிராம மக்களுக்கு அவர்களிடம் அன்பும், நம்பிக்கையும், மரியாதையும் ஏற்படுகிறது...... இன்றைய நிலமுதலாளிகள் கிராமத்தைக் கொள்ளை யடிப்பவர்கள். சிங்கம் மற்ற மிருகங்களை எல்லாம் கொன்று தின்பதனல் காட்டின் ராஜா என்று கூறப்படு வதுபோல் ஜமீந்தார்கள் கிராமத்தில் நடந்துகொண்டால் ஒன்றும் நிறைவேறாது......."

ஒரு கிராமத்தில் எனக்கு ஏற்பட்ட அனுபவம் கூறுகிறேன். அங்கு மழை இல்லாமற் போகவே பயிர் கள் காய்ந்து கெட்டுப்போய்க் கொண்டிருந்தன. ஒரு அணைபோட்டால் குறைந்தது நூறு ஏக்கர் பயிர்களை

யாவது காப்பாற்ற முடியும். இதற்கு அதிக உழைப்புச் செலவிட வேண்டிய அவசியமும் இல்லை. ஆனால் அது நடைபெறவில்லை. எல்லாப் பயிர்களும் காய்ந்து நாசமாகிவிட்டன.

கிராமதானத்திற்குப் பிறகு இவ்விதத் தடைகள் ஏதும் ஏற்படக் காரணமில்லை. கிராமத்தின் ஒன்று சேர்ந்த உழைப்பின் பயனாக ஏதாவது நிலத்திற்குப் பாசன வசதி ஏற்படுத்தப்பட்டால் அதன் நன்மைகள் கிராமமக்கள் எல்லோருக்கும் கிடைக்கும். இதுபோலவே மண் பாதுகாப்பு (Soil conservation), நில அபிவிருத்தி ஆகிய வேலைகளுக்கும் ஒத்துழைப்பு மூலம் உதவி கிடைக்கிறது. கிராமதானம் கிடைத்த கிராமங்களில் இதுபோன்ற பொதுக் காரியங்களுக்கு மக்களிடையே மிகுந்த உற்சாகமும் ஒத்துழைப்பும் காணப்படுகின்றன. மான்பூரில் கிராம மக்கள் 8, 9 தினங்கள் சிரமதானம் செய்து குளிப்பதற்கும், துணிகள் துவைப்பதற்கும் அவசியமான சௌகரியமுள்ள ஒரு குளம் வெட்டியமைத்தனர். கோராபுட் ஜில்லாவைச் சேர்ந்த 'கரன்டா' என்ற கிராமத்தில் ஒரு நீர்த்தேக்கத்தின் அணை உயரமும், அகலமும் அதிகப்படுத்தப்பட்டு சுமார் 60 ஏக்கர்களுக்குப் பாசன வசதி விஸ்தரிக்கப்பட்டது. இதற்காக 71 ஆண்-பெண்கள் சுமார் ஒரு மாதம்வரை சிரமதானம் அளித்தனர். மத்திய, ராஜ்ய சர்க்கார்கள் இவ்வேலைகளுக்கு அகமகிழ்ந்து உதவிபுரியச் சித்தமாக உள்ளனர். ஆனால் கைதேர்ந்த வேலையாட்கள் கிடைக்காததுதான் பெருங்குறையாக இருந்து வருகிறது. இது காரணமாக வேலை முன்னேறாமல் மிகவும் தடைப்படுகிறது. கிடைக்கும் ஒரு சில எஞ்சினியர்கள் ஓவர்சியர்கள் எல்லோரையும் சர்க்கார் தங்கள் வேலைகளுக்கே எடுத்துக்கொள்கின்றனர். ஆகவே நம் வேலைகளுக்குத் திறமைபெற்றோர் கிடைக்காத நிலையிலிருக்கிறோம். இந் நிலையிலும் ஐந்து வருட வேலைகளை ஒரே வருடத்தில்

முடித்துவிட வேண்டுமென நாம் மனக்கோட்டை கட்டுகிறோம் !

பாரத சர்க்காரின் உயர்ந்த பதவியில் பணியாற்றி வரும் ஸ்ரீ கிருஷ்ணராவ் தாத்தே என்ற ஒரு வாலிப எஞ்சினியரும், ஒரிஸ்ஸா சர்க்காரில் மூன்னுள் எஞ்சினியர்களாக இருந்த இரண்டு மூன்று நபர்களும் சில ஓவர்சியர்களும் இக்காரியத்தில் பணியாற்ற முன்வந்துள்ளனர். இவர்கள் சேவையை நன்கு பயன்படுத்தும் முறையில் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. நீர்ப் பாசன வசதிகள் செய்ய திட்டங்கள் தயாரித்து முதல் பரிசீலனை நடைபெறுகிறது. எங்கெங்கு அணைகள் கட்டினுல் நிலங்களுக்குப் பாசன வசதிகள் ஏற்படுத்துவது சுலபம் என்று ஸ்தல வாசிகளுக்குத்தான் அதிகமாகத் தெரியும். அவர்கள் கூறும் யோசனைகளை நிபுணர்கள் பரிசீலனை செய்து பார்க்கும்பொழுது பெரும்பாலும் சரியாகவே இருக்கின்றன. இருந்தாலும் வரைப்படம், 'எஸ்டிமேட்டு' தொகை கணக்கிடல் ஆகியவை இல்லாமல் வேலை செய்வது இருட்டில் சித்திரம் வரைவது போலாகும்.

நமது கட்டட நிர்மாண நிபுணர்களைத் தயார் செய்ய நமக்கு உதவிக்கு வரும் எஞ்சினியர்கள், ஓவர்சியர்கள் ஆகியோரைக் கொண்டு நம் தொண்டர்களில் 50, 60 பேர்களுக்கு அவ்விஷயத்தில் பயிற்சி அளிக்கவேண்டும். அணைகள் கட்டுவதில் சமப்படுத்தல் (Levelling), எஸ்டிமேட்டு தயார் செய்தல் ஆகிய விஷயங்களில் பயிற்சி அளித்து அவர்களை வேலையில் அனுபவம் பெறச் செய்ய வேண்டும். அறிவை விருத்தி செய்ய பின்பு ஏற்பாடுகள் செய்யலாம். இவ்வாறு நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்க துரித நடவடிக்கைகள் எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1957 ஜூன் மாதத்திற்குள் குறைந்தபட்சம் 5,000 ஏக்கர்களுக்காவது பாசன வசதியளிக்க ஏற்பாடு செய்ய முடியும் என்று நம்பப்படுகிறது. 6 திட்டங்கள் மூலம்

500 ஏக்கர்களுக்கு பாசன வசதி வேலை செய்து 1956 ஜுன் மாதத்திற்குள் பூர்த்தியாக்கப்படும்.

இவ்வருஷம் ஜுலை மாதத்தில் ஓவர்சியர் பயிற்சிக்கு முகாமொன்று ஆரம்பிக்கப்படும். அத்துடன் என்ஜினியரிங் கல்லூரி மாணவர்களின் கோடை முகாம்கள் (Summer Camps) அமைத்து அவர்களிடமிருந்தும் உதவிபெறுவதென முடிவு செய்யப்பட்டது. இவ்வகையான முகாம் ஒன்று மே 1-ம் தேதியே ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. குஜராத்தில் 'ஆனந்த்' என்னுமிடத்திலுள்ள 'வல்லப எஞ்சினியரிங்' கல்லூரியைச் சேர்ந்த 18 மாணவர்கள் இதில் பங்கு கொண்டனர். மாணவர்களுக்கு இம்முகாம் மூலம் பூமிதானம், கிராமப் புனரமைப்பு ஆகிய விஷயங்களில் செய்முறைப் பயிற்சியும் அனுபவமும் ஏற்படுவதோடு 'மண் பாதுகாப்பு'க்கு ஆரம்ப 'சர்வே' இவர்கள் உதவியைக் கொண்டு செய்யலாம். இவர்கள் இதயங்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குச் சேவை செய்ய உற்சாகமும் ஏற்படுகிறது. முகாம் காரணமாகக் அவர்களுக்கு சேவை மனப்பான்மை பெருகவும் கூடும். இதுபோல விவசாயக் கல்லூரி மாணவர்களின் ஒரு கோடை முகாமும் அமைக்கத் திட்டமிட்டிருக்கிறோம்.

பயிர்த்தொழில் அபிவிருத்திக்கும், பசு வளர்ப்பிற்குமாக 6 மாதிரி கேந்திரங்கள் திறக்க திட்டமிடப்பட்டுள்ளது. நால்வாடி கோ சேவா சங்கத்தைச் சேர்ந்த ஸ்ரீ ராமதாஸ் பாயியும், சேவாகிராம விவசாய நிபுணர் ஸ்ரீ ரெட்டிஜியும் கோராபுட் வந்துள்ளனர். அரசாங்க விவசாய இலாகாவைச் சேர்ந்த நிபுணர்களும் ஆலோசனை கூறுகின்றனர். மத்தியப் பிரதேச விவசாய டயிரக்டர் அவர்களும் இப்பிரதேசத்தில் சுற்றுப்பிரயாணம் செய்து தன் உயர்ந்த ஆலோசனைகளைக் கூறியுள்ளார். இப்படியாக இவ்வேலை அடிப்படையிலேயே மிக உறுதியாக இருக்கும்படி நடத்தப்படுகிறது.

XII

சுரண்டலற்ற சமுதாயம்

உரம், ஜலம் ஆகியவை உபயோகப்படுத்தினுல் விவசாயத்தில் உற்பத்தி அதிகரிக்கும். ஆனுல் உழைத்துப் பயிர் செய்தோன் உண்ண வழிவகை செய்யப்படாவிட்டால் உற்பத்தி பெருகுவதால் யாருக்கு நன்மை? நிலத்தில் உரிமை கிடைத்துவிட்டால் அப்பிரச்சனை ஒருவாறு ஒழியலாம். ஆனுல் அத்துடன் சுரண்டல் ஒழிவதில்லை. அதன் மற்ற உருவங்கள் அழிக்கப்படாமல் இருக்கின்றன. அவையே வட்டியும், வியாபாரமும். அதினின்றும் பரிபூரணமாகக் காப்பாற்றப்படாவிட்டால் மக்களுக்கு நன்மை வரப் போவதில்லை. இதற்கு விநோபாஜி கூறும் வழி இதுவே. "ஒவ்வொரு கிராமத்திலும் கிராமவாசிகளால் நடத்தப்பெறும் கூட்டுறவுப் பண்டகசாலை நிறுவப்பட வேண்டும். கிராம மக்கள் தங்கள் தேவைகளை அதிலிருந்தே வாங்கிக் கொள்ளவும், தங்களிடம் உபரியாகவுள்ள பொருள்களை அதன்மூலமே விற்பனை செய்யவும் வேண்டும். பின்பு பண்டகசாலைகள் மூலம் வெளியிலிருந்து கிராமத்திற்கு வரும் பொருள்களில் எவை ஏற்றுக்கொள்ள வேண்டியவை, எவை ஏற்றுக்கொள்ளக் கூடாதவை, எவை கிராமத்திலேயே தயார் செய்யக் கூடியவை என்று முடிவு செய்து கிராமச் சுயதேவைப் பூர்த்திக்கு வழிசெய்ய வேண்டும். கிராமங்களில் செய்ய முடிந்த பொருள்களை கிராமங்களிலேயே தயார் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். வேண்டாத பொருள்கள் கிராமத்தை அணுகாதபடி தடைவிதிக்க வேண்டும். கிராமத்திற்குள் வருபவையும், கிராமத்திலிருந்து வெளிச் செல்பவையுமான பொருள்களின்மீது கிராம சபைகள் கட்டுப்பாடு வைத்துக்கொள்ளும். இதில் ராஜ்ய சர்க்காரோ, மத்திய சர்க்காரோ தலையிடுவது கூடாது" எனத் தெளிவாக விநோ

பாஜி கேட்டுக் கொண்டுள்ளார். இவ்வதிகாரம் கிடைக்க கிராம மக்கள் சர்க்காருடன் சண்டையிட வேண்டி வந்தால்கூட பாதகமில்லை. இவ்வதிகாரம் இன்றி கிராமப் பொருளாதார சுதந்திரத்திற்கு அஸ்திவாரமிட முடியாது.

இதன்படி மங்கரோட்டிலும், மான்பூரிலும் விரைவில் கூட்டுறவுப் பண்டகசாலைகள் நிறுவப் பெற்றன. மான்பூரில் நிறுவப்பட்ட பண்டகசாலை மிகவும் புகழ் பெற்று விட்டது. நான்கைந்து மைல்கள் அப்பாலிருந்து பிற கிராமவாசிகள் கூட அங்குச் சென்று பண்டங்களை வாங்குகின்றனர்.

கோராபுட் ஜில்லாவிலும் கூட்டுறவுப் பண்டகசாலைகள் ஆரம்பித்துள்ளனர். இந்தியாவில் எங்கு பார்த்தாலும் வியாபாரிகளும், வட்டிக் கடைக்காரர்களும் மக்களைப் பரவலாகச் சுரண்டுகிருர்கள். இப்பொழுது எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கைகளின் பலனுக கோராபுட், கஞ்சம் ஆகிய இடங்களில் சுரண்டல் ஒரு எல்லைக்குள் கட்டுப்படுத்தப் பட்டுள்ளது. வட்டிக் கடைக்காரர்கள் சுரண்டும் முறைகளை முன் அத்தியாயம் ஒன்றில் குறித்துள்ளோம். வியாபாரிகளும் அப்படியே. அவர்கள் கொள்ளை லாபமடிப்பதற்கு எல்லையில்லை. நகரத்திலிருந்து 10–20 மைல்கள் சென்றவுடனே பொருள்களின் விலைகள் இரண்டு அல்லது மூன்று மடங்காகின்றன. உற்பத்தி பெருகாமல், சுரண்டலிலிருந்து மட்டும் விடுதலையடைந்தாலே போதும், கிராமங்களின் நிலை இருமடங்கு அபிவிருத்தி பெறும். ஆகவே பயிர்த் தொழில் அபிவிருத்தியைக் காட்டிலும் சுரண்டல் ஒழிப்பு நம் வேலைத்திட்டத்தில் முக்கிய இடம் பெற்று உடனே அமுலுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

கூட்டுறவுப் பண்டகசாலைகள் அமைக்க உதவுவதில் அரசினர் கூட்டுறவு இலாகாவில் அனுபவம் பெற்ற ஒருவர் தம் பதவியை ராஜிநாமாச் செய்து நம் வேலைக்காக முன் வந்துள்ளார். ஜனவரி மாதத்தில் பண்டக

சாலைகள் நிறுவும் வேலையை மேற்கொண்டு ஏப்ரல் முடிவுக்குள் கோராபுட்-கஞ்சம் பகுதியில் இருபத்தாறும் பாலேஸ்வர்–மயூர்பஞ்ச் பகுதியில் ஒன்பதும் நிறுவப் பட்டன. பண்டகசாலை நிறுவ குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழும் குடும்பங்கள் ஒவ்வொன்றிடமிருந்தும் ரூ. ஒன்று வீதம் பங்கு வசூலித்துக் கிடைக்கும் தொகை யின் 10 மடங்கு சர்வசேவா சங்கம் கடனாகக் கொடுக் கிறது. இப்படி ரூ. 15,000 மூலதனம் இதுவரையில் இப்பண்டகசாலைகளுக்கு சங்கத்தின் சார்பாகக் கொடுக் கப்பட்டுள்ளது. இப் பண்டகசாலைகளைப் பரிசீலனை செய்ய ' நிர்மாணக் குழு 'வின் சார்பாக சில பரிசோதகர் களை நியமனம் செய்திருக்கின்றனர்.

ஒவ்வொரு கிராமவாசியும் இப்பண்டகசாலையைத் தனதென்று எண்ணி அதன் அபிவிருத்திக்கு உற்சாகத் துடன் வேலை செய்கிறான். வெளியிலிருந்து சிலர் கஞ்சம் ஜில்லாவில் கிராமதானம் கிடைத்திருக்கும் கிராமங்களில் புது அமைப்பு எப்படி நடைபெறுகின்றது எனப் பார்க்கச் சென்றிருந்தனர். அவர்கள் அங்குள்ள கிராமப் பண்டகசாலைகளில் விற்பனைப் பொருள்களனைத் தும் ஒரு திறந்த கீற்றுக் கொட்டகையின் கீழ் வைக்கப் பட்டிருப்பதைப் பார்த்தனர். இதைக் கண்டு ஆச்சரிய மடைந்த அவர்கள், " வெளியில் இப்படிச் சாமான்களைப் போட்டிருக்கிறீர்களே, இதை யாரும் திருடிக்கொண்டு போகமாட்டார்களா ?" என்று கேட்டனர். " இவை யாவும் கிராமத்தின் சொத்துக்கள். இதை யார் திருட முடியும் ?" என்று ஆச்சரியத்துடன் பதிலளித்தனர் கிராமவாசிகள். இரண்டு மூன்று மாதங்களுக்குப் பின்பு இப்பண்டகசாலைகளைப் பரிசீலனை செய்தபொழுது ஓரிரு இனங்களைத் தவிர வேறெதிலும் குறைவு காணப்பட வில்லை. மேலும் இப்பண்டகசாலைகள் மிகவும் திறமை யுடன் நடைபெற்றதென்றும் தெரிய வந்தது. இப் பண்டகசாலைகள் மூலம் மக்களுக்கு சாமான்கள் மிக

நியாயமான விலையில் கிடைத்ததால் கிராமதானம் கிடைத்த கிராமங்களைத்தவிர மற்ற கிராமங்களி லிருந்தும் மக்கள் சாமான் வாங்க வந்திருந்தனர். ஒவ்வொரு பண்டகசாலையின் எல்லையிலும் 12-15 கிராமங்கள் இருக்கும். ஆகவே சில கிராமங்களைச் சேர்ந்த பொறுப்புள்ள நபர்கள் பண்டகசாலையிலிருந்து பொருள்கள் பெற்றுச் சென்று அந்தந்தக் கிராமத்தில் விற்று பண்டகசாலைக்கு பணம் திருப்பிக் கொடுக்கும் முறையும் நடந்துவருகிறது. இப்படி கிளைப் பண்டக சாலைகளும் வேலை செய்து வருகின்றன. மேற்கொண்டு 5-6 மத்தியப் பண்டகசாலைகள் நிறுவி அவற்றின் மூலம் நிலவியுள்ள பண்டகசாலைகளுக்குச் சாமான்கள் கிடைக் கும்படி செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடைகளில் பெரும்பாலும் ஜவுளி, உட்கொள்ளும் எண்ணெய்ப் பொருள்கள், உப்பு, மண்ணெண்ணெய், சீனி, வெல்லம், மஞ்சள், மிளகாய், தீப் பெட்டி ஆகிய பொருள்கள்தான் விற்பனை செய்யப்படுகின்றன. தேயிலை, புகையிலை ஆகிய பொருள்களும் விற்பனை செய்யப்படுகின்றன. பள்ளிக்கூடங்களுக்கருகில் இருக் கும் பண்டகசாலைகளில் பென்சில், சிலேட்டு, காகிதம் ஆகிய பொருள்களும் விற்பனை செய்யப்படுகின்றன. கிராமங்கள் தவிர்க்க வேண்டிய பல பொருள்களும் இதில் அடங்கியுள்ளன. ஜவுளி, எண்ணெய் போன்ற பல பொருள்களை கிராமங்களில் உற்பத்தி செய்ய முடியும். இவைகள் மூலம் கிராமத்தின் பொருள் எவ்வளவு வெளியே செல்கின்றது என்று அவர்களுக்குத் தெரியாது. பண்டகசாலையின் கணக்குகள் மூலம் இவ்விஷயங்களை அவர்கள் நன்கு தெரிந்து கொண்டு குடிசைத் தொழில் களை ஊக்குவிப்பார்கள்.

கிராமத்தின் ஏற்றுமதிப் பொறுப்பும் பண்டக சாலைக்கேதான். விவசாயியிடம் உபரியாக இருக்கும் தானியங்களை பண்டகசாலையில் வைத்துவிட்டு அதன்

விலையில் பாதியை முன்பணமாகப் பெற்றுக்கொள்ள லாம். அப்படி பண்டகசாலையில் வைக்கப்பட்டுள்ள தானியத்துக்கு விவசாயியே பொறுப்பாளி. நியாயமான விலை கிடைத்தவுடன் தானியத்தை விற்பனை செய்து பண்டகசாலையிலிருந்து பெற்றுக் கொண்ட முன்பணத் தொகையைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். மேற் கொண்டு இப்பண்டகசாலைகளை நன்கு அபிவிருத்தி செய்து லட்சக்கணக்கில் ரூபாய்கள் மீதமாக்கலாம் என்றும், கிராமத்தில் ஒரு தானியச் சேமிப்பு ஏற்படுத்தலாமென்றும் தெரிகிறது.

இவ்வாறு கிராம மக்கள் தங்கள் தானியங்களை கிராமங்களிலேயே வைத்துக் கொள்ள முன்வருவார் களாயின் வட்டிக் கடைக்காரர்களிடமிருந்து எளிதில் தப்பமுடியும். அவசியம் ஏற்படும்பொழுது வட்டியின்றி அதிலிருந்து அவர்கள் கடன் பெறவும் வசதியுண்டு.

கடன் குறைவாக வாங்குவதுதான் வட்டிக்கடைக் காரர்களிடமிருந்து தப்புவதற்குள்ள ஒரேவழி. மதுப் பழக்கம், திருமணம், சிராத்தம் போன்ற விஷயங்களில் வீண் செலவு செய்தல் ஆகிய காரணங்களால் கடன் அதிகமாகக் கூடும். அதிர்ஷ்ட வசமாக கோராபுட் ஜில்லாவில் லாகிரி பதார்த்தங்களை ஒழிக்கும் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உற்சவங்கள், திருவிழாக்கள் ஆகியவற்றில் செலவு அதிகரிக்காமலிருக்க விநோபாஜி ஒரு மார்க்கம் கூறியிருக்கிறார். அதாவது திருமணத்தை ஒரு வீட்டின் பொறுப்பாக வைத்துக் கொள்ளாமல் அதில் கிராமத்திலுள்ள எல்லா வீட்டினருக்கும் பங்குண்டாக்கி சமூகத் திருமணமாக நடைபெற வேண்டும். ஆகிலி என்ற கிராமத்தில் மூன்று பையன்களுக்கு இம்முறை யிலேயே திருமணம் நடைபெற்றது. நூற்றுக் கணக் கான கிராமங்கள் ஒரு சமுதாய முறையை ஏற்றுக் கொண்டபின் பழக்க வழக்கங்களில் இப்படிப்பட்ட சிறு மாறுதல்களை எளிதாகச் செய்ய முடியும்.

ஜனங்களின் பழைய கடன்களி—(பெரும்பாலும் பொய்க் கடன்கள்)—லிருந்து விடுதலை பெற சமுதாய உடன்படிக்கை உண்டாக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. கடன் பெற்றுக் கொள்பவன் தனியாக வட்டிக் கடைக் காரனிடம் பேசமாட்டான், கிராமசபை மூலமாகத்தான் பேசுவான். கடன் வாங்கப்பட்டதன் சரித்திரத்தை கிராம சபை நன்கு பரிசீலனை செய்யும். தேவை யளவுக்கு பணம் திருப்பிக் கொடுக்கப்பட்டிருந்தால் பின்புள்ள பொய்க் கடனைத் தள்ளிவிடும்படி கிராமசபை வட்டிக் கடைக்காரனுக்கு வேண்டுகோள் விடுக்கும். மேற்கொண்டு கொடுக்கவேண்டிய தொகையிருந்தால் அதற்கு மாதம் கொடுக்க வேண்டிய தொகை நிர்ணயிக் கப்படும். இவ்வழியில் இதுவரையில் எவ்வித முயற்சி யும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஆனால் சில கிராமங் களில் மக்கள் கடன் கட்டாமல் நிறுத்தி வைத்துள்ளனர். அடிக்கடி வட்டிக்காரர்கள் மக்களைப் பயமுறுத்தி கொள்ளை யடித்துக்கொண்டு போகும் தானியத்தை எல்லாம் வட்டியாக மட்டுந்தான் கணக்கிடுகின்றனர். பந்திகள் கிராமத்தில் இவ்விதம் வட்டிக்கடைக்காரர்கள் மக்களை பயமுறுத்தி அவர்கள் பயிர் செய்த மஞ்சள் அனைத்தை யும் பிடுங்கிக்கொண்டு போக முயற்சிக்கையில் தொண்டர்கள் தலையிட்டதின் விளைவாக அது தடுக்கப் பட்டது. இப்படிக்காப்பாற்றப்பட்ட மஞ்சளின் விலை ரூ. 6000 என மதிப்பிடப்படுகிறது. அது கொள்ளை யடிக்கப்படவிருந்தது. கிராமதானம் கிடைத்த கிராமங் களில் இருக்கும் சில வட்டிக் கடைக்காரர்கள் கடன்கள் சிலவற்றை தள்ளி விட்டனர். மான்பூரில் ஒருவர் கடனை மன்னித்து அதற்கென அடகு வைக்கப்பட்ட நிலத்தை அதன் உரியோனுக்குத் திருப்பிக் கொடுத்துவிட்டார். கோராபுட் ஜில்லாவைச் சேர்ந்த வட்டிக் கடைக்காரர்கள் நிலப் பங்கீட்டின் பொழுது ரூ. 1,276 பெறுமானமுள்ள கடன்களைத் தள்ளி விட்டனர்.

XIII
கதரும் கிராமக் கைத்தொழில்களும்

கதரும் கிராமக் கைத்தொழில்களும் இல்லையென்றால் உண்மையான கிராம ராஜ்யம் அமைப்பதும் சுரண்டலை முற்றிலும் ஒழிப்பதும் முடியாமற் போய்விடும். ஆகவே கதர்–கிராமக் கைத்தொழில்களும், பூமிதானமும் 'சீதாராம்' என்பது போல் பிரிக்கக் கூடாத வகையில் பிணைக்கப்பட்டுள்ளன என்று நம்புகிறார் விநோபாஜி. கிராமதானம் கிடைக்குமிடங்களிலெல்லாம் இயற்கையாகவே இதற்கு அனுகூலமான சூழ்நிலை ஏற்பட்டுவிடுகிறது. மங்கரோட்டில் இப்பொழுது ஒவ்வொரு வீட்டிலும் ராட்டைகள் சுழல்கின்றன. மற்றெல்லாக் கிராமங்களிலும் இப்படி நடக்கக் காரணமில்லை. கதர்–கிராமக் கைத்தொழில்களும், நிலமும் ஒன்றுகூடி மக்கள் மனதில் எவ்வளவு புரட்சிகரமான மாறுதல்களை உண்டுபண்ணுகின்றன என்பதற்கு மங்கரோட் மறுக்க முடியாததோர் சாட்சி. இங்குள்ள புராதன தொழில்கள் நாசமடைந்து அங்குமிங்குமாகச் சிறிய அளவில்தான் நடைபெறுகின்றன என்று முன்பு கூறப்பட்டுள்ளது. கிராமத்தில் பெரும்பாலும் விவசாயிகள் நிலத்தின் விளைச்சலை மட்டும் ஆதாரமாக்கி, வாழ்வதற்கு வழியில்லாமலிருக்கின்றனர். இந்நிலையில் நிலமில்லாதோர் கதி என்ன என்று சொல்ல வேண்டியதில்லை. ஆகவே மங்கரோட்டின் வேலைத்திறன் படைத்த மக்கள் வேலைதேடி கல்கத்தா போன்ற பெரிய நகரங்களை அடைந்தனர். பட்டணங்களின் மிகக் கீழ்த்தரமான நாகரிகத்துடன் பழகி அவர்கள் கிராமத்திற்குத் திரும்பும்பொழுது அக் கெட்ட பழக்கங்கள் கிராமங்களை எவ்வாறு பாதித்திருக்க வேண்டும், கிராம மக்களின் குடும்ப வாழ்க்கை எவ்வளவு தூரம் சிதைக்கப்பட்டிருக்க வேண்டுமென்பதை நாமே கற்பனை செய்து கொள்ளலாம்.

மங்கரோட்டில் கிராமதானத்திற்குப் பிறகு படிப்படியாக கதரும் கிராமக் கைத்தொழில்களும் உயிர்பெற்றன. ஒவ்வொரு வீட்டிலும் ராட்டைகள் சுழன்றன; தறிகள் நிறுவப்பட்டன. ஏறக்குறைய அழிந்துபோன 'தோல் சாயமிடும்' தொழில் மீண்டும் உயிர் பெற்றெழுந்தது. செருப்புத் தயாரித்தலும் ஆரம்பிக்கப்பட்டது. மூங்கில் கூடைகள் பின்னும் தொழிலும் உயிர் பெற்றது. ஊரில் ஏரி கட்டப்பட்டதால் நிலத்திற்கு வருஷத்தில் பன்னிரண்டு மாதங்களும் பாசன வசதி ஏற்பட்டது. கிராமத்தில் எல்லோருக்கும் தொழில் கிடைக்க ஆரம்பித்தவுடன் வேலை தேடி கல்கத்தா செல்லும் பழக்கம் நின்று விட்டது.

"நிலத்தின்மீது உறுதியான உரிமை கிடைத்ததனுல்தான் கிராமக் கைத்தொழில்கள் பரவ ஏதுவாயிற்று; கிராமக் கைத்தொழில்கள் மூலமாகத்தான் நிலத்திற்கு உயிர் வந்தது,"—இவ்வுண்மையை நாம் இங்கு கண்கூடாகக் காண்கிறோம்.

ஒரிஸ்ஸாவிலும் கதர்–கிராமக் கைத்தொழில்கள் பரவுவதற்கு அனுகூலமான சூழ்நிலை பலவிடங்களில் இருக்கிறது. இங்குள்ள மக்கள் மெல்லிய நூல் நூற்கும் திறமை படைத்தவர்கள் எனப் புகழ்பெற்றவர்கள். பலவிடங்களில் முன்காலத்திலிருந்து நடைபெற்று வரும் கதர் வேலை இன்னும் அழியவில்லை. கோராபுட் ஜில்லாவில் இம்மாதிரி ஒரு கேந்திரத்தில் ஸ்ரீ விசுவநாத் பாய் ஆயிரம் சுயதேவைப் பூர்த்தி ராட்டைகள் நடத்தி வந்தார். குஜேந்திரி கிராமத்தில் சுற்றுப் பிரயாணம் செய்கையில் ஒரு வீட்டில் பதினொரு வயதுப் பையன் ஒருவன் நெசவு செய்வதையும் (அவன் நெய்யும் விதத்தை "தண்ணீரில் மீன் எவ்வளவு சுலபமாக நீந்தி விளையாடுகிறதோ அதுபோல" என்று வர்ணித்திருக்கிறார் விநோபாஜி) அவனுடைய எட்டு வயதுத் தங்கை அவனுக்கு தார் சுற்றிக் கொடுப்பதையும் கண்டு

மட்டற்ற மகிழ்ச்சியடைந்தார் விஞேபாஜி. இவ்வுதா ரணத்தை கணக்கற்ற பிரார்த்தனைக் கூட்டங்களில் கூறி யிருக்கிருர் ; எல்லோரும் கதர்த் தொழிலை மேற்கொள்ள வேண்டுமென்று வேண்டுதலும் விடுத்துள்ளார்.

கோராபுட், கஞ்சம் ஜில்லாக்களில் வாழும் ஆதி வாசி மக்கள் மிகவும் குறைவாகத்தான் ஆடை உடுத்து கின்றனர். இதற்கு இரு காரணங்கள் உள. முதல் காரணம் அதிக ஆடைகள் அணியத் தூண்டும் அர்த்த மற்ற நாகரிகம் அவர்களை இன்னும் அடையவில்லை. இரண்டாவது காரணம் ஏழைமை. எளிய வாழ்விற்குத் தேவையான கந்தல் உடைகள்கூட கிடைக்காத நிலையி லிருக்கின்றனர் அவர்கள். போர்த்திக்கொள்ளுமளவுக் குத் துணி கிடைக்காத காரணத்தால் குளிர்காலங்களில் உறங்கும் பொழுது குடிசையினுள் தீமூட்டி உடலைச் சூடேற்றி உறங்குகின்றனர். இரண்டாயிரம், மூவா யிரம் அடி உயரத்தில் உள்ள கடும் குளிரில் குழந்தை களுக்கு இரவில் தூக்கம் வருவதில்லை. இரவு முழுதும் உடல் வேதனையில் புரண்டு புரண்டு படுத்துக்கொண்டே இருப்பது வழக்கம். இது இதயத்தைத் தொடும் காட்சி.

இந்நிலையில் அவர்களுக்கு உஷ்ணம் கொடுக்கும் சக்தி கதருக்குத்தான் உள்ளது. நூல் நூற்கும் குடும் பங்களுக்கு உடனடியாக வேண்டிய அளவு துணி கிடைத்துவிடும். அவர்கள் மற்றவர்களைவிட சுத்தமாக வும், அதிகமாகவும் ஆடை அணிகின்றனர். குஜேந்திரி தெருக்கள் வழி நடக்கையில் நேரில் கண்டறியும் உண்மை இது. பரவலாக மக்களெல்லோருக்கும் தொழில் கொடுக்கும் ஒரு தொழில் இதைத்தவிர வேறெதுவும் இல்லை.

அம்பர் ராட்டை ஆராய்ச்சியிலிருந்தபொழுது ஒரு ஆராய்ச்சி நிலையம் மான்பூரிலும் ஆரம்பிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. அதற்கென ராட்டை

களுடன் பயிற்சி யளிப்போரும் வந்து சேர்ந்தனர். விநோபாஜி வந்த பின்பு கோராபுட் ஜில்லாவில் அம்பர் ராட்டையை பரவலாகப் பரப்புவதென்று முடிவு செய்து அதற்கென குஜேந்திரியில் ஒரு பயிற்சியளிக்கும் நிலையம் நிறுவப்பட்டது. அங்கு தொண்டர்களின் இரண்டு குழுக்களுக்கு பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் சில கிராமவாசிகளும் வெற்றியுடன் ராட்டையை இயக்குகின்றனர்.

1955 ஏப்ரல் முடிவிற்குள் இப்பிரதேசங்களில் 6000 கிசான், கொம்பு ராட்டைகளும், 600 அம்பர் ராட்டைகளும், 600 தறிகளும் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. கஸ்தூரிபா நிதியைச் சேர்ந்த பெண் தொண்டர்கள் தங்கள் கேந்திரங்களில் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் ராட்டையிலும், தக்ளியிலும் நூல் நூற்கக் கற்றுக் கொடுக்கின்றனர்.

பருத்திச் சாகுபடி செய்வதில் மக்களுக்கு மிகுந்த ஆர்வம் பிறந்துள்ளது. அடுத்த மாரி காலத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் பரீட்சார்த்தமாக சிறிது நிலத்தில் பருத்தி பயிர் செய்ய உத்தேசமுள்ளது. சுமார் 400 ஏக்கர்களுக்குத் தேவையான விதை தயார் செய்து வைக்கப்பட்டுள்ளது.

முதல் வருஷம் ஆறு நெருங்கிய தொழிற் புலங்களில் செக்குகள், கயிறு செய்தல், மண் பாத்திரம் உற்பத்தி செய்தல், கொல்லுப்பட்டரைகள், மூங்கில்வேலை, பனை வெல்லம் தயாரித்தல் போன்ற வேலைகள் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. கூடிய சீக்கிரத்தில் தோல் சாயமிடவும், சோப்பு தயாரிக்கவும் கேந்திரங்கள் நிறுவ ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தோல் வேலைக்கு ஒரு தொண்டர் நியமனம் செய்யப்பட்டு கச்சா தோல் வாங்கும் ஸ்தலம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. கச்சாத் தோல் வாங்கி நால்வாடியில் உள்ள தொழிற்சாலைக்கும், ஒரிஸ்ஸாவின் டிடலசார் என்னுமிடத்திலுள்ள சர்க்கார்

தோல் தொழிற்சாலைக்கும் பதனிடுவதற்காக அனுப்பப் படுகிறது. பாலேஸ்வர் பகுதியில் தோல் வேலை வளர்ச்சி பெற நல்ல சாத்தியக் கூறுகள் உள்ளன. அங்கு கிராம தானம் கிடைத்துள்ள கிராமங்களில் மட்டும் தோல் உரிக்கும் தொழில் செய்யும் முன்னூற்றைம்பது குடும்பங்கள் உள்ளன. கூட்டுறவுச் சங்கமமைத்து இவர்கள் தொழிலை மேலும் விருத்தி செய்ய திட்டமிடப் பட்டுள்ளது. இதற்காக சர்க்காரிடமிருந்து ரூ. 21,000 மான்யமும், அதே அளவு தொகை கடனும் கிடைத் துள்ளது.

தேனீ வளர்த்தல் தொழில் கற்றுக் கொடுக்க இரு தொண்டர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இதற்கு மாகாணம் முழுதும் நல்ல வரவேற்பு இருக்கிறது.

கதர்–கிராமக் கைத்தொழில்களுக்குத் தேவையான உபகரணங்கள் கிடைக்கச் செய்வதற்கு ராய்கடில் ஒரு உபகரண நிலையம் நிறுவப்பட்டுள்ளது. இங்கு தக்ளி முதல் அம்பர் ராட்டை, தறி வரையில் எல்லா உபகரணங்களும் உற்பத்தி செய்யப்படும். இங்கு ஒரு வருடத்தில் 5,000 ராட்டைகள், 100 செக்குகள், 1000 தேனீ வளர்ப்புப் பெட்டிகள், 500 கலப்பைகள் ஆகிய உபகரணங்கள் நிர்மாணிக்கப்படும். இதன் மூலம் கிராம மக்களுக்கு தச்சு வேலை, இரும்பு வேலை ஆகிய தொழில் கள் கற்றுக் கொடுக்கப்பட்டு கிராமக் கைத்தொழில்களுக் குத் தேவையான எல்லாப் பொருள்களும் கிராமத்தி லேயே தயாரிக்க ஏற்பாடு செய்யப்படும்.

இவ்வேலைகளனைத்தும் கதர்-கிராமக் கைத்தொழில் போர்டின் உதவி பெற்று நடைபெறும். இதற்கான ஒவ் வொரு தொழில் அடர் புலத்திலும் போர்டின் சார்பாக ஒரு கௌரவ ஊழியரும், ஏனைய ஊழியர்களும் பணி யாற்றுவர்.

XIV

கல்வி

தேசப் புனருத்தாரண வேலையில் கல்விக்கு முதலிடம் அளிக்க வேண்டும். பாபுஜி தயாரித்த நிர்மாண வேலைத் திட்டங்களில் கல்வி கடைசியாகத்தான் தோன்றியதெனினும் அதற்கு மேன்மையான ஸ்தானம் அளிக்கப்பட்டிருந்தது. கிராமதானம் கிடைத்த பின்பு ஆதாரக்கல்வி (நயீதாலீம்) பரப்பும் வழி சுலபமாகி விடுகிறது. மங்கரோட்டில் அது திட்டப்படி உருவாகிக் கொண்டிருக்கிறது.

ஒரிஸ்ஸாவில் பல ஜில்லாக்களில் கல்வி நன்கு பரப்பப்படவில்லை. அங்கு எழுத்தறிவுள்ளோர் தொகை 5 சதம்தான். கல்வி விஷயத்தில் முற்றிலும் சூனியமான சூழ்நிலைதான் நம்முன் இருந்தது என்பது நல்ல விஷயம்தான். இந்தச் சூழ்நிலையைக் கூர்ந்து கவனித்துத்தான் 'ஒரு மணிப் பள்ளிக்கூடத்' திட்டத்தை இங்கு வெளியிட்டார் விநோபாஜி. அவர் குறிப்பிட்டார்—"நூற்றுக்கணக்கான கிராமங்களில் கல்வி வசதி செய்யப்படவில்லை; அவ்வசதியுள்ள இடங்களில் ஏழைக் குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதில்லை. அவர்கள் தங்கள் தாய்-தந்தையரின் வேலைகளில் உதவி செய்யச் சென்று விடுகின்றனர். இவற்றையெல்லாம் கவனித்து, எல்லாக் கிராமங்களிலும் ஒரு மணி நேரப் பள்ளிகள் நடைபெற வேண்டும் என முடிவு செய்துள்ளேன். அப்பள்ளிகளுக்கு ஏழைக் குழந்தைகள் தங்கள் வேலைகளைச் செய்து கொண்டே வரமுடியும், உற்சாகத்துடனும் வருவார்கள். இதனால் கல்வியில் குறை ஏதும் ஏற்படாது. தற்பொழுது நான்கைந்து மணி பள்ளியில் படிக்கும் குழந்தைகள் அதில் முழு கவனமும் செலுத்துவதில்லை. கல்வி தூக்கம்போல ஆகிவிடுகிறது. நல்ல தூக்கம் ஒரு மணி நேரம் கிடைத்தால்கூட போதும். அதுபோல

நல்ல கல்வி ஒருமணி நேரம் கிடைத்தாலே போதும். நான்கைந்து மணிநேர வேலை இரண்டேமணி நேரத்தில் முடிந்துவிடும். மேலும் தற்காலப் பள்ளிக்கூடங்களில் வருஷத்தில் ஆறு மாதம் விடுமுறை. இவ்விடுமுறை களை ஒழித்துவிட்டு வருஷம் முழுதும் ஒருமணி நேரம் கல்வி கற்றால் அறிவு ஒன்றும் குறைந்துவிடாது......

"கிராமத்தில் ஒருவர் உபாத்தியாயர் வேலையை மேற்கொள்ளுவார். காலையில் ஒரு மணி நேரம் சிறுவர் களுக்கும் மாலையில் ஒரு மணி நேரம் வயோதிகர்களுக் கும் கல்வி புகட்டுவார். மற்ற நேரங்களில் தம் தொழிலைச் செய்வார். வருஷ முடிவில் கிராம மக்கள் அன்பு கூர்ந்து ஆசிரியருக்கு தட்சிணையாக தானியம் கொடுப்பர்."

வெறும் குழந்தைகள் கல்வியோடு நின்றுவிடாமல் பல்கலைக் கழகம் வரையுள்ள கல்வி கற்றுக் கொடுக்க ஏற் பாடு கிராமத்திலேயே செய்யலாம். சமக்ர உலகத்தின் ஒரு சிறு மாதிரியே கிராமம். ஆகவே அங்கு பல்கலைக் கழகம் கல்வி புகட்டுவது அவசியம் என்று விரும்புகிறார் விநோபாஜி. இதற்கு முன்காலங்களிலிருந்ததுபோல் சந்நியாசி முறையை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும். கல்வி கற்பிக்கும் சந்நியாசி ஒவ்வொரு கிரா மத்திலும் இரண்டு மூன்று மாதங்கள் தங்கி அங்குள்ள மக்களுக்குக் கல்வி புகட்டுவார். இவர்கள் "நடமாடும் பல்கலைக் கழகங்கள்."

பிற்பட்ட பகுதிகளில் சுற்றுப் பிரயாணம் செய் யும்பொழுது கல்வியின் அவசியத்தைப் பற்றி விநோ பாஜி மக்களுக்கு எடுத்துக் கூறினார். அதன் பயனாக மக்களுக்கு இவ்விஷயத்தில் விசேஷ கவனம் ஏற்பட்டு தங்கள் சார்பாக ஆசிரியர்களை அமர்த்த, பல கிராமங் களில் முதியோர் கல்விக்காக இரவுப் பள்ளிக்கூடங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கஸ்தூரிபா நிதியைச் சேர்ந்த சகோதரிகளும் பலவிடங்களில் சிறுவர் பள்ளிகள் ஆரம்

பித்துள்ளனர். ஆனால் நிர்மாணத் திட்டங்களில் கல்வியை மட்டும் இரண்டு வருஷங்களுக்கு மேற் கொள்ள வேண்டாமென வேறு வழியின்றி முடிவு செய் யப்பட்டது. முதல் முதலாக சுரண்டலை ஒழிக்கும் வேலைதான் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மக்களுக்கு இரண்டு வேளை வயிறார உணவும், நாணம் மறைய உடையும் கிடைக்கும்படி செய்தால் கல்விப் பிரச்னையை அடுத்தபடியாகத் தீர்த்துவிடுவதற்குத் தகுதியான சூழ் நிலை ஏற்பட்டுவிடும்.

கல்வித் திட்டத்தை தற்போதைக்கு எடுத்துக் கொள்ளாம லிருப்பதிலிருந்து அதில் அலட்சியமாக இருப்பதாகக் கொள்ளக் கூடாது. முதியோர் கல்விக்கு முதலிடம் அளித்து பல கிராமங்களில் இராப்பள்ளிக் கூடங்கள் நிறுவப்பட்டுள்ளன. கிராம சபைகள் நடத்துவது, கூட்டுறவுப் பண்டகசாலைகள் நிர்வகிப்பது போன்ற வேலைகளிலிருந்து மக்களுக்கு 'மக்களாட்சி' குறித்து நல்ல அறிவு ஏற்பட வழியாகிறது. கதர், கிராமக் கைத்தொழில் போன்ற திட்டங்களும் கல்வித் திட்டங்களே. அணைகள் கட்டுதல், ரஸ்தா நிர்மாணித் தல் போன்ற வேலைகளும் கல்வித் திட்டங்களாகவே கருதப்பட வேண்டுமென அண்ணுசாகேப் விரும்புகிறார். சர்க்கார் உத்தியோகஸ்தர்களான கண்டிராக்டர்கள் ஸ்தல மக்களை கூலி வேலைகளுக்கு அமர்த்திக் கொள்ளாமல் அருகிலுள்ள ஆந்திர மாகாணத்திலிருந்து ஆட்களைக் கொண்டுவந்து வேலைகள் நடத்துவது வழக்கம். இதன் காரணமாக மண்ணில் வேலை செய்வோர் நிலையும் மிகக் கேவலமாகத்தான் இருந்தது. ஆதிவாசி மக்கள் கூலி வேலை சரியாகச் செய்யமாட்டார்கள் என்பது அவர்கள் எண்ணம். அவர்களைக்கொண்டு குறிப்பிட்ட கால வரைக்குள் வேலைகளை முடிப்பது மிக சிரமம் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

ஆனால் கிராமதானம் கிடைத்த கிராமங்களில்

அணைகள், குளங்கள், சாலைகள் நிர்மாணிப்பதுபோன்ற சகல திட்டங்களும் கிராமவாசிகள் மூலமாகவே செயல்படும். அதில் கண்டிராக்டர்களுக்கு எவ்வித இடமும் இராது. இவ்வேலைகள் நடைபெற 'பூமி சேவாதளம்' என்ற பெயரில் ஒரு பூமி சேவைக் குழு அமைக்கும் திட்டம் இருக்கிறது. இக் குழுக்களில் நூறு அல்லது இருநூறு வாலிபர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். இவர்கள் முகாம் வாழ்க்கையை ஏற்றுக்கொண்டு கூலி வேலைகள் செய்வதுடன் வேலைகளைக் குறித்து அறிவும் பெறுவர். இவ்வாறு வேலை செய்வதனால் ஒன்றுசேர்ந்து வேலை செய்யும் மனப்பான்மையும், தலைமை வகிக்கும் பொறுப்பும் இவர்களுக்கு ஏற்பட்டு, சாலை அமைத்தல், குளம் வெட்டுதல், மனை கட்டுதல் போன்ற வேலைகள் செய்யத் தகுதியுடையோராவார்கள்.

இவ்வகையில் ஒரு முகாம் கரண்டா என்னுமிடத்தில் 1956 ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அதில் 71 ஆதிவாசி ஆண்-பெண்கள் பங்கெடுத்துக் கொண்டனர். முகாம் ஒருமாத காலம் நடைபெற்றது. முகாமில் பங்கு கொள்வதனால் இவர்கள் தினசரி வாழ்க்கையில் குறிப்பிட்ட நேரத்தில் எழுதுவது, சரியாக எட்டு மணி நேரம் வேலை செய்வது, அனுதினமும் குளித்தல், தினசரி மூன்று முறை உணவுண்ணுதல் போன்ற பழக்கங்கள் ஏற்பட்டன. சமூகப் பிரார்த்தனையிலும், சங்கீதம் போன்ற மனம் மகிழ்விக்கும் நிகழ்ச்சிகளிலும் பங்கெடுத்துக் கொண்டிருந்தனர். எல்லோரும் எழுதப்படிக்கத் தெரிந்துகொள்ள ஆசைப்பட்டனர். இவர்களுக்கு முகாம் அனுபவம் புதியதுதான்.

இம்மாதிரி முகாம்களில் பங்கெடுக்கின்ற கிராமவாசிகள் பயிர்த்தொழில் இல்லாத மாதங்களில் 5, 6 மாதங்கள் மண் வேலை செய்து முகாம் முடிந்த பின்பு வீடு திரும்புகையில் அவர்கள் வாழ்க்கைச் செலவு போக ரூ. 50, 60 மீதப்படுத்தி எடுத்துக்கொண்டு போக வாய்ப்பிருக்கும்

என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் இம்முகாம்கள் சிறிதளவு பொருளாதார நஷ்டம் அனுபவிக்க வேண்டியிருக்கும். முகாமில் பங்கெடுக்கும் ஒவ்வொருவனுக்கும் தலா ரூ. 25 வீதம் மாதச் செலவு ஏற்படும். ஆனால் அதில் ரூ. 15, 20-க்குதான் வேலை அவர்களிடமிருந்து கிடைக்கும். ஆனால் ஆதிவாசிகளை பொறுப்புணர்ந்த குடிகளாக்க இவ்வுதவி அவசியம் அளிக்க வேண்டியுள்ளது. 1957 ஜுன் மாதத்திற்குள் 1000 பூமி சேவகர்களைத் தயார் செய்வதென்றும், இவர்களுள் நூறு அல்லது இருநூறு பேர்களுக்குப் பயிற்சியளித்து கிராம நிர்மாண வேலைகளின் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

முந்திய அத்தியாயங்களில் வாலிபர்களுக்கு தச்சு வேலையும், இரும்பு வேலையும் செய்யப் பயிற்சியளிக்கும் திட்டமுளது என்று கூறியுள்ளோம். இப்பொழுதிருக்கும் தொண்டர்களுக்கு எஞ்சினியரிங், விவசாயம் ஆகியவைகளில் பயிற்சியளித்து திட்டங்களுக்குத் தேவையான திறன்படைத்த தொண்டர்களைத் தயார் செய்யும் வேலையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பயிற்சிகளெல்லாம் ராய்கடாவில் அளிக்கப்படும். இவ்வாரம்பங்களெல்லாம் விருத்திபெற்று நம் லட்சியமான கிராமராஜ்யத்தின் கிராமப் பல்கலைக் கழகமாக விளங்கும். நிர்மாண வேலைகள் நடைபெற நூற்றுக் கணக்கான பயிற்சி பெற்ற தொண்டர்கள் தேவை. இன்று உயர் வகுப்பைச் சேர்ந்த எழுதப்படிக்கத் தெரிந்த வாலிபர்களைச் சேர்த்துக்கொண்டு வேலை ஆரம்பித்துள்ளோம். ஆதாரக் கல்வி கிராமத்தில் பரவுவதற்கேற்ப அக்குழந்தைகளை நிர்மாண வேலைகளுக்கு உதவி செய்யச் செய்து அவர்கள் பெறும் அறிவை வளர்க்க வழி ஏற்படும். தொழிலாளியிலிருந்து எஞ்சினியர் வரையிலும், விவசாயம் செய்யும் தொழிலாளியிலிருந்து ஆராய்ச்சி மாணவன் வரைக்கும் இங்கிருந்து கல்வி

பெற்றுச் சென்றூர், கிராமத்தின் ஏதாவது தேவையைப் பூர்த்தி செய்வதற்காக உபயோகப்படுத்தப் படுவர். ஆகவே இன்றைய கல்வி தயார்செய்யும் லட்சியமற்ற, உறுதியற்ற குடிமகனுக்குப் பதிலாக முற்றிலும் மாருன குணங்களுள்ள மக்களையேஇங்கு பார்க்க முடியும். குறிப்பிட்ட லட்சியத்தையடைய, ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் வேலை செய்யும் வாலிபனைத்தான் காண முடியும். இன்று தலைகீழாக நாம் படிக்கும் உயர் கல்வியைச் சரியாக அமைத்து சமுதாயத்திற்கு அதனுல் ஏற்பட்டுள்ள தலைவலியைப் போக்க முடியும்.

ஆதிவாசிகள் வெவ்வேறு மொழிகள் பேசுகின்றனர். ஆனுல் இதுவரையில் அவர்கள் பாஷையில் இலக்கியம் ஏதும் பிரசுரிக்கப்படவில்லை. இப்பாஷையில் சில புத்தகங்கள் ஒரியா எழுத்துக்களில் தற்பொழுது வெளியிட ஆரம்பித்துள்ளனர். ஒரியா பாஷையின் புகழ்பெற்ற எழுத்தாளர் ஸ்ரீ கோபிநாத் மகாந்தி அவர்கள் கந்த் பாஷையிலும் காதவா பாஷையிலும் தேர்ச்சி பெற்றவர். அவர் எழுதிய கந்த் பாஷையிலுள்ள பாட்டுக்கள் கொண்ட புத்தகம் பொதுமக்களிடையே பேராதரவு பெற்றுள்ளது. தவிர, தொண்டர்களுக்கும், வித்துவான்களுக்கும் உபயோகப்படும் பொருட்டு கந்த், காதவா பாஷைகளில் நம்பகமானப் புத்தகங்கள் வெளியிடப்படுகின்றன. இப்பாஷைகளில் அகராதியும், இலக்கணப் புத்தகமும் வெளியிடப்பட விருக்கின்றன.

XV

ஆரோக்கியமும் துப்புரவும்

துபாகஞ்ஜ என்ற கிராமத்தில் விநோபாஜி முகாமிட்டிருந்தார். யாத்திரைக் குழுவினர் கிராமவாசிகளின் வீட்டுத் திண்ணைகளில் தங்கினர். கிராமத் தலைவன் தன் வீட்டை விநோபாஜிக்காகக் காலிசெய்து வைத்திருந்தான். வீடுகளனைத்தும் மண்ணும் காரையும் உபயோகித்துக் கட்டப்பட்டவை. ஆனால் அவற்றின் துப்புரவும், அலங்காரமும், கலையழகும் எல்லோர் உள்ளத்தையும் கவர்ந்தன. சுவர்கள் பலவித நிறங்களுள்ள மண்ணால் பூசப்பட்டிருந்தது. தரை சிமென்ட் இட்டதுபோல் பளபளப்பாக இருந்தது. சாமான்களை எல்லாம் குறிப்பிட்ட இடங்களில் வைத்து வீட்டைச் சுத்தமாக வைத்துக்கொண்டிருந்தனர். சாந்திநிகேதன் பல்கலைக் கழகத்தின் பெயர்பெற்ற ஓவியனால்கூட இதைவிட அதிகமாகக் கலையழகு கொடுத்திருக்க முடியாது.

அன்றைய தினம் பிரார்த்தனைக் கூட்டத்தில் விநோபாஜி கூறினார்—"ஆதிவாசி வீட்டில் வசிக்கும் அனுபவம் இன்றுதான் எனக்கு முதல் தடவையாகக் கிடைத்துள்ளது. இந்த அதிர்ஷ்டம் எனக்குக் கிடைக்காமற் போயிருந்தால் என் அனுபவம் பூர்த்தியடைந்திராது. இவ்வளவு கலையுணர்ச்சியும் சுத்தமும் உள்ள மக்களிடம் நீதியும் உயர்ந்த ரகமாக இருப்பது இயற்கையே. அவர்களுடைய இம்மூன்று குணங்களுடன் கிராமதானமும் சேர்ந்துவிட்டால் அவர்கள் சமுதாயமனப்பான்மையை உண்டாக்கும் நற்குணங்கள் உடையோராவர்."

அறியாமையும் ஏழைமையும் காரணமாக இவர்களிடம் பல கெட்ட பழக்கங்களும் வேரூன்றி வளர்ந்துள்ளன. கலையுணர்ச்சியும், சுத்தமும் உடைய இம்

மக்களிடம் எப்படிக் கெட்ட வழக்கங்கள் வளர்ந்தன என்பது புரியவில்லை.

தண்ணீர் இல்லாததால் குளிப்பதும், உடைகளைத் துவைப்பதும் இல்லை. ஆடைகள் குறைவாக இருப்பதும் இதற்கொரு காரணமே. புகையிலை போடும் பழக்கமும், கண்டகண்ட இடங்களில் துப்பும் பழக்கமும் இருந்து வருகின்றன. குளிர் காலங்களில் கதவுகளும் ஜன்னல்களும் மூடப்பட்ட அறைகளில் தீயிட்டு அதனருகில் உறங்கவோ உட்காரவோ செய்கின்றனர். இது அவர்கள் ஆரோக்கியத்தைப் பெரிதும் பாதிக்கும் விஷயம். மதுபானப் பழக்கமும், புகை பிடிக்கும் பழக்கமும், உண்ணும் உணவில் சத்து குறைந்திருப்பதும் ஆதிவாசிகளின் ஆரோக்கியத்தைப் பெரிதும் பாதிப்பவை.

ஆயினும் பொதுவில் மக்களின் ஆரோக்கியம் நன்றுகவே இருக்கிறது. மற்றவிடங்களுடன் ஒப்பிடுகையில் இப்பகுதியில் மலேரியா சற்று அதிகமாகவே யுள்ளது. மற்ற நோய்கள் எல்லாம் வேறு இடங்களில் உள்ளதுபோலவே இங்கும் உள்ளது. ஆதிவாசிகளிடையே அதிகமாய்த் தென்படும் நோய் (Yaules). அது சிபிலிஸ் (மேகநோய்) போலுள்ள ஒரு வியாதி. ஆனல் (Yaules) ஆண்பெண் சேர்க்கையினல் ஏற்படும் நோயல்ல. பலவிடங்களில் இது மிக அதிகமாகப் பரவியுள்ளது. இப்பகுதிகளில் அரசாங்கம் நடத்துவதும், அரசாங்க உதவிபெற்று நடப்பதுமான வைத்திய நிலையங்கள் மிகக் குறைவு.

மலைகளில், காடுகளில் பல பச்சிலை மூலிகைகள் கிடைக்கின்றன. பல்லாண்டுகளாக ஆதிவாசிகள் இம்மூலிகைகளை நோய்களுக்கு உபயோகப்படுத்தி வந்தனர். ஆனல் தற்காலத்தில் இம்மூலிகைகளில் நம்பிக்கை இழக்கப்பட்டு வருகிறது. இயற்கையில் கிடைக்கும் பச்சிலை மூலிகைகளை வைத்துக்கொண்டு தங்கள்

ஆரோக்கியத்தைப் பாதுகாக்க வேண்டுமென்று ஆதிவாசி மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார் விநோபாஜி. ஒவ்வொரு கிராமத்திலும் பச்சிலை மூலிகைகளை வளர்க்கும் ஒரு சிறிய தோட்டம் இருக்கவேண்டும். அப்பொழுது கிராம மக்களுக்குத் தேவையான மூலிகைகள் அவ்வப்பொழுது கிடைக்க் சௌகரியமாக இருக்கும். இவற்றை உபயோகிக்க அனுபவமுள்ள வைத்தியர்களும் கிராமங்களில் இருக்கவேண்டும். அத்துடன் உலகப் புகழ்பெற்ற கொயினா, டி.டி.டி. (D.D.T.) போன்ற மருந்துகளையும் தேவைக்கேற்ப உபயோகித்துக்கொள்ளலாம்.

மதுவையும், புகையிலையையும் ஒழித்து பால் குடிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுமாறு மக்களிடம் கேட்டுக் கொண்டிருக்கிறார் விநோபாஜி. கோராபுட் கஞ்சம் ஜில்லாக்களில் சட்டபூர்வமாக மதுவிலக்கை அமுல் செய்யும் யோசனை அரசாங்கத்திற்கு இருந்து வருகிறது. பாலேஸ்வரில் ஏற்கெனவே மதுவிலக்கு அமுல் நடத்தப்பட்டு வருகிறது. ஒரே மாதத்தில் ஏற்பட்ட மாறுதல்களிலிருந்து மக்கள் அரசாங்கச் சட்டத்தை எப்படி அனுசரணையுடன் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்பது விளங்குகிறது. இதற்குக் காரணம் விநோபாஜி மக்களுக்கு விடுத்த வேண்டுகோளும் தொண்டர்கள் செய்த பிரசாரமுமே யல்லாது வேறென்ன இருக்க முடியும்? வருடப் பிறப்பு உற்சவத்தின்போது ஆதிவாசிகள் அதிகமாக மதுவருந்தி கேளிக்கைகளில் ஈடுபடுவது வழக்கம். ஆனால் இவ்வருஷம் மிகவும் குறைவாக சிலர்தான் உபயோகப்படுத்தியதாகத் தகவல் கிடைத்துள்ளது. 1930-ல் சுதந்திரப் போராட்டத்தின் நல்லுணர்ச்சி மக்களிடையே பரவியதிலிருந்தே அனேகம் பேர் மதுவைத் துறந்தனர். அதைவிட மிகப் பெரியதோர் மனமாறுதல் இப்பொழுது ஏற்பட்டுக் கொண்டிருப்பதால் பூரண மதுவிலக்கு நிச்சயம் வெற்றிபெறும்.

பெனிசிலின் ஊசி போடுவதால் Yaules நோய் ஆச்சரியப்படும்படி மறைந்து விடுகிறது. இந்நோயைத் தடுக்க சர்க்கார் திட்டமிட்டுள்ளது ; ஆனுல் அத்திட்டம் அரசினரின் மற்றத் திட்டங்களைப் போலவே மெதுவாக நிறைவேற்றப்படுகிறது. நிர்மாணத் திட்டப்படி வைத்திய தொண்டர் ஒருவர் இப்பொறுப்பை ஏற்றுக்கொண்டு 4 மாதங்களில் 2936 நோயாளிகளுக்குச் சிகிச்சையளித்து 20 அல்லது 22 கிராமங்களிலிருந்து இந்நோயை அடியோடு ஒழித்துவிட்டார். பல டாக்டர்கள் சேர்ந்த ஒரு குழு ஆறு மாதம் உதவி செய்தால் இப்பிரதேசத்திலிருந்து இந்நோயை முற்றிலும் ஒழித்து விடலாம். அதற்காக வைத்தியக் கல்லூரி மாணவர்களும் சில டாக்டர்களும் சேர்ந்த ஒரு குழு ஏற்படுத்தி உதவிபெற திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

நிர்மாணத் தொண்டர்களில் குறிப்பாக சகோதரிகள் செய்த சேவையின் பயனுக கிராம மக்களிடையே துப்புரவு மனப்பான்மை வளர்ச்சியடைந்துள்ளது ; அது மேலும் வளர்ச்சியடைந்து கொண்டே செல்கிறது. கேந்திரங்களில் தட்டிக் கக்கூஸ்களும் குழிக் கக்கூஸ்களும் நிர்மாணித்து மக்களுக்கு அவற்றின் உபயோகங்களையும், சௌகரியங்களையும் எடுத்துக் கூறிப் பிரசாரம் செய்யப்படும்.

தேவையளவுக்கு சுத்தத் தண்ணீரும், புஷ்டியுள்ள ஆகாரமும், தேவைக்கேற்ற ஆடைகளும் கிடைக்கப் பெற்ருல் இயற்கையின் மடியில் தவழும் இப்பிரதேச மக்கள் ஆரோக்கியத்தில் உலகின் மற்றெந்தப் பகுதியினரையும் விடக் குறைவாக இருக்கமாட்டார்கள்.

XVI

கிராம ராஜ்யமும் அரசாங்கமும்

கிராமதானம் கிடைக்கப்பெற்ற கிராமங்களில் நிலப் பங்கீட்டின்பொழுது ஒரு 'கிராமக் குழு' அமைக்கப் பட்டு விநியோக வேலைகளும் ஏனைய புனருத்தாரண வேலைகளும் அக்குழுவின் பொறுப்பிலேயே நடத்தப்படு கிறது என முன் அத்தியாயங்களில் கூறப்பட்டது.

இக் 'கிராமக் குழுவை' நாம் வருங்காலத்தின் ஆட்சியற்ற சமுதாய அமைப்பின் மையப் புள்ளியாக வைத்துக் கொள்ளலாம். நிர்மாணமே வாழ்க்கையின் முக்கிய தத்துவம், ஆட்சியல்ல. ஆகவே புனரமைப்பு வேலைகள் துவங்கப் பெற்றவுடனே இக் குழுக்களின் பொறுப்பும் ஆரம்பித்துவிட்டது எனலாம். அமுலி லுள்ள முறைப்படி கிராமப் பஞ்சாயத்துகள் அமைக்கப் படுகின்றன என்று வைத்துக் கொள்வோம். சர்க்கார் சுமத்தும் சில பொறுப்புகளை நிர்வகிப்பதைத்தான் கிராமப் பஞ்சாயத்து துவக்கத்தில் செய்கிறது. ஆகவே முக்கியமாக கிராமப் பஞ்சாயத்துகள் சர்க்காரின் ஏஜண்டுகள்தான்; மக்கள் பிரதிநிதிகள் என்பதற்கு இரண்டாவது இடம்தான் கொடுக்கப்படுகிறது என விளங்குகிறது. இதில் பிரதிநிதிகள் சுயேச்சையாகச் செய்யும் காரியங்களும் கட்டுப்படுத்தப்படுகின்றன.

கிராமக் குழுக்களின் வருங்காலத்தைக் கற்பனை செய்து நோக்குமிடத்து, அரசாங்கத்தின் பெரும் பான்மை பொறுப்புகளையும் இவை ஏற்றுக்கொண்டு செயல்படும் என்று புலனாகிறது. சில அதிகாரங்களை விட்டுக்கொடுக்க இப்பொழுதே அரசாங்கம் தயாராக உள்ளது. ஆனால் சில பெரிய அதிகாரங்கள் பெற சண்டையிடவேண்டி வந்தாலும் வரலாம்.

கிராமத்தில் நடக்கும் பூசல்களையும், வழக்குகளையும், விசாரணை செய்து தீர்ப்புக்கூறும் பொறுப்பை இயற்கையாகவே இக்குழுக்கள் ஏற்றுக் கொள்கின்றன. கிராமத்தில் நடக்கும் சண்டைகள் கிராமத்திற்கு வெளியேயுள்ள நீதிமன்றங்களுக்கு செல்லக்கூடாது என்று கிராமவாசிகள் பெரிதும் விரும்புகின்றனர். சண்டை-வழக்குகளின் பிடியிற்சிக்கி தப்பமுடியாமல் திண்டாடினுற்கூட, நீதிமன்றங்களுக்குப் போவதில் கஷ்ட நஷ்டங்கள் பலஉள என கிராம மக்கள் தெரிந்து கொண்டுள்ளனர். நிலமுதலாளித்துவம்தான் கிராமங்களில் ஏற்படும் தொண்ணூறு சதவீத வழக்குகளுக்கு மூல காரணம். நில எஜமானத்துவம் ஒழிக்கப்பட்டால் இவ்வழக்குகள் ஏற்படக் காரணமே இல்லை.

மான்பூர் மக்கள் கிராமதானம் கொடுப்பதற்கு இரண்டு மூன்று வருஷங்கள் முன்பிருந்தே தங்கள் கிராமத்தில் நிகழும் வழக்குகளை அரசினர் நீதி மன்றம் வரை எட்டாமல் கிராமத்திலேயே பைசல் செய்து வந்தனர். இப்பொழுது மேன் மேலும் இத்துறையில் முன்னேற்றமடைந்துள்ளனர். ஏனைய இடங்களிலும் இத்தகைய அனுபவங்கள் ஏற்பட்டுள்ளன. கோராபுட், கஞ்சம் மக்கள் அதிர்ஷ்டவசமாக, கோர்ட்டுகளுக்குப் போகும் வழக்கமே ஏற்படுத்திக் கொள்ளவில்லை. பாலேஸ்வரில் நிலை சிறிது மாறியிருந்தது. ஆனால் இப்பொழுது அங்கு நடைபெறும் வழக்குகளை நீதி மன்றங்களுக்குக் கொண்டு செல்லும் வழக்கம் நின்று விட்டது.

பாரத தேசத்தில் குற்றங்கள் தொகை ஏனைய நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து குறைவே. இதற்குக் காரணம் பாரத நாட்டின் சமுதாய அமைப்புதான். பல வித்தியாசங்களும், வேறுபாடுகளும் இருப்பினும் மனிதன் நெறி தவருது நடக்க இச் சமுதாய அமைப்பு உதவுகிறது. பொருளாதார நெருக்கடியும், வேலையில்லாத் திண்டாட்டமும் கிராமத்தில் குற்றங்கள் உண்டா

வதற்கு இரு முக்கிய காரணங்களாகும். சில ஆண்டு களுக்குமுன்பு ராஜஸ்தானில் உள்ள ஒரு நிர்மாண கேந்தி ரத்தில் தனக்கு ஏற்பட்ட அனுபவத்தை சுரேஷ்ராம் பாய் அவர்கள் விளக்கினர். கிராமக் கைத்தொழில்கள் பிரசார மடையவே, ஆச்சரியப்படும்படி அங்கு குற்றங்கள் குறைந்து விட்டன. இதை அங்கு இயங்கும் போலீஸ் இலாகாவே அறிவித்துள்ளது. நிலமில்லாதோருக்கு நிலம் கொடுத்து, தொழில் வசதிகளும் கொடுத்தால் இப் பொழுது நிகழும் குற்றங்கள் கூட முற்றிலும் மறைந்து விடும் என்பதில் ஐயமில்லை.

கிராமதானம் கொடுத்த மக்கள், அங்கு போலீஸ் இலாகாவிற்கு வேலையே யில்லாதிருக்கும் வகையில் வாழ வேண்டும் என்று விநோபாஜி கேட்டுக் கொண்டுள்ளார்.

பாலேச்வர் ஜில்லாவில், பாக்காரா என்ற கிரா மத்தில் ஒரு பெரும் திருடனுக்கு மக்கள் நிலம் கொடுத் தனர். அதன் விளைவாக அவன் அக்கிராமத்தின் சிறந்த குடிமகனாக வாழ்கிறான். "அரசாங்கம் திருட னுக்கு மூன்று மாத சிறை தண்டனை விதிக்கிறது என்று வைத்துக்கொள்வோம். ஆனால் நாம் அவனுக்கு மூன்று ஏக்கர் நிலம் கொடுக்கிறோம். அதை வைத்துக் கொண்டு அவன் தன் குடும்பத்தைக் காப்பாற்றுகிறான். சில ஜனங்கள் முதலாளிகளாக இருப்பதுதான் சமு தாயத்தில் குற்றங்கள் நிகழக் காரணம் என்பது சிந்திக்க வேண்டிய விஷயம்" என்று எவ்வளவு உண்மையாகக் கூறியிருக்கிறார் விநோபாஜி!

அரசாங்கத்துடன் குடியானவன் நிலம், வரி என்ற முறைகளில் தொடர்பு கொள்கிறான். கிராமதானம் கிடைத்த கிராமங்களில் நிலமனைத்தும் கிராம சபையின் பொறுப்பில் இருக்கும் என முன் அத்தியாயத்தில் கூறியுள்ளோம். சர்க்கார் ரெவின்யூ இலாகாவில் தனித் தனியாக குடியானவன் பெயரில் தஸ்தாவேஜிகள் இரா. கிராமம் முழுவதிற்குமாக ஒரே தஸ்தாவேஜி தான்

இருக்கும். கிராமத்தில் மொத்தமாக வரி இவ்வளவு என்று நிர்ணயம் செய்து கிராம சபை செலுத்தும். இக்கருத்தைச் சரியாக உணராமல் மங்கரோட்டில் சில தவறுகள் நிகழ்ந்து விட்டன. அதன் விளைவாக சில விவசாயிகள் கைது செய்யப்பட்டனர். ஒரிஸ்ஸாவில் இது சம்பந்தமாக சட்டமியற்றும்படி அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அச்சட்டப்படி நிலத்தை கிராமப் பொதுவுடைமையாக்கி வரிகளை கிராம சபைகள் செலுத்தும் முறை அங்கீகரிக்கப்பட வேண்டும். வருங் காலத்தில் வரிகளை பொருளாகச் செலுத்தாமல் தானிய மாகச் செலுத்த அனுமதியளிக்கும்படியும் அரசாங்கத் தைக் கேட்டுக்கொள்வதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

சர்க்கார் கிராமத்திலிருந்து வரிகளை வசூலித்துச் சென்று மேல்வாரியாக கிராமத்திற்கு உதவி செய்யும் முறை இப்பொழுது நடைமுறையிலுள்ளது. ஜமீன் தாரியை ஒழித்து கிராமங்களில் நிறுவவிருக்கும் நேர் முக ஆட்சி முறையில் கூட கிராமங்களின் ஆட்சிமுறை யில் பெருத்த மாறுதல் நிகழப்போவதில்லை. ஆனால் கிராமதானம் செய்த பிறகு கிராமசபை வரிகளில் தன் பங்கைத் தன்னிடமே வைத்துக்கொண்டு சர்க்காரின் மத்திய ஆட்சிக்குத் தேவையான பொருள்மட்டும் சர்க்காருக்குச் செலுத்தும். இன்று அமுலிலிருக்கும் வரிகள் சர்க்கார் வருமானத்திற்கு ஒரு மார்க்கமாகும். மக்களின் அனுதின உபயோகப் பொருள்களான துணி, எண்ணெய், சர்க்கரை, தீப்பெட்டி போன்ற பொருள் களுக்கும், அவற்றை உற்பத்திசெய்யும் தொழிற்சாலை களுக்கும் வருமானவரி விதிப்பு மூலம் கிடைக்கும் பொருள்தான் சர்க்காருக்கு பெரிய வருவாய். இப் பொருள்களில் கிராமம் சுயதேவைப் பூர்த்தி அடைந் தால் சர்க்காரின் இவ்வரிகள் குறைந்து வருமானம் பெரிதும் குன்றிவிடும். அப்பொழுது சர்க்கார் பொரு ளுதவி பெற கிராம சபைகளையே நாடவேண்டியிருக்கும்.

ஏதாவதொரு கிராமத்தில் 75 அல்லது 80 சத வீதம் மக்கள் கிராமதானம் கொடுக்க இசைந்து மீதிப்பேர்கள் இசையவில்லையானல் அதற்கு சட்டத்தின் உதவியை நாடவேண்டியிருக்குமா? இக் கேள்விக்கு பதிலிறுக்கையில் விநோபாஜி கூறினர்—"கிராமத்தின் நிலம் யாவும் கிராமத்திற்கே சொந்தம் என்று மக்கள் எல்லோரும் ஏற்றுக்கொண்டு லட்சக்கணக்கான பேர் கிராமதானம் கொடுத்தால், நிலமனைத்தும் கிராமத்திற்கே சொந்தம் என்ற சட்டம் ஏற்பட்டுவிடும். இச்சட்டம் மக்களின் விருப்பத்திற்கேற்ப இயற்றப்படுவதால் இதை எல்லோரும் ஏற்றுக்கொள்வர். அதாவது கிராமத்தின் எண்பது சதவீதம் ஜனத்தொகை கிராமதானம் கொடுக்கிறுர்கள். 20 சதவீதம் பேர் கொடுப்பதில்லை. ஆனல் கொள்கையை ஏற்றுக்கொள்கிருர்களல்லவா? இந்நிலையில் சட்டம் இயற்றப்படும்." இப்பொழுது நடைமுறையில் இக் கேள்வி எழுந்துகொண்டிருக்கிறது. ஏதோ ஒரு கிராமத்தில் பெரும்பான்மை மக்கள் கிராமதானம் கொடுக்கின்றனர், சிலர் கொடுக்கவில்லை என்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது கிராம சபை ஏற்பட்டு நிலவிநியோகம், அமைப்பு, வரி வசூல் போன்ற பொறுப்புகள் சட்டபூர்வமாக கிராம சபைக்கு அளிக்கப்பட்டால் கிராமதானம் கொடுக்க முன்வராமலிருக்கும் சிறுபான்மையோரின் கதி என்னவாகும்? இவர்களுக்காக சர்க்கார் வேறு தஸ்தாவேஜிகள் வைத்துக்கொண்டிருக்குமா அல்லது கிராம ஒற்றுமைக்காக இயக்கத்தில் இவர்களையும் சேர பலவந்தப்படுத்துமா? சட்டம் ஏற்படுத்துவதற்காக உத்கல் பிரதேச பூமிதானக் கமிட்டியார் தயாரித்துள்ள திட்டம் இப்பிரச்னைகளுக்கு வழி காணும்.

கிராமதானம் கிடைத்த கிராமங்களில் ஒரு குடும்பத்திற்கும் மற்றென்றிற்குமிடையே நெருங்கிய உறவு அல்லது தொடர்பு ஏற்படுவது குறித்த ஒரு பிரச்சனை

யும் நம்முன் எழுகிறது. கிராமராஜ்யத்தை நிர்மாணிப்பதில் இருக்கும் பிரச்சனை இது என்றே சொல்லலாம். நடைமுறையில் ஏற்படும் அனுபவங்களையும் சாத்தியக்கூறுகளையும் ஆதாரமாக வைத்துக்கொண்டு இப் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண நம்முன் விசாலமானதொரு வாய்ப்பு இருக்கிறது. நதிகளின் தண்ணீரை உபயோகித்தல், அந்தந்த கிராமங்களில் இருக்கும் தொழில்களை அபிவிருத்தி செய்தல், மத்திய பண்டகசாலைகளை நிர்வகித்தல் போன்ற பல பிரச்சனைகள் நம்முன் வரவிருக்கின்றன. இப் பிரச்சனைகளைச் சமாளிக்க பல வட்டங்கள் சேர்ந்த ஒரு பஞ்சாயத்து ஏற்படுத்த வேண்டியிருக்கும். பரவலான செய்கை முறை, ஆட்சியிலிருந்து விடுதலை ஆகிய நோக்கங்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு வேலை செய்துகொண்டேபோனால் கூடிய சீக்கிரம் நம் கனவு நனவாவதை உணருவோம்.

XVII

புனரமைப்பு வேலைகள் பூர்த்தி அடைந்தால்...!

கிராமதானம் கிடைத்த கிராமங்களில் புனரமைப்பு வேலைகள் துவங்கிவிட்டன. அவற்றின் பூரண உருவை இப்பொழுது காண்பது இயலாத காரியம். வேலை ஆரம்பித்து வெகுநாட்களாகவில்லை; எல்லாவேலைகளும் எல்லாவிடங்களிலும் இன்னும் ஆரம்பமாகவில்லை. வருங்கால க்ஷேமநல கிராமத்தின் மாதிரிச் சித்திரமாக கஞ்சம் ஜில்லாவைச் சேர்ந்த 'ஆகிலி' என்ற இடத்தை எடுத்துக் கொள்வோம். இங்கு நிலவிநியோகம் விநோபாஜியே செய்து வைத்தார். நவஜீவன் மண்டல் என்ற ஸ்தாபனம் இங்கு ஏற்கெனவே நிர்மாண வேலைகளை ஆரம்பித்திருந்தது. ஆகவே இங்கு சிறிது அதிகமாகவே முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மலைகளுக்கிடையே இருக்கும் இக்கிராமம் இப்பகுதியிலுள்ள முக்கிய நகரமான பிரம்மபூரிலிருந்து 42 மைல் தூரத்தில் உள்ளது. கிராமத்தின் ஜனத்தொகை 151. மொத்தம் 35 குடும்பங்கள் உள்ளதில் 27 குடும்பங்கள் சவர் ஜாதியைச் சேர்ந்தவர்கள்; 7 குடும்பங்கள் பாணர் என்ற ஹரிஜன ஜாதியைச் சேர்ந்தவர்களும், ஒரு குடும்பம் குடியா ஜாதியைச் சேர்ந்தவர்களும் ஆவர். நிலமனைத்தும் சவர ஜாதியினரிடம் இருந்தது. பாணர்கள் நிலமில்லாதோர். கஞ்சம் ஜில்லாவில் பாணர்கள் நிலமில்லாதவராக இருந்தாலும் வியாபாரத்துறையில் அவர்கள் மிகவும் முன்னேற்றமடைந்துள்ளனர்; அதன் மூலம் சுரண்டவும் செய்கின்றனர். ஆகவே ஆதிவாசிகளுடன் பூசல்கள் செய்துகொண்டிருக்கின்றனர். 15–16 வருடங்களுக்கு முன்பு இதே கஞ்சம் ஏஜென்சியில் இவ்விரு தரப்பினரிடையே ஒரு பெருங்

கலகம் ஏற்பட்டது. இதையெல்லாம் கருத்தில் கொண்டு நோக்குமிடத்து ஆதிவாசிகள் பாணர்களுக்கு நிலம் கொடுக்க முன்வந்தால் அவர்கள் அடைந்துள்ள மனமாற்றம் எவ்வளவு மகத்தானது என்பது புலனுகும். இங்குள்ள ஹல்வாயி குடும்பம் நிலம் பெற்றுக்கொள்ளவில்லை. கிராமத்தின் மொத்த நிலம் 250 ஏக்கர். அதில் 30 ஏக்கர் நெல் விளையும் நஞ்சை, 137 ஏக்கர் புஞ்சை நிலம், 20 ஏக்கர் மக்கள் குடியிருக்குமிடம், 57 ஏக்கர் தரிசு நிலம்.

பங்கீடு தனிநபருக்கு ஒரு ஏக்கர் வீதம் கணக்கிடப்பட்டது. சமூக விவசாயத்துக்கு 22 ஏக்கர் ஒதுக்கப்பட்டது.

சமூக விவசாயத்தில் இதற்கு முன் வருஷம் 50 மணு நெல்லும், கடுகு, கொள்ளு, கோதுமை, கடலை, உருளைக் கிழங்கு ஆகியவையும் பயிர் செய்யப்பட்டன. கிராம மக்கள் முட்டைக்கோஸ், தக்காளி ஆகியவைகளும் பயிர்செய்ய ஆரம்பித்துள்ளனர். இது இப்பிரதேசத்தில் ஒரு நல்ல ஆரம்பத்தைக் குறிக்கிறது. பழமரங்கள் வைக்கவும் ஆரம்பித்துள்ளனர்.

இங்கு நவஜீவன் மண்டலைச் சேர்ந்த இரு சேவிகைகளும், ஒரு தொண்டரும் பணியாற்றுகின்றனர். தொண்டர் ஸ்ரீ நீணமணி அவர்கள் இயற்கை வைத்தியத்தில் பயிற்சி பெற்றவர். அவர் இங்கு ஆராய்ச்சிகளும் செய்கிருர். இங்குள்ள கிராம சபையின் காரியக்குழுவிற்கு 'மந்திரி மண்டல்' எனப் பெயர். ஸ்ரீ தர்மநாயக் என்பவர் இதன் முக்கிய அமைச்சர். இதைத்தவிர கூட்டுறவு, கதர்-கிராமக் கைத்தொழில், விவசாயம், கல்வி, விருந்தினர் ஆகிய இலாகாக்களுக்கு வெவ்வேறு மந்திரிகள் உள்ளனர். கூட்டுறவு இலாகா மந்திரி கூட்டுறவுப் பண்டகசாலையை நிர்வகிக்கிருர். இப்பண்டகசாலை அமைக்க கிராமத்திலிருந்து ரூ. 31/- வசூலிக்கப்பட்டது. ஜில்லா கூட்டுறவு நிதியிலிருந்து

ரூ. 500/- உதவி கிடைத்தது. இப்பண்டகசாலை 1955 ஜூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டு 9 மாதங்களில் இதன் மூலம் ரூ. 2,700/- பெறுமானமுள்ள சரக்குகள் விற்பனை செய்யப்பட்டன. விற்பனை செய்யும் பொருள் களில் ரூபாய்க்கு ஓரணு வீதம் லாபம் வைக்கப்பட்டதில் பண்டகசாலைக்கு ரூ. 168/- லாபம் வந்தது. சரக்கின் விலை ஏனைய கடைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் மலி வாக இருந்தது. ஆகவே அடுத்த கிராமங்களிலிருந்தும் பலர் இங்கு சரக்கு வாங்கிக் கொண்டிருந்தனர். அடிக் கடி தானியங்கள் மாற்றி பண்டங்கள் பெறும் வழக்கமும் இங்கு இருந்து வந்தது. மொத்தத்தில் 85 சதவீதம் வியாபாரம் இம்முறையில்தான் நடைபெற்றது எனக் கணக்கிடப்பட்டுள்ளது. சென்ற அக்டோபரில் இங்கு கதர் சுயதேவைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இப் பொழுது 38 கிசான் ராட்டைகள் சுற்றுகின்றன. 26 ஆண்களும் 10 பெண்களும் நூல் நூற்கின்றனர். இதைத் தவிர குழந்தைகள் சிலர் தக்ளியில் நூற்கின் றனர். மாதத்தில் சராசரி 5 சேர் நூல் நூற்கப்படு படுகிறது. அம்பர் ராட்டை ஒன்று வைக்கப்பட்டு இரண்டு நபர்கள் அதில் பயிற்சி பெற்றனர். உடனடி யாக ஒரு தறி ஆரம்பிக்கும் திட்டமும் உள்ளது. இவ் வருஷம் 5 ஏக்கர் நிலத்தில் பருத்தி சாகுபடி செய்யப் பட்டது. ஆனால் அதிக மழைகாரணமாக அது நஷ்ட மாகி விட்டது.

இக்கிராமத்தில் பள்ளிக்கூடம் இல்லை. சேவி கைகள் குழந்தைகளுக்கு கல்வி கற்றுக் கொடுக்கின்றனர். முதியோர் கல்விக்காக இரவுப்பள்ளி ஒன்று நடை பெறுகிறது. இதற்கு 20–22 வயோதிகர்களும், வாலிபர் களும் தினசரி வருகிறார்கள். ஒரு சிறிய வாசகசாலையும் நிறுவப்பட்டுள்ளது.

சர்வ சேவா சங்கத்தின் உதவியுடன் இங்கு ஒரு காந்தி இல்லம் நிர்மாணிக்கப்படுகிறது. சர்க்காரிட

கிணறு வெட்ட ரூ. 2,000-ம், குளம் வெட்ட உதவி கிடைத்தது. மக்கள் உழைப்பு ாண்டும் ரூ. 275- சர்க்கார் உதவிகொண்டும் ஸ்தாவுடன் கிராமத்தை இணைக்கும் $\frac{1}{2}$ மைல் ா ஒன்று அமைக்கப்பட்டது.

ற ஆதிவாசி கிராமங்களைப்போலவே இந்தக் ம் அழகாக அமைக்கப் பெற்றுள்ளது. கிராமத் டுகள் இரு நேரான வரிசைகளில் அமைக்கப்பட்டு யே 100 அடி அகலமுள்ள இடைவெளி விடப்பட்டுள் ளது. இடையில் பண்டகசாலை, பஞ்சாயத்து, கோயில், மனைகள் உள்ளன. கிராமதானத்திற்குப் பிறகு துப் புரவு வேலை முன்னேறியுள்ளது. கிராமத்தை அடைந்த வுடன் இடையில் இருக்கும் சாலை திருத்தியமைக்கப் பட்டு கற்களும், மாடுகளைக் கட்டும் சிறு முளைகளும் அகற்றப்பட்டு சுத்தமாக இருப்பதைப் பார்க்கலாம். விவசாயக் கருவிகள் அங்குமிங்குமாகச் சிதறிக் கிடக்க வில்லை. ஒவ்வொரு வீட்டுக்குப் பின்புறமும் குவிந்து கிடக்கும் சாணி, குப்பைகள் எல்லாம் கம்போஸ்ட் குழி யில் இடம் பெற்றுவிட்டன. கிராம மக்கள் தினமும் சிறிது நேரம் சமூகத் துப்புரவு வேலை செய்வதில் ஈடுபடு கின்றனர்.

கிராம மக்கள் பெரும்பாலும் கடன் தொல்லையுள்ள வர்களாக இருந்தனர். பஞ்சாயத்து மூலம் அவற்றிற்குத் தீர்வு காண ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும் என்று .விரும்பினர். ஆகவே. தனிப்பட்டோர் இவ் வருஷம் கடன் தீர்ப்பதில்லையென முடிவு செய்யப்பட் டுள்ளது. புதுக் கடன்கள் ஏற்படாமல் தடுப்பதற்கு திருமணம், சிராத்தம் ஆகிய நிகழ்ச்சிகள் கிராமத்தின் பொதுச் செலவில் நடத்துவதெனத் தீர்மானம் செய்யப் பட்டுள்ளது. இதன்படி ஒருசில சிராத்தங்களும், மூன்று திருமணங்களும் சிறப்பாக கிராமத்தின் பொதுச் செலவிலேயே நடைபெற்றன.

ஆகிலியில் உள்ள சவர வகுப்பினர் பா
ஒன்ருக சமுதாய வாழ்க்கை நடத்துகின்ற க
அக்கம் பக்கத்திலுள்ள கிராமதானம் கொடுக்
மக்கள் அவர்களை பகிஷ்கரிக்கின்றனர். தங்க
களை அவர்களுக்கு மணம் செய்து கொடுக்கச் க
தில்லை. ஆனல் அங்குள்ள மக்கள் இதனல்
வில்லை. இப்பொழுது இவைகள் தளர்ச்சிய
வருகின்றன.

கிராமத்திலுள்ள ஆடுமாடுகளின் மலமூத்திர
சரியான முறையில் உபயோகப்படுத்துவதற்கு ஒரு ஏற்பாடு செய்யப்பட்டது. எல்லா ஆடுமாடுகளையும் வளர்க்கும் பொறுப்பு ஒருவனிடம் விடப்பட்டது. அவன் அவற்றை ஒவ்வொரு நாளும் இடம் மாற்றி வெவ்வேறு வயல்களில் இரவு வேளைகளில் அடைத்துவைப்பான். வரிசைக் கிரமமாக ஒவ்வொரு வயலுக்கும் இவ்வுதவி கிடைக்க ஒரு வரிசைப் பட்டியல் தயாரிக்கப் பட்டுள்ளது.

குறைந்த நாட்களில் நடந்துள்ள இவ்வளவு முன்னேற்றம் மிகவும் நம்பிக்கையூட்டுவதாகும். ஆகிலி மக்களின் உற்சாகமும் உழைப்பும் எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்துள்ளது. சரியான முறைகளில் அவர்களுக்கு வழிகாட்டினுல் அம்மக்கள் முன்னேற்றத்தின் முழுநிலையை கூடிய சீக்கிரம் எட்டிவிடுவார்கள்.

மான்பூரில் ஏற்பட்ட சில விசேஷ அனுபவங்களைக் குறிப்பிடுவது உசிதமென எண்ணுகிறேன். கிராமதானத்திற்குப் பிறகு நிலப் பங்கீடு நடைபெற்றது. ஆனல் இங்கு மற்ற வேலைகள் முன்னேறவில்லை. அதற்குக் காரணம் இங்கு வேலைகள் சரியானபடி நடைபெருததே. இருந்தும் தங்கள் சொந்த முயற்சியால் இவர்கள் சிறிது முன்னேறியுள்ளனர்.

இங்கு சமுதாய சாகுபடி முறைப்படி விவசாயம்
...ப்பட்டது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் சமூக

லத்தின் ஒவ்வொரு துண்டு வீதம் பொறுப்பு
ப்பட்டது. இப்படி 1954–55 காலத்தில் இவர்
இதிலிருந்து ரூ. 1,656 பெறுமானமுள்ள நெல்
தது. இதில் மக்கள் செலவிட்ட உழைப்பு, எ
ஆகியவைகளைக் கணக்கிட்டால் ரூபாய் 1,000 இ
இந்நெல் சமுதாய நிதியாகச் சேர்க்கப்பட்டு
அடுத்த வருடம் வெள்ளம் காரணமாக பயிர்களெ
சேத முற்றன. தானியப் பஞ்சம் ஏற்பட்டது.
வமயம் மக்களுக்கு இந் நிதியிலிருந்து 60 மணு நெ
ரூ. 500-ம் வட்டியின்றி கடனுகவும் கொடுக்கப்பட்
இக் கிராமத்தில் வெளியிலிருந்து கடன் வா
பழக்கம் ஒழிந்துவிட்டது. சமுத்திரக் கரையிலிரு
21 மைல் தூரத்தில் அமைந்துள்ளது இக்கிரா
வெயில் காலத்தில் சமுத்திரத்தின் உப்பு ஜலம் உப்ப
கழிகள் வழியே கிராமத்தில் வந்து கிராம நிலங்களை
உப்புச் சத்துள்ளவையாக்குகிறது. இதிலிருந்து வயல்
களைக் காப்பாற்ற கிராம மக்கள் உழைப்பு தானம்
செய்து 2 மைல் நீளமுள்ளதும் இரண்டடி உயரமுள்ளது
மான ஒரு கட்டுத் தயார் செய்துள்ளனர். இவ்வேலையில்
கிராமத்தின் 200 ஆண்–பெண்கள் 8 நாட்கள் உழைப்பு
தானமளித்தனர்.

இங்குள்ள கூட்டுறவுப் பண்டகசாலையும்
யுதவியின்றியே இவர்கள் அமைத்தனர். இ
குடும்பம் ஒன்றுக்கு ரூ. 2 வீதம் ரூ. 240
மூலம் திரட்டி கிராமநிதியிலிருந்து ரூ. 408-
கொண்டனர். 18 மாதங்களில் பண்டகச
2,262 லாபம் கிடைத்து அதிலிருந்து
நடத்த உழைத்த தொண்டர்களுக்கு ரூ.
அளிக்கப்பட்டது.

இங்கு குடிதண்ணீருக்குக் கி
வெட்டவும் முடியாது. ஆக
குளத்தை கு

தளிப்பதையும், துவைப்பதையும் தடைசெய்து
கிராமத்தின் வயோதிகர்களும், குழந்தைகளு
ளும், பெண்களும் எவ்வளவு மனோதிடத்துடன்
விதிகளைக் குறையின்றி அமுல் நடத்துகின்
என்பது ஆச்சரியப்பட வேண்டிய விஷயம்.
பலனாக கிராமத்தில் நோய் ஒழிந்தது. இதைக்
அக்கம்பக்கத்திலுள்ள கிராம மக்கள் தங்கள்
ு குளங்களை சுத்தமாக வைத்துக் கொள்ள ஆரம்
ள்ளனர். பின்புதான் மான்பூர் மக்கள் தாங்கள்
கவும், துணி துவைக்கவும் சௌகரியமாயிருக்கும்
நட்டு ஒரு குளம் வெட்டினர்.
இவ்வாறு அவர்கள் மனதில் சமுதாயத் தொண்டு
்யும் எண்ணம் வளர்ந்துகொண்டே இருக்கிறது.

XVIII

எதிர்காலம் எப்படி?

கிராமதானத்தின் முடிவாக பிரதேசதானம் ஆரம்ப
ாகும் என்று வினோபாஜி கூறியுள்ளார். கிராமதானம்
.த்த கிராமங்களைச் சுற்றிலுமுள்ள ஏனைய கிராமங்
் அவ்விஷயத்தில் மிகுந்த ஆர்வம் வளர்ந்து வரு
ண்கிறோம். கிராமதானம் தந்த கிராமங்கள்
லத்தில் அடைந்துள்ள பெரிய முன்னேற்றம்
தை மேலும் மேலும் வளரத் தூண்டுகிறது.
காராபுட் ஜில்லாவின் மொத்த கிராமங்கள்
ட்டில் ஒரு பங்கு கிராமதானமாகக்
. எதிர்காலத்தில் இது இன்னும் வேக
யும் என்பதில் சந்தேகமில்லை. மற்ற
ணமே வளர்ச்சியடையும் என்